விலை சதம் 25

நிலைமைத் தயான் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 சித்திரைத் திங்கள் 6-ம் நாள் (18—4—1965) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 15 | இதழ் 47

மில்க்வைற் நீலசோப்
MILKWHITE SOAP
பிரகாசமாய் சலவை செய்கிறது
மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

சீன-இலங்கை வர்த்தகத்தில் நெருக்கடி

அரிசி-ரப்பர் ஒப்பந்தம் கைவிடப்படலாம்

சீன-இலங்கை ரப்பர்-அரிசி ஒப்பந்தம் விரைவில் கைவிடப்படலாமென்று கூறப்படுகிறது. இலங்கையிலிருந்து தேயிலையும் தேங்காயெண்ணெயும் வாங்குவதை சீனா ஏற்கனவே நிறுத்திவிட்டதால் விரைவில் இரு நாடுகளிடையே வர்த்தகம் அநேகமாக ஸ்தம்பித நிலைமைக்கு வந்துவிடலாமென்று வர்த்தக வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

சீன—இலங்கை பண்டமாற்று ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படலாமென்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது. இந்த வர்த்தகம் ஒப்பந்தத்தாலே சீனாவே பயன் பெறுகிறதென்றும், சீனாவுக்குக் கொடுக்கும் ரப்பரை உலக சந்தையில் அதிக விலைக்கு விற்பனவு செய்யலாமென்றும், இதர நாடுகளிலும் இப்பொழுது அரிசி பெருமளவு விற்பனைக்கும் கிடைப்பதால் உலகச் சந்தையின் விலையை அனுசரித்து குறைந்த விலையில் எந்த நாட்டிலிருந்தேனும் அரிசி வாங்கலாமென்றும் வர்த்தக வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்த நிலையில் சீனாவுடன் செய்துகொண்டுள்ள அரிசி-ரப்பர் ஒப்பந்தம் கைவிடப்படக் கூடுமென்று தெரிகிறது. அதற்கு முன்பு தேசிய அரசாங்கம் உலகச் சந்தையில் ரப்பரின் விலையை அவதானித்துக்கொள்ளுமென்றும், வேறு நாடுகளில் அரிசி விலைக்கு வாங்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஆராய்ந்து அறிந்துகொள்ளுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயத்தில், இலங்கையிலிருந்து தேங்காயெண்ணெயும், தேயிலையும் வாங்குவதைச் சீனா நிறுத்தி விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. கடந்த ஆண்டில் சீனா இலங்கையிலிருந்து ரூபா 20,829,130 பெறுமதியுள்ள எண்ணெயும் ரூ 3,642,868 பெறுமதியுள்ள தேயிலையும் வாங்கியது. இப்பொழுது இந்த வியாபாரத்தைச் சீனாவே நிறுத்திவிட்டது.

(9-ம் பக்கம் பார்க்க)

கொம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு

தமிழ் கொம்யூனிஸ்டுகள் வேறு முகாம் அமைப்பர்

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் கொம்யூனிஸ்ட் கட்சி அனுதாபிகள், தங்கள் தலைமைப் பீடத்தின் தற்போதைய நடவடிக்கைகளில் பெரும் அதிருப்தி கொண்டிருக்கின்றனராம். தமிழ்பேசும் மக்களுக்கென தனியான தொரு கொம்யூனிஸ்ட் கட்சியை நிறுவ இவர்கள் ஆலோசித்துவருவதாக கூறப்படுகிறது.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (ருஷ்ய சார்பு)யின் தற்போதைய போக்கிலே தமிழ்பேசும் கொம்யூனிஸ்டுகள் அதிருப்தி கொண்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது. கடந்த பொதுத் தேர்தலில் கூட்டரசாங்கம் அமைக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதனாலும், தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்துவிட்டமையினாலும் கொம்யூனிஸ்டுகளின் போக்கில் இம் மாற்றம் ஏற்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. (9-ம் பக்கம் பார்க்க)

மத்திய வங்கியில் சிங்களக் கெடுபிடி

தமிழ் ஊழியர்கள் எதிர்ப்பு தொடருகிறது

இலங்கை மத்திய வங்கியில் சிங்களக் கெடுபிடி வலுப்பெற்று வருவதாகத் தெரிகிறது. ஊழியர்களின் சம்பளப் பட்டியல் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தமிழ் ஊழியர்களிற் சிலர் தங்கள் சம்பளத்தைப் பெறவில்லையென்றும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மையில் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் ஒரு அதிகாரியின் முயற்சியால் மத்திய வங்கியில் சிங்களக் கெடுபிடி வலுவடைந்து வருவதாகத் தெரிகிறது. சகல சம்பளப் பட்டியல்களும் தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டதாகவும், இதனால் தமிழ் ஊழியர்கள் சிலர் தங்களின் சம்பளத்தையும் மேல் அதிக நேரப் படியையும் பெற மறுத்து விட்டார்களாம்.

சம்பளப் பட்டியல்கள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருப்பது பற்றி மத்திய வங்கி ஆளுனருக்கு தமிழ் ஊழியர்கள் முறையிட்டுள்ளார்களாம். இது பற்றி தமிழ் ஊழியர்கள் ஆளுனருக்கு கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்கள்.

'சிங்களத்தில் சம்பளப் பட்டியல்கள் தயாரித்திருப்பது தமிழ் ஊழியர்களுக்கு பெரிதும் இடர்ப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை சம்பளப்பட்டியல்கள் ஆங்கிலத்திலேயே தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது. வங்கியின் சபையும் 1966 செப்டம்பரின் பின்னரே சிங்களத்தை அமுல் நடாத்துவதாக முடிவு செய்திருக்கிறது.

"அதே நேரத்தில் எங்களிற் பலர் சிங்களத் தகைமை எதுவுமே பெறவில்லை. நாம் சிங்களத் தகைமை பெற வேண்டியதில்லை என்பதை "கோடீக்வரன் வழக்கு" முடிவு எடுத்துக் காட்டுகிறது. வங்கி அரசாங்கத்தின் பாதையையே பின்பற்றி வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை

துறைமுக அபிவிருத்தி திட்டத்தை உடனே அமுலாக்குக

தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கை அனைத்துக்கும் பொதுவாகவும், யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குச் சிறப்பாகவும் பல நன்மைகள் ஏற்படும் என்பதனாலேயே 1947-ம் ஆண்டு முதல் இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்படி கோரி வந்திருக்கிறேன். அரசியல் காரணங்களுக்காக தள்ளி வைக்கப்பட்டு வந்த இத் திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் தேசியமய சேவை அமைச்சரையும் துறைமுக ஆணைக்குழுவையும் கேட்டுள்ளார்.

திரு. செல்வநாயகத்தின் கடிதத்தில் காணப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டம் கைவிடப்பட்டமைக்கு பெரும்பாலும் அரசியல் தலையீடுகளே காரணமாகலாம். 1947—48, 1948—49 வருடங்களுக்கான வரவு செலவுத் திட்ட விவாதங்களின் போதும் இதுபற்றி நான் பிரஸ்தாபித்திருக்கிறேன்.

இந்த திட்டத்தால் சகல பூர்வாங்க ஏற்பாடுகளும் பூர்த்தியாகி கடந்த பாராளுமன்ற தவணையிலேயே வேலைகள் ஆரம்பிக்கப்பெற்றிருக்க வேண்டும். ஆனால் இது நடைமுறைக்கு வராமல் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியால் பொதுவாக இலங்கை நாட்டுக்கும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் ஏற்படக்கூடிய நன்மைகளையிட்டு நான் மட்டுமல்ல, மிகுந்து கூடுதுந்தாபனமே அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி வந்திருக்கிறது. நாட்டிற்கு ஏற்படக்கூடிய ஒரு நல்ல திட்

(9-ம் பக்கம் பார்க்க)

ஈழச்சுடர்
புத்தாண்டு மலரில்!

பேராசிரியர் குலரத்தினம்
நிறுபாண்மையினர் மொழியுரிமைகள்!
பேராசிரியர் மயில்வாகனம்
தமிழன் யார்?
கலாநிதி ஜெயசிங்கம்
யாழ்ப்பாணம் பாலைநிலமாகுமா?
கலாநிதி கணேசலிங்கம்
கைத்தொழிலியலிருந்து
டாக்டர் சிவசோதி
சரும நோய்கள்?
ஆ. கந்தையா
திருக்கேதீச்சரம்
க. குணரத்தினம்
சத்துப்பொருட்கள்

பரிசுப் போட்டி: அறிவுக்களஞ்சியம்
சிறுகதைகள்: பாலேஸ்வரி, சிவகுமாரன், வாமதேவன், சண்முகநாதன், மதுரன், கிற்று.

இன்னும் பலவம்சங்களையும் ஏந்தி ஈழநாட்டு இணையிலா இன்பத் தமிழ் ஏடாக மலர்ந்துள்ளது.

'பழைய காட்சிகளும், எண்ணங்களும் மனதில் பசுமையையும், இனிமையையும் தூவ முற்பட்டாலும், அவை வெறும் கானல் நீர் என்பதை மறக்கக் கூடாது. மனத்தை அலைக்கழிக்க அவை ஆடும் மாயச் சதிராட்டத்தில் மனதைப் பறிகொடுத்தால் வாழ்க்கையில் நோய்க்கிருமிகளின் ஆதிக்கம் மிஞ்சிவிடும்'—கணேசன் தன் இரண்டு வருட ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய போது, அதிபர் அவனுடைய 'ஒட்டோ கிராப்'பில் எழுதிய உபதேசம் இது.

இந்த 'ஞானோபதேசத்தை' அங்கீகரிக்கக் கூடிய பருவம் அல்ல அவனுக்கு! பழைய காட்சிகளும், எண்ணங்களும் இனிமை மிக்கதாக அமைந்தால், அவையே வாழ்க்கை ஏணியைப் பற்றிக் கொண்டு மேலே 'ஏறுவதற்குச் சக்தியைத் தரவல்ல பிற்றுக் கோடாக அமைந்துவிடும் என்று கருதக் கூடிய காளைப் பருவம் அவனுக்கு. இனிமை மிக்க பழைய நினைவுகளும், எதிர்காலக் கனவுகளும், நம்பிக்கைகளும், தருணங்களும் தாம் மனிதனை முழு மனிதனாக்குகின்றன என்று நம்பினான் கணேசன். இந்தப் பழைய நினைவுகளும், புதிய கனவுகளும் சரியான படி செயற்பட வேண்டுமானால், சுதந்திரப் பட்சியாக மனிதன் பறக்கவேண்டும் என்பதும் கணேசன் கொண்டிருந்த கருத்துக்களில் ஒன்று. 'மனிதனைப் பூட்டி வைப்பதற்காகச் சிறைச்சாலை கட்டுவது வெறும் தண்டச் செலவு. இந்தச் சிறைச்சாலை செய்கின்ற 'பணி'யை, அதிபர் போன்ரோரின் 'ஒட்டோ கிராப்' உபதேசங்களும், இப்பொழுது தனக்கு வாய்த்திருக்கின்ற தலைமையாசிரியர் போன்ரோரின் கண்காணிப்பும், பத்தாம் பசலிப் புத்திமதிகளும் சிறந்த முறையில் செய்து முடிக்கின்றன! மனிதனின் சுதந்திர உணர்வைப் பறிக்கின்ற சிறைக் கூடங்களைக் காட்டிலும், இத்தகைய உபதேசங்களும், கண்காணிப்பும் இன்னும் ஒருபடி மேலே சென்று மனிதனுக்கு அடிமை விலங்கைப் பூட்டுகின்றன.'

கணேசனுடைய சிந்தனை இந்த ரீதியில் விரிந்து கொண்டு சென்றதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவன் தங்கியிருந்த பாடசாலை விடுதியைச் சரியாகவோ தவறாகவோ ஒரு சிறைக் கூடமாகக் கருதி அஞ்சவேண்டிய அளவுக்குத் தலைமையாசிரியரின் கண்காணிப்பும், உபதேசங்களும் அமைந்து கொண்டு வந்தன. எடுத்ததற்கெல்லாம் அவன் மீது அவர் காட்டிய அக்கறையைக் கண்டு அவன் அஞ்சினான். இந்த அரித்தத் மற்ற அக்கறையால், தன் உள்ளத்தில் வைரம்போல் பாய்ந்திருந்த தன்னம்பிக்கை விருட்சத்தில் கேடு விழுந்து விடுமோ என்று அவன் நடுங்கினான். 'இப்படியே 'பழக்கப்பட்டு' விட்டால், நல்லது கெட்டதைக் கணிக்கும் சக்தி தன்னிடமிருந்து விடைபெற்றுவிடுமோ? என்றும்

13. பூதக்கண்ணாடி

கவலைப்பட்டான். மனிதனின் உள்ளம் கரை புரண்டு வரும் காட்டாற்று வெள்ளம் போன்றது. எதேச்சையான அதன் ஓட்டத்தில் மறிப்பைப் போட்டு விட்டால் அதன் போக்கும், அதன் குணமும் மாறி ஊரே வெள்ளத்தில் அமிழ்ந்துவிடும் உற்பாதம் நிகழ்ந்து விடும். பெருக்கெடுத்தோடும் நதியை அதன் போக்கில் விட்டுக் கொடுத்துத்தான் அதனை 'வழிப்படுத்த வேண்டும். மனிதர்களைப் பொறுத்தமட்டிலும் இந்த விதி பொருந்தும். காலவெள்ளத்தில் மிக நீண்ட தூரத்தை நீச்சலடித்து முடித்திருக்கும் தலைமையாசிரியருக்கு மட்டும் இந்த உண்மை புலப்படாது, தழும்பமுள்ள பாதரசத்தையொத்த மனித உள்ளத்தைப் பிடித்து விளையாட அவர் முற்பட்டிருப்பதை எண்ணியபோது கணேசனுக்கு அவர்பால் பச்சாதாபமே தோன்றியது.

அன்று பாடசாலையில் நடந்த அந்த அற்ப சம்பவத்தை வைத்துக் கொண்டு அளவுக்கதிகமாக அதற்கு விளக்கம்கொடுத்த தலைமையாசிரியரின் மனப்போக்கு கணேசனை என்னவோ செய்தது.

அவனைப் பொறுத்தவரையில் எது வேண்டுமானாலும் அவர் சொல்லியிருக்கலாம். பாவம், அந்தப் பேதைப் பெண் இலட்சுமியைக் கூப்பிட்டு, அவளுடைய அழகிய கண்கள் சிவக்குமட்டும் தம் உபதேச அம்புகளைப் பாய்ச்சியதுதான் அவனுக்கு மனவேதனையைக் கொடுத்தது.

அப்படித்தான் இலட்சுமி என்ன தலைபோகின்ற தவற்றையா செய்துவிட்டாள்? தன்சக ஆசிரியர் ஒருவரிடம் ஓர் அற்ப உதவியைக் கேட்டுவிட்டாள். நேரில் தன் வாய் திறந்தே அவள் அந்த உதவியைக் கேட்டிருக்கலாம். ஏதேர் மன உந்தலில், கடிதமூலமாக அந்த உதவியைக் கேட்டுவிட்டாள். அதற்காக அந்தத் தோட்டமே முழுகிவிட்டதாகத் தலைமையாசிரியர் 'தாம் தோம்' என்று குதித்திருக்க வேண்டாம். கிருஷ்ணன் மூலம் அவள் கணேசனுக்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தில் எழுதியிருந்ததெல்லாம் இவ்வளவுதான்.

'சோதர! இரண்டாம் வகுப்புக்குரிய புதுமுறைப் பாடத் திட்டம் தங்களிடமிருந்தால் தயவுசெய்து தந்துதவுங்கள்.'

கணேசனுடைய கைக்கு மாறியிருக்க வேண்டிய இந்தக் கடிதம், தலைமையாசிரியருடைய கைக்கு மாறியதால் பல மணி நேரங்களை அவருடைய உபதேசங்கள் விழுங்கும்படியாகிவிட்டது!

தலைமையில் இலட்சுமியைத் தம்முடைய தனி அறைக்கு கூப்பிட்டழைத்து அந்தக் கடிதம் சம்பந்தமாகக் குறுக்குக் கேள்விகளை அடுக்கியிருக்கின்றார் தலைமையாசிரியர். தவறுக்குச் சேர வேண்டிய கடிதம், எதிர்பாராதவகையில் தலைமையாசிரியருடைய கைக்கு மாறிவிட்டதால், இப்படி ஏதாவது நடைபெறும் என்று கண்ட கணேசன் சற்றும் தாமதியாது, நாலும் தலைமையாசிரியருடைய அறைக்குள் நுழைந்து விட்டான்.

தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்த இலட்சுமியிடம் தலைமையாசிரியர் பேசிக் கொண்டிருந்தார்.

'தங்கச்சி! என்ன இருந்தாலும், வயது வந்த பெண்ணான நீ, இப்படி எடுத்த எடுப்பிலேயே, அதுவும் அன்று தான் அறிமுகமாயிருந்த ஓர் இளைஞனிடம் உதவிகேட்டுக் கடிதம் எழுதியது தப்பு. சமூகம் இதைக் கண்டால் சும்மா இராது. நாம்பில்லா நாக்கால் ஏதேதோவெல்லாம் தூற்றும். வயது வந்த பெண்ணான உனக்கு இதையெல்லாம் நான் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.'

'அப்படியானால் எதற்காக அவளை இப்போதுமட்டும் அழைத்து இந்த 'அறிவுரை களைப் புகட்டுகின்றீர்கள்?' என்று 'சுளீர்' என்று கேட்க வேண்டும்போல் இருந்தது கணேசனுக்கு. ஆனாலும், அந்த மன உந்தலை அடக்கிக் கொண்டு அவன் சொன்னான்:

'மாஸ்டர்! என்னை மன்னிக்கவேண்டும். இரண்டாம் பேர்வழி யொருவருடன் தனிமையில் பேசிக்கொண்டிருக்கும்போது நான் இப்படி நுழைந்திருப்பது இங்கிதக் குறைவான செயல் என்பதை நான் நன்கு உணருகின்றேன். இருந்தாலும், இந்த விவகாரத்தில் நானும் சம்பந்தப்பட்டிருக்கின்றேன் என்பதை உணர்வதால், ஒதுங்குதலும், மறைதலும் வீணான சந்தேகங்களைத் தோற்றுவிக்கலாம் என்று அஞ்சி, வெளிப்படையாக இந்தச் சர்ச்சையில் கலந்து கொள்ள வந்துவிட்டேன். தயவு செய்து இந்த முடிவுக்கு வந்துவிட்டதற்காக என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்.'

'அதனால் என்ன? உங்களைக் கூட அழைப்பதற்குத்தான் இருந்தேன். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள்... நான் கூறுவதெல்லாம் என்னவென்றால், சமூகம் எந்தப் பிறத்தியார் விசயத்தையும், பூதக்கண்ணாடி கொண்டு தான் பார்க்கின்றது. நாம் சற்று ஜாக்கிரதையாக இருந்து கொண்டால், தகராறுகளுக்கே இடமில்லாது போய்விடும் என்பதுதான்.'

'மாஸ்டர்! இந்த 'டீச்சர்' அக்கா எனக்கு அனுப்பிய அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கின்றார் என்றே எனக்குத் தெரியாது. அப்படித்தான் அந்தக் கடிதத்தில் வரம்பு மீறிய சங்கதி ஏதாவது எழுதப்பட்டிருந்தாலும்கூட, அதையிட்டுச் சற்றும் அதிர்ச்சியுறாமல் ஒன்று நான் கூறுகின்றேன். தங்களுடைய கருத்தில் படிந்த பூதக்கண்ணாடி அணிந்துள்ள சமூகத்தின் கடுகுப்பார்வைக்குச் சற்றும் தெரியாதபடி, மிகச் சாமர்த்தியமாக நாம் எந்தத் தவறையும் செய்யலாம் என்பதா பொருள்?'—கண்களிலும், முகத்திலும் தெளிவு ஆட்சி புரியக் கேட்டான் கணேசன்.

'நான் அவ்விதம் கூறவில்லை. தவறே நடக்கக் கூடாது என்கின்றேன். சாதாரண நிகழ்ச்சியையும் பூதக்கண்ணாடிமூலம் நோக்கும் தன்மையுள்ள சமூகத்தின் அங்கமான நாம், என்னவும் சந்தேகத்துக்கு இடம் வராவண்ணம் நடந்துகொள்வது நலம் என்று சொல்லுகின்றேன் நான். அன்று நீங்கள், அந்த வெள்ளைக்காரத் துரையின் பங்களாவுக்குச் சென்றதை அறிந்ததும் இந்தக் கோணத்தில்தான் என் ஆட்சேபத்தையும் தெரிவித்தேன்.'

'மன்னிக்கவேண்டும் மாஸ்டர். தங்களுடைய இந்தக் கோணநோக்கினை நாம் அங்கீகரிப்பதால், ஒரு 'நிர்ப்பந்தம்' கலந்த போலி வாழ்க்கையில் மனித சமுதாயம் அமிழ்ந்துபோகும் என்று நான் அஞ்சுகின்றேன். சமுதாயத்தைக் கப்பிக்கொண்டிருக்கின்ற இந்தக் கிரகணத்தை நாம் விலக்கவேண்டுமானால், உடனடியாக, சமூகம் அணிந்திருக்கும் அந்தப் பூதக்கண்ணாடியை நாம் சுக்கல் சுக்கலாக நொறுக்கி எறியவேண்டும்! பிறரைத் திருப்திப் படுத்துவதை நிறுத்தி, நம்முள் உள்ள 'நமை' நம்பிக் கூறுமாறற்ற வேண்டும்! நமக்குப் பழக்கமாகிவிட்டபலசம்பிரதாயங்களிலிருந்து நமக்கு விடுதலை வேண்டும்! காலதேவன்மிகப் பலம்வாய்ந்தவன். இந்த மாற்றத்தை அவன் நிச்சயம் செய்வான்!' என்று கூறி முடித்தான் கணேசன்.

கணேசனுடைய இந்தப் புதுமைப்பேச்சு, தலைமையாசிரியர்முன் தலைவிழ்ந்து நின்ற இலட்சுமிக்கு ஒரு பெரியநம்பிக்கையை ஊட்டியிருக்கவேண்டும். இல்லாத பட்சத்தில், இத்தனை நேரம் அவன் வதனத்திலிருந்த 'தாழ்வுநிலை' நீங்கி, புதிய ஊட்டம் அவள் முகாரவிந்தம் முழுவதும் ஆட்கியுரிய நியாயம் இல்லை.

பாடசாலைவிட்டதும், விடுதிக்குள் வராமல், வெளியேறிய கணேசனைப்பார்த்து, 'தம்பி! இந்த மதிய வேளையில் எங்கு செல்லுகின்றீர்களா?' என்று கேட்டார் தலைமையாசிரியர்.

'மாஸ்டர்! தங்கள் அன்புக்கு மிக்க நன்றி. நான் அவசரமாக வெளியே செல்ல எனக்கென்று தனியாக ஓர் இடம் பார்க்கவேண்டும். என்னைத் தயவுசெய்து தடுக்காதீர்கள்' என்று சொல்லிவிட்டு, அவர் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வெளியேறிவிட்டான் கணேசன்.

'கொஞ்சம் நிற்கின்றீர்களா?'

குரல்வந்த திக்கில் பார்வையைச் செலுத்தினான் கணேசன். இலட்சுமி பின்னால் வந்து கொண்டிருந்தாள்!

நடையைத் தளர்த்தி 'ஏன்?' என்று கேட்டான் கணேசன்.

'நானும் உங்களுடன் வருகின்றேன்!' என்றாள் அந்தப் பொல்லாத டீச்சர் அக்கா!

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL 174 SEA STREET COLOMBO

இல. 174, "ஆனந்தா வைத்தியசாலை" என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நான் தோறும் வைஜயந்தி சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் காசி, மை, கறுக்களில் வலிகள், அதிராணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரசு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். நிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும், பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இதுடன் "ஆனந்தா வைஜயந்தி" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் பிரமாதமாகிய கேட்டால் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

நினைப்பவர்:

ஆனந்தா வைத்தியசாலை,

இல. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

மு. கருணநிதி, ஏழாலை மேற்கு

கே: பிரமச்சாரியாக இருக்கும் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு குடும்பவிசயம் தெரியாது. ஆனபடியால் அவர் எதிர்கால மானவ மானவிகளின் பிரச்சினையை தீர்த்து வைப்பார் என்று எப்படி நம்புவது?

ப: அவர் தீர்க்காவிட்டாலும், அவர் அமுலுக்குக் கொண்டுவரும் திட்டங்கள் தீர்த்து வைக்கும். அவருக்குக் குடும்பவிஷயம் தெரியாவிட்டாலும் அரசியல் விஷயம் தெரியுமே!

கே: திரு. பொன்னம்பலம் தான் கேட்கும் மந்திரிப் பதவியைத் தந்தால் மந்திரி சபையில் சேருவதாகக் கூறுகிறாராம். ஆனால் அவரது கட்சியை சேர்ந்த இரு எம்.பி.க்களும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினை தீரும் வரை மந்திரிப் பதவியைக் காங்கிரஸ் எடுக்காது என்று கூறுகிறார்களே. இதன் அர்த்தம் என்ன?

ப: உள்ளே பதவி ஆசை—வெளியே பதவியை வெறுக்கும் வீரர்கள்.

கே: வடமாகாணத்தில் இடதுசாரிக் கட்சிகள் படுதோல்வி அடைந்ததற்குக் காரணம் என்ன?

ப: வட மாகாண மக்கள் என்றுமே இடதுசாரிகளை நம்புவதில்லை.

கே: சிறிமா அரசாங்கம் இந்த முறையும் தலை தூக்கியிருந்தால்.....?

ப: 1960-ம் ஆண்டு திரும்பி வந்துவிடும்.

ஃ

ஆர். கே. திருகோணசுந்தரம், புதுவட்டக்கொட

கே: சீனா தற்போது இலங்கையைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறதாம்.

ப: குரங்கு தவறிவிட்டதென கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறதாம்.

கே: டாக்டர் எஸ். எம். பெரேரா தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: இலங்கை 13 ஆண்டுகளுக்குப் பின் நோக்கி 1952க்கு—சென்று விட்டது என்று கூறிக் கொண்டிருக்கிறாராம்.

ஃ

எஸ், எஸ். நாதன், ஏழாலை-4.

கே: சிறுபான்மை யோருக்காகப் போராடுவதாக கூறும் இடதுசாரிகள், அவர்களுக்கு சில உரிமைகள் வழங்குவதற்கு கூட இன்று எதிராக இருப்பதேன்?

ப: அதனைத் தாங்கள் செய்யாமல் பிறர் செய்கின்றனரே என்ற பொறாமை தான் காரணம்.

ஃ

தமிழ்ப்பிரியன், காரைநகர்

கே: ஒத்துழைத்து உரிமை பெற்றுத் தருவதாக கூறிய காங்கிரஸ் தற்போது மந்திரிப் பதவி பெற மறுப்பதன் மர்மம் என்ன?

ப: பெற மறுக்கவில்லை—கொடுக்க மறுத்துவிட்டனர்.

கே: தேர்தல் பந்தயக் காசுகளாக இதுவரையில் நீர் 1000 ரூபா சேர்த்துவிட்டீர் என்று என் நண்பன் சொல்லுகிறான். உண்மையா?

ப: நான் மொத்தம் 47 தேர்தல் பந்தயங்கள் பிடித்தேன். 44-ல் வெற்றி பெற்றுள்ளேன். அதில் பந்தயப் பணமாக ரூ 4117 25 எனக்குக் கிடைத்திருக்கிறது.

ஃ

ந. வயித்திலிங்கம், அளவெட்டி

கே: நான் சைவ சமயத்தைச் சேர்ந்தவன். என் காதலி கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவள். மதத்தில் ஒற்றுமையாக இருப்பதற்கு யார் மதம் மாற வேண்டும்?

ப: யாராக இருந்தாலுஞ் சரி, இருவரில் ஒருவர் மதம் மாற வேண்டும். இருவரும் மதம் மாறினால் மீண்டும் பழைய கதைதான்.

நா. பத்மகுமாரி, ஏழாலை

கே: முன்னைநாள் கற்குடா பிரதிநிதி திரு. பொ. மாணிக்கவாசகம் அவர்கட்கு இப்பகுதி மக்களால் ஒரு கார் அன்பளிப்பு செய்வதற்கு வேண்டிய ஏழுகுகள் செய்யப்படுவதாக அறிகிறேன். இதைவிட்டு உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நல்ல யோசனை. தோல்வியைக் கண்டு அவர் சும்மா இருப்பவரல்ல. தொடர்ந்து சேவை செய்ய கார் அன்பளிப்பு பெரிதும் பயன்படலாம். எம். பி. களுக்கு மட்டும் கார் அன்பளிப்புச் செய்யும் பழக்கத்தில் ஒரு சிறந்த மாற்றமும் ஏற்படும்.

ஃ

எம். மரகதம், இரக்குவானை

கே: புதிய பிரதமர் தமிழர்களுக்கு எவ்விதத்தில் உதவ யோசித்துக்கொண்டிருக்கிறார்?

ப: அவர் உலகத் தமிழர். உலகக் கண்ணோட்டத்தில் பிரச்சினைகளை ஆராயும் அகில உலகத் தலைவர். தமிழர் ஒவ்வொருவரும் உலகப் பிரசை-உலக அரசாங்கமே தமிழர்க்கு விமோசனமளிக்கும் என்ற பரந்த, விரிந்த, அகல மானகொள்கை உடையவர். எனவே அவர் அப்படித் தான் கூறுவார்!

ஃ

இ. நா. தியாகராசா, கொழும்பு-6

கே: புத்த பகவானின் புனிதக் கொள்கைகளை இன்றைய அரசியலார் மிகத் திறம்படக் கடைப்பிடிப்பார்கள். அதன் பயனாக நம் ஈழ வழ நாட்டில் எவ்வித பாகுபாடுமில்லாமல் மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திர புருடர்களாக வாழ்வார்கள் என்பது எனது சிந்தனைக்கு எட்டியது. உங்களின் கருத்து?

இனிக்குமா? சீனியை வாயில் போட்டாலல்லவா வாய் இனிக்கும்?

ஃ

ஆர். பி. கண்ணன், புதுவட்டக்கொட

கே: மறைக்கவும் மறக்கவும் முடியாதது என்ன?

ப: கடந்த பொதுத் தேர்தலின் முடிவுகள்.

கே: நேர்மை எங்கிருந்து பிறக்கிறது?

ப: நேர்மையின் மையிலிருந்து.

கே: பணம் இல்லை என்றால்?

ப: பண்டமாற்று இருக்கும்.

ஃ

கலைவளர்ச்சிக்கழகன், நற்பிட்டிமுனை

கே: கல்முனைத் தொகுதியில் ஓர் இடைத் தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கின்றோம். எமது கருத்துச் சரியா?

ப: தல்கொடபிட்டிய கமிஷன் தீர்ப்பின்படி குற்றவாளியானவர்களுக்குச் சிவில் உரிமைகள் கிடையா என்று ஒரு மசோதா பாராளுமன்றத்திற்கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டால் உங்கள் கூற்று சரியாகக் கூடும்.

ஃ

தெ. சங்காலிங்கம், களுவாஞ்சிக்குடி

கே: இலங்கையில் எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கைக்கு ஆதரவுகிடையாது என்று திருமதி சிறிமா திருகோணமலைக் கூட்டத்தில் கூறினாரே! தற்பொழுது ஐ. தே. கட்சி ஆதரித்தமைக்குக் காரணம் என்ன?

ப: ஐ. தே. கட்சியின் கொள்கைத் திட்டம் மாறியுள்ளதை அம்மையார் அறிந்து கொள்ளாது அப்படிக் கூறிவிட்டார்.

வாழ்வுண்டு!

—பாண்டித்துமிலன்—

மலருண்டு மணமுண்டு இந்த
மானிலத்தே வெகு மதிப்புமுண்டு
புலரும் பொழுதுண்டு இருளை(ப்)
போக்குங் கதிரொளி யுண்டு
சிலருக்குச் சிந்தனையுண்டு அதனால்
சிராகச் சிந்திக்கு மாற்றலுண்டு
பலருக்கு மறிவுண்டு அதனை(ப்)
பார்த்துப் பகுத்து அறியாமையுண்டு

குலமுண்டு குணமுண்டு வண்ணக்
கூர்விழி மாதருக் கழகுண்டு
அழகுக்கு மதிப்புண்டு என்றும்
ஆபத்து வந்தே தீர்வதுமுண்டு
உலகுக்குத் தெய்வமுமொன்று இந்த
ஊருக்குப் பற்பல கோயிலுமுண்டு
நிலவுண்டு தண்ணளியுண்டு கறை
நீக்கிலே ஒளிதரும் தன்மையுண்டு

நலமுண்டு நற்றமிழுண்டு நாம்
நாட்டினை யாழுந் திறனுண்டு
இனமுண்டு தமிழுண்டு பொல்லா
ஈனரை வெல்லுந் திறனுண்டு
தனமுண்டு தமிழெனு மரசுண்டு
தாரணி யாழுந் திடமுண்டு
தினமுண்டு பொழுதுண்டு எங்கள்
தீந்தமிழ் மாதுக்கு "வாழ்வுண்டு"!

ப: சற்று பொறுங்கள். அரியணை உரையில் கூறியதை முதலில் அமுலுக்கு கொண்டுவரட்டும்.

ஃ

கே. எஸ். தங்கையா, லுணுகலை

கே: தமிழர்களின் தோலை உரித்து செருப்புத்தைத்து போட வேண்டுமென்று கூறிய கே. எம். பி. ராஜரத்தினா தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்.

ப: அவர் தான் கூறியதை எல்லாம் தவறு என ஒப்புக் கொண்டு சிங்களத் தமிழ் ஒற்றுமைக்காக உழைக்கத் தொடங்கிவிட்டாராம்.

ஃ

உரிமைவீரன், அச்சுவேலி

கே: பிரதேச சபைமைத் திட்டம் பற்றிச் சிறிது விளக்குவீரா?

ப: பிராந்திய சுயாட்சிக்கு வழி வகுக்கும் இதி திட்டம், என்பது எனது கருத்து.

கே: 'தமிழ் மக்கள் ஒருகுடாவுக்குள் அடங்கி வாழ்வதை நான் சகியேன்' என்று தனிப் பெருந் தலைவர் பேசியிருக்கிறாரே, இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: உங்கள் சிந்தனைக்கு எட்டியது அழல் நடை பெறவேண்டுமே! சீனி என்று கூறிவிட்டால் வாய்

திருவாளர் குயுக்தியார்
மேயா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1185
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்களுக்கு மட்டுமே கவனதிற்கு எடுக்கப்படும்.

க. மனோகரன், அளவெட்டி வடக்கு

கே: கொழும்பின் இலங்கரத்தினா ஆகிய இருளரும் தற்பொழுது என்ன செய்கிறார்கள்?

ப: திரு. கொழும்பின் மீண்டும் ஒரு தொகுதியில் போட்டியிடத் தயாராகிக் கொண்டிருக்கிறாராம். திரு. இலங்கரத்னா முக்கிய விஷயங்களில் அம்மையாருக்கு ஆலோசனை கூறிக்கொண்டிருக்கிறாராம்.

ஃ

மா. க. சின்னத்துரை, திருக்கோவில்

கே: சென்ற முறையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களிலும் பார்க்க இம்முறை தமிழரசுக் கட்சியில் பாராளுமன்ற அங்கத்தவர் தொகை குறைவு. இது தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு குறைந்துவிட்டதை எடுத்துக் காட்டுகிறது." என்பது சிலரின் கூற்று தங்கள் கருத்து?

ப: சென்ற தேர்தலில் கட்சி மொத்தம் 215,178 வாக்குகளைப் பெற்றது இத் தேர்தலிலோ 227,916 வாக்குகளைப்பெற்றுள்ளது. இதிலிருந்து கட்சியின் செல்வாக்கு கூடியிருப்பது தெளிவாகிறதல்லவா?

ஃ

தனித் தமிழன், இளவாலை

கே: அண்மையில் வவுனியா எம். பி யாழ் இளைஞர்க்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமது தொகுதியில் வந்து, விவசாயம் செய்யும்படி! இவரேதான் 1960-ல் வவுனியாவில், 'யாழ். ஓட்டிச் சங்கத்தை உண்டாக்கினாராம்!

ப: அவர் போக்கில் இது ஒரு மாற்றம்! "பல்டிக் காங்கிரஸில்" சேர்ந்துவிட்டால் குத்துக் கரணம் அடிக்க வேண்டியதானே!

'மாய ஜோதி' ஊது பத்திகள்
"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?
★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.
நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலத்து விடும் "மாய ஜோதி"
ந. செல்லத்துரை, மாய ஜோதி இன்டஸ்ரீஸ்.
128/3, வாப்பிளேஸ், கொழும்பு—7.

எப்பட்டம் வகையில் சுத்தம் செய்கின்றன
அவற்றில் சிலிகோன்ஸ் உண்டு!
இதோ இருக்கிறது, காரைத் துப்புரவு செய்யும் கருமத்தைக் கலபமாக்கும் ஒரு கார் பொலிஷ்-இது இரு கருமங்களைச்செய்கிறது... ஒட்டோமிறைட் கலபமான ஒரே பாவனையில் துப்புரவு செய்து மினுக்குகிறது
இதோ இருக்கிறது, கண்ணாடியையும், உலோகத்தையும் சுத்தம் செய்து, மினுக்கி, கூடவே எவற்றிற்குப் பாது காப்பும் அளிக்கும் ஒரு பொலிஷ். உங்களுக்கு ஏற்ற மிகச் சிறந்த பொருள் ஈஸி-ஒவ் ஏமொனியல். உலகின் அதிபுன்னத சுத்திகரிப்பு வஸ்தான அம்மோனியா அதில் சேர்ந்திருக்கிறது.

லூயிஸ் பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
மக்கல்லம் வீதி, கொழும்பு.

● நாகநாதனும் நாய்க் குட்டியும் ● ஜீ. ஜீ. யின் ஒழுங்குப் பிரச்சினை

உறவு முறை கொண்டாடினர் கதிரவேற்பிள்ளை

மௌனியாக இருந்தார் எதிர்க் கட்சித் தலைவி

மாதேசாதிபதியின் அரியணை உரையைத் தொடர்ந்து நடைபெறும் பாராளுமன்றக் கூட்டம் நன்றி தெரிவிக்கும் பிரேரணை முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுவதுடன் ஒத்திவைக்கப்படுவது சம்பிரதாயமாகவில்லாவிடினும் வளமையாக இருந்து வந்துள்ளது. இம்முறை அரியணை உரையின் பின் கூடிய பாராளுமன்றம் இந்த வளமைக்கு மாறாக ஐந்துமணி நேரங்கள் நடைபெற்றிருக்கிறது. காலை 10.5 மணிக்குக் கூடிய பாராளுமன்றம் பிற்பகல் 5 மணிக்கேஒத்திவைக்கப்பட்டது.

கெனமனின் வகுப்புவாதம்

இந்த வளமை மீறப்பட்டமைக்கு எதிர்க் கட்சியினரே முக்கிய காரணமாகவிளங்கினர். காலை 10.5 க்குப் பாராளுமன்றம் கூடியதும்,

சி. கதிரவேற்பிள்ளை

கொழும்பு மத்திய தொகுதியின் மூன்றாவது உறுப்பினரான திரு. பீட்டர்கெனமன் பாராளுமன்ற ஆசன ஒழுங்குகள் பற்றிய பிரச்சினையைக் கிளப்பினார்.

திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், இ. மு. வி. நாகநாதன், ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோருக்கு எதிர்க்கட்சியின் முன் வரிசையில் இடம்கொடுத்ததைத் திரு. கெனமன் வன்மையாகக் கண்டித்தார். அவர் பேசுகையில் 'அரசாங்கக் கட்சியினர் இந் நாட்டை மட்டுமல்ல எதிர்க்கட்சிஆசனங்களையே தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரசுக்கும் விற்றுவிட்டார்கள்' என்று சற்று வகுப்புவாதத் தொனியில் கண்டனம் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அரியணை உரையை எதிர்க்கட்சித் தலைவிக்குக் காட்ட பிரதமர் தவறிவிட்டார் என்றும் திரு. கெனமனும், டாக்டர் பெரேராவும் குற்றம் சுமத்தினர்கள்.

இதற்குப் பிரதமர் பதில் கூறுகையில், தான் எதிர்க்கட்சித்தலைவராக இருந்தகாலத்தில் இச் சம்பிரதாயம் கைக்கொள்ளப்படவில்லையென்று கூறினார். இடையிற் புகுந்த டாக்டர் நாகநாதன் வளமையான கிண்டல் மொழிகள் மூலம் எதிர்க்கட்சியினரின்வாயை யடைத்தார்.

அரியணை உரை மீண்டும் சபாநாயகரால் சபையில் வாசிக்கப்பட்டதும், வட்டுக்கோட்டைப்பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் எழுந்து இவ்வுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு பாராளுமன்றப் பதிவேட்டில் இடம் பெறவேண்டும் என்று சபாநாயகரை வேண்டினார். தமிழாக்கம் பதிவேட்டில் இடம்பெறும் என்று சபாநாயகர் உறுதிமொழி பகின்றார்.

கோப்பாய் பிரதிநிதியும் 'அத்தானும்'

கேவாகெற்ற பிரதிநிதி திரு. எம். ஏ. டனியல் அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முன்மொழிந்து சிங்களத்தில் உரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளை அப் பிரேரணையை வழிமொழிந்து தமிழில் உரை நிகழ்த்தினார்.

இத் திங்கள் 5ம் திகதி சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பாராளுமன்றம் கூடியபொழுது எதிர்க்கட்சியினர் நடந்து கொண்ட முறைக்குப் பழிவாங்குவது போன்றுஅமைந்திருந்தது திரு. கதிரவேற்பிள்ளையின் பேச்சு. ஒரு சந்தர்ப்பத்தில் திரு. மைத்திரிபால சேனநாயக்காவை 'நான் அத்தான் என்றோ, மச்சான் என்றோ கூறவேண்டிய நிலையில்இருக்கிறேன்' என்றார். திரு. கதிரவேற்பிள்ளையின் இந்தக் கன்னிப் பேச்சுக்கு பாராளுமன்றத்தின் இரு பகுதியிலும் மட்டுமல்ல பத்திரிகையாளர் மத்தியிலும் நல்ல வரவேற்பு இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் பின் விவாதம் நடைபெறுகையில் இரு பக்கத்திலும் குடு பிறந்தது. ஆனால், எதிர்கட்சித் தலைவி மறந்தும் கூட ஒரு சொற்தானும் பேசவில்லை.

புதிய அரசாங்கம் தோன்றிய பின்னர் நாட்டில் நடமாட முடியவில்லையென்றும் பொலீசார் எதிர்க்கட்சிச் சார்புடையவர்கள் செய்

நமது திருபர்

யும் புகார்களைப் பாராமுகமாக விட்டு விடுவதாகவும், அதே நேரத்தில் எதிர்கட்சியினர் மீது பலாத்காரம் பிரயோகிக்க பொலீசார் முற்படுவதாகவும் குற்றம் சுமத்

அ. அமிர்தலிங்கம்

தினர்கள். எதிர்கட்சியிலிருந்து பிரதமர் மீதும் பொலீஸ் திணைக்களத்தின் மீதும் ஒரே சொல் அம்புகள் பறந்தன.

திரு. தொண்டமான் இந்தியா சென்று பிரதமர் திரு. சாத்திரியுடன் பேச்சு வார்த்தை நடாத்தியதையும் எதிர்க்கட்சியினர் பலமாகக் கண்டித்தனர்.

நாகநாதன் பாய்ச்சல்

இந்தச் சந்தர்ப்பத்தில் எழுந்தார் நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் நாகநாதன். 'பழைய அரசாங்கத்தினர் பொலிசார்மீது வெள்ளம் போற் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்' என்ற பீடிகையுடன் பேச ஆரம்பித்த நல்லூர் பிரதிநிதி, எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் அக்குவேறு ஆணிவேறாக பியர்த்தெறிந்தார்.

'எதிர்க்கட்சித் தலைவி இப்பொழுது இங்குஇல்லை: அவர்மீது நான் உயர்ந்த கணிப்பும், பாசமும் வைத்திருக்கிறேன். ஆனால் பொலீசாரின் கெடுபிடிக்கு அந்த அம்மையார்தான் காரணம் என்பதைக்கூறிக் கொள்கிறேன்' என்று அடித்துக் கூறியதும் துள்ளிக் குதித்த எதிர்க்கட்சியினர் பதுங்கிக்கொண்டார்கள்.

"திரு. தொண்டமான் இந்தியப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடாத்தியதை இங்கு சிலர் கண்டிக்கிறார்கள், ஆனால் சிலர் உருசிய, சீன, கிழக்கு ஐரோப்பிய நாட்டு முதல்வர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தியதை மறந்து விட்டார்கள் போலும்" என்று திரு. நாகநாதன் கூறியதும் சகலரும் வாயடைத்துப் போனார்கள்.

ஒரு நாய்க்குட்டி பற்றிய கதையைக் கூறி; துள்ளிக் குதித்த கோட்டைப் பிரதிநிதி திரு. ஸ்டான்லி திலக்கரத்தினவின் கொட்டத்தை மட்டம் தட்டி அவரின் வாலைச் சுருட்டச் செய்தார் திரு. நாகநாதன்.

சிறப்பாக பேசினர் பிலிக்ஸ்

எதிர்க்கட்சியின் சார்பில் பலர் பேசினார்கள். ஆனால், தொம்பே பிரதிநிதி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மட்டும் அமைதியாகவும் சிறப்பாகவும் பேசினார். டாக்டர் பெரேராவும் திரு. கெனமனும் அனுபவம் நிறைந்தவர்களாக இருந்த போதிலும் அவர்களின் பேச்சு சாரமற்றதாகவும் பொறுப்பற்றதாகவும் இருந்தது.

திரு. பிலிக்ஸ் விடயங்களை எடுத்துக்கையாண்ட முறையும், பேசிய தொனியும் பலரும் பாராட்டக் கூடியதாக இருந்தது. அவரும் அரசாங்கத்தை மிக வன்மையாகக் கண்டித்தார். ஆனால் அவரது பேச்சில் பொருளும், பண்பும் இணையோடின. சம்பவங்களைச் சங்கிலித் தொடர் போன்று எடுத்துக் காட்டி பொலீசார் மீதும் பிரதமர் மீதும் குற்றம் சுமத்தினார்.

எதிர்கட்சியினர் மீது சிலர் வகுப்புவாதக் குற்றச் சாட்டைச் சுமத்துவதாகக் கூறிய அவர், சண்டிலிப்பாயில் திரு. அமிர்தலிங்கம் பேசிய பேச்சை உதாரணத்துக்கு எடுத்தார். அப்பொழுது திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் திரு. பிலிக்ஸுக்குமிடையில் காரசாரமான வாய்ப் பேச்சு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்ல சூடு கொடுத்தார் திரு. அமிர்தலிங்கம்.

ஐந்தாம் திகதியும் ஒன்பதாம் திகதியும் நடைபெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கவனிக்கையில் தமிழரசுப் பிரதிநிதிகளின் பேச்சுக்கு எதிர்கட்சியினர் பதில் கொடுக்க முடியாது திண்டாடுவதுடன், அரசாங்கத்தை நோக்கி எதிர்கட்சியினர் விசும் கேள்விக்கணைகளுக்கும் தமிழரசாரே பல சந்தர்ப்பங்களில் பதில் கூறி, அவர்களின் வாயையடைக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் பாரா

இ. மு. வி. நாகநாதன்

ளுமன்றத்தின் இரு பக்கங்களிலும் மட்டுமல்ல பத்திரிகையாளர் மத்தியிலும்நிலவுகிறது.

முதுகு சொறியல்

இத்தனை கலகலப்பாக நடைபெற்ற பாராளுமன்றத்தில் தமிழ் காங்கிரசின் தலைவர் திரு. பொன்னம்பலம் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். அதுவும் சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதைத் தவிர தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் மூவராலும் வேறு எதையும் செய்ய முடியவில்லை. தமிழ் காங்கிரஸ் மீதும் திரு. கெனமன் வாய் வைத்தார். ஆனால் அவர்கள் எதுவும் பேசவில்லை.

பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசுகையில் டாக்டர் எஸ். எம். பெரேரா அவர்கள் பிலிக்சிடம் மன்னிப்புக் கோரி முதுகு சொறிவதைக் கிண்டல் பண்ணினார். 'இந்த மன்னிப்பு நாடகமாவது அவர்களை ஒன்று படுத்தட்டும்" என்றார்.

"தமிழரசாருடன் உடன்படிக்கை இருந்தால் அதை நான் நிறை வேற்றுவேன். முன்னவர்கள் போன்று ஏமாற்ற மாட்டேன்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கொல்வின் இல்லாக் குறை

எதிர்க் கட்சியினருக்கு டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இல்லாதது பெரிய குறையாகவே தென்படுகிறது. அவர் இருந்தால் தமிழரசாரின் குற்றச் சாட்டுக்களுக்கு உடனுக்குடன் பதில் கொடுக்கலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் நிலவுகிறது. பார்வையாளர் மத்தியிலும் இதே அபிப்பிராயம் இருக்கிறது.

அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

★ 100 வருட வடிமுறை அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
★ 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அனுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்கர் பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்

வேலை தேடி தமிழரசு எம்.பி.களிடம் வருகிறார்களாம்!

சிங்களத் தினசரியின் கூற்று

"வடபகுதியில் தமிழ்மக்கள் இப்போதெல்லாம் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண்டிருக்கின்றனர். வேலைதேடிக் கொள்ளவே அவர்கள் அங்கே போகின்றனர்" என்று 'எத்த' என்னும் சிங்களத் தினசரி (13-4-65) எழுதியுள்ளது. இப் பத்திரிகை மேலும் குறிப்பிடுவதாவது:-

"இப்பொழுது அதிகாரத்தில் அமர்ந்திருப்பது 'நமது அரசாங்கம்' (அப்பே ஆண்டுவ) என்று தமிழரசு எம். பி கள் வடபகுதியில் பிரசாரம் செய்ததின் விளைவாக 'அப்பே ஆண்டுவ'யில் தொழில்கள் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் இவ்வாறு தமிழரசு எம் பி .களைத் தேடிச் செல்கின்றனர்.

இதுவரை தொழில் முதலிய சலுகைகளைக்கோரி தங்களிடம் வந்த வாக்காளர்களுக்குத் தமிழரசு எம். பி கள் கூறிவந்ததெல்லாம் அரசாங்கம் 'சிங்களவர்களின்' அரசாங்கமாதலின், தமிழ்மக்கள் அதனிடமிருந்து எத்தகைய சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது' என்பதே.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தை 'அப்பே ஆண்டுவ' என்று அவர்கள் வட பகுதியில் பிரசாரம் செய்வதால் அவர்களின் வீடுகள் வேலைதேடிக் கொடுக்கும் அலுவலகங்களாக மாறிவருகின்றன.

அரசாங்க உத்தியோகம் தேடி தங்களிடம் வரும் தமிழ் மக்களுக்குத் தமிழரசு எம். பி. கள் பல விதமான வாக்குறுதிகள் கொடுப்பதாகத் தெரிகிறது. அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்காக அவர்களின் பெயர், ஊர் விவரங்கள் அடங்கிய அறிக்கை யொன்று தமிழரசு எம். பி. களால் இப்பொழுது தயார் செய்யப்படுகின்றன."

கொழும்பு மேயர் - தெரிவு

'கொழும்பு மேயராக ஒரு கத்தோலிக்கரைத் தெரிவு செய்வதில் யு. என். பியில் கருத்து வேற்றுமை' என்ற தலைப்பின் கீழ் 'எத்த' 12-4-65ந் திகதிகிழக்காணும் செய்தியை வெளியிட்டுள்ளது.

'கொழும்பு மேயர் பதவியைப்பெற யு. என். பியிலிருந்து இருவர் முன்வந்தனர் ஒருவர் திரு. வின்சன் பெரேரா. மற்றவர் திரு. பி. டி. எஸ். ஜயசிங்கா.

திரு. வின்சன் பெரேரா உதவி மேயராக இருந்தாரெனினும் அவர் யு. என். பி. யின் பெரிய பணக்காரர்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவரல்ல. அவர் ஒரு சாதாரண நபர். எனவே மேயர் பிரச்சினையில்அவரது மதம் இழுக்கப்பட்டது. அவர் ஒரு கத்தோலிக்கர்.

பாராளுமன்றத்தில் முக்கிய மூன்று பதவிகளுக்கும் இரு கத்தோலிக்கர்களையும், ஒரு கிறிஸ்தவரையும் நியமனம் செய்ததின் விளைவாக யு. என். பி. கத்தோலிக்க இயக்கத்துக்கு அடிபணிந்து விட்டது என்ற எண்ணம் நாட்டிலே பரவிவிட்டதால், மீண்டும் ஒரு கத்தோலிக்கரை கொழும்பு மேயர் பதவிக்கு நியமனம் செய்தால் அந்த எண்ணம் ஊர்ஜிதமாகிவிடுமென்று அவர்கள் வாதித்தனர். ஆகவே திரு. ஜயசிங்காவுக்கு அந்தப் பதவியைக் கொடுக்கவேண்டுமென அவர்கள் கூறினர்.

அவர்கள் திரு. ஜயசிங்காவை ஆதரித்தது அவரது மதத்தைக் கருத்திற்கொண்டோ, அவர் பௌத்தர் என்பதற்காகவோ அல்ல. அவர்கள் அவரை ஆதரித்த ஒரே காரணம் அவர் திரு. வின்சன் பெரேராவைப்போல சிறிய மனிதரல்ல என்பதுதான். அவர் முன்பு பஸ் முதலாளியாகயிருந்து இப்பொழுது யு. என். பியின் எம். பியாகியுள்ள திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்காவின் சகோதரராவார்.

இரு பகுதியினரும் மேயர் பதவி விசயமாக கட்சியின் மாநகர சபை உறுப்பினர்களிடையே இரகசிய வாக்கெடுப்பு நடத்த முயற்சி செய்தனர். வாக்கெடுப்பு நடத்தியபோது திரு. பெரேராவுக்கு ஒரு வாக்கு அதிகப்படியாகக் கிடைத்தது. பின்னர் நகரசபைக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்திய போது திரு. ஜயசிங்கா பிரச்னமாக இருக்கவில்லை. சொந்த வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் விசயத்தில் ஒரு பக்கத்தில் கத்தோலிக்க நடவடிக்கையாளருக்கு இடம் வழங்கவும், மறுபக்கத்தில் மத பேதத்தை கிளப்பிவிடவும் யு. என். பி. தயங்காது.'

மந்திரியும் சிங்களமும்

'தபால் அமைச்சர் திரு. மொன்டேகு ஜயவிக்கிரமா கோட்டை மத்திய தந்திக் காரியாலயத்தைப் பார்வையிடுவதற்காகவிஜயம்செய்த போது விசேட தந்திச் சேவைப் பகுதியைச்சேர்ந்த ஒரு பியோன் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ளஅதிகப்படியான வேலைகளை அமைச்சருக்குச் சிங்களத்தில் விளக்கிக் கூறியபொழுது, அவன் கூறியது அமைச்சருக்கு விளங்கவில்லை. எனவே அதனை அவருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறவேண்டியதாயிற்று. ஆங்காங்குள்ள உயர்தர அதிகாரிகளுடன் அமைச்சர் ஆங்கிலத்திலேயே பேசியதால் ஆங்கிலம் தெரியாத சாதாரண சிப்பந்திகள் அமைச்சர் என்ன கூறினார் என்பது தெரியாமல் விழித்தனர்.'

(எத்த—7-4-65)

சிங்கள இதழ்களில் . . .

ராணுவத்தில் பௌத்த எதிர்ப்பு இயக்கமாம்!

கத்தோலிக்க நடவடிக்கையாளருக்கும் தமிழரசுவாதிகளுக்கும் சொந்தமான 'டைம்ஸ்' கம்பெனியின் பத்திரிகைகள் ஆரம்பித்துள்ள பௌத்த—எதிர்ப்புஇயக்கத்தைகடந்த வியாழக்கிழமை 'டெயிலி மிரர்' பத்திரிகை எழுதிய தலையங்கம் வெட்கமின்றி அம்பலப்படுத்தி விட்டது' என்று 'எத்த' பத்திரிகை ஏப்ரல் 12ந் திகதி தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

'முப்படைகளிலும், போலீசிலுமுள்ள பௌத்த அதிகாரிகளுக்கு எதிராகவும், அவர்களை ஒடுக்கவும் இந்த அரசாங்கத்தைத் தூண்டுவதற்கு இந்தத் தலையங்கம் முயற்சி செய்கிறது. தீவிர கத்தோலிக்க நடவடிக்கையாளரான ரெஜிமைக்கல் என்பவரே 'டெயிலி மிரர்' பத்திரிகையின் ஆசிரியர். அவர் இந்த அரசாங்கத்தைப்பற்றி குறிப்பிடுவது தனது கீழ்படிதலுள்ள வேலைக்காரனை அழைப்பதைப் போல. அவர் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதில்லை. அரசாங்கத்துக்கு கட்டளையிடுகிறார்.

இவ்வாறு அகங்காரமாக அவருக்குக் கட்டளை பிறப்பிக்கக்கூடியதாயிருப்பது இந்த அரசாங்கம் கத்தோலிக்க நடவடிக்கையாளரிடமும் தமிழரசுவாதிகளிடமும் அடிபணிந்திருப்பதுதான்.

கத்தோலிக்க நடவடிக்கையாளரினதும், தமிழரசுவாதிகளினதும் அதிகாரத்துக்கு முப்படை, போலீஸ் அதிகாரிகளை உட்படுத்துவதற்காக நடத்தும் இயக்கத்துக்குக் கொஞ்சமும் இடமளிக்கக் கூடாது. சதிவழக்கில் சிறைசென்றவர்களால்காவியான பதவிகளுக்குப் புதிய திசாநாயக்காகளையும், சேரப்களையும் நியமிப்பதற்குப் பிற்போக்குவாதிகள் முயற்சி செய்வது இலங்கையை மற்றொரு வியட்நாமாக்குவதற்கேயன்றி இந்நாட்டின் நலனையோ மக்களின் நலனையோ கருத்திற்கொண்டதல்ல. நம் நாட்டு தேசபக்தர்கள் அனைவரது கண்களும் திறக்கட்டும்!'

—

இராணுவ அதிகாரிகள்

'நேற்று முன்தினம் அமெரிக்க யுத்த விமானமொன்றில் ரத்மலானையில் வந்திறங்கிய நான்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் யார்?

இந்நால்வரும் பனாகொட இராணுவ முகாமில் ஒரு விழாவில் பங்குபற்றுவார்களென அறியப்படுகிறது. இந்த விழாவுக்கு மேலை நாட்டு தூதர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.'

—'எத்த' (7-4-65)

அகப்பை தன் கையில் இருப்பதாக கூறினராம்

'அகப்பை தமது கையில் இருப்பதாகச் செல்வநாயகம் கூறுகிறார்' என்ற தலைப்பின் கீழ் 'எத்த' 13-4-65-ந் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொடுக்காத சில உரிமைகளைக் கொடுப்பதற்குத் திருட்டலி சேனநாயக்கா வாக்களித்திருப்பதாகவும், ஆகவே இந்த அரசாங்கத்துக்கு உதவ தமது கட்சி தீர்மானித்ததாக திரு. செல்வநாயகம் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்' என்று குறுப்பிடப்பட்டுள்ளது.

'நாட்டின் நிர்வாகத்தை எத்திசையில் செலுத்த வேண்டும் என தீர்மானிக்கும் சக்தி 23ந் திகதி தமிழரசுக் கட்சிக்கு உரியதாகி விட்டதென்றும், இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த வாய்ப்பைத் தமிழரசுக்கட்சி பயன்படுத்திக் கொண்டது என்றும் திரு. செல்வநாயகம் கூறினார்' என்றுஇச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் ஆங்கிலம்

'யு. என். பி. கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆங்கில தட்டெழுத்தாளர்களை வேலையில் அமர்த்திக்கொள்வதாக அறியப்படுகிறது.

கடந்த ஆண்டு காப்புறுதிக்கூட்டுதாபனம் சிங்களத் தட்டெழுத்தாளர்களை வேலையில் அமர்த்துவதற்காக ஒரு பரீட்சை நடத்தியதெனினும், அதன் முடிவு இன்னும் வெளியிடப்படவில்லை.'

—எத்த (12-4-65)

எதிர்க்கட்சியின் தினசரிகள்

சுதந்திரக் கட்சியினரும் சமசமாசக் கட்சியினரும் சேர்ந்து ஆரம்பித்திருக்கும் புதிய கம்பனி நான்கு மும்மொழிகளிலும் தினசரிகளை வெளியிடும் என்று தெரிகிறது. இருபத்தைந்து லட்சம் ரூபா மூலதனத்துடன் ஆரம்பித்திருக்கும் இக் கம்பனியிடம் ஏற்கனவே யூகோ. நாட்டு விலையுயர்ந்த அச்சுயந்திரம் ஒன்றும் இருக்கிறதாம்.

மே முதலாம் நாள் இவர்களின் சிங்களத் தினசரி வெளியாகும் என்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் முன்னாள் தலைவர் ஒருவர் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களிடம் இப்பொழுது இருக்கும் அச்சுயந்திரத்தைவிட மேலும் சில உபகரணங்கள் வெளி நாட்டிலிருந்து எடுப்பிக்க வேண்டியிருப்பதாகவும், அவற்றை வரவழைப்பிப்பதில் பலகஷ்டங்கள் இருப்பதாகவும் தெரிகிறது.

அதே நேரத்தில் இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமை நிலையத்திலிருந்து வெளிவந்த "எத்த" தினசரியையும் ஒரு கம்பனி மூலம் வெளியிட ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டதாம். ஒவ்வொரு பங்கும் பத்து ரூபா வீதம் ஐந்து லட்சம் ரூபாவுக்குப் பங்கு விற்கப்பட்டிருப்பதாகவும், இவர்களும் தமிழ் ஆங்கிலத் தினசரிகளை வெளியிட முடிவு செய்துள்ளார்கள் என்றும் ஒருசெய்தி கூறுகிறது:

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

ரிஷி
அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் சேவர்தனி எண்ணெயும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 36/00
விலை ½ ருத்தல் ரூபா 22/00
விலை ¼ ருத்தல் ரூபா 12/00
(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்!
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செம்பியார் தெரு, கொழும்பு.

நீங்களும் நானும்

செல்வி ராஜேஸ்வரி,
திருமலை.

உங்கள் கட்டுரை மிகவும் நீளமாக விருக்கிறது. உரிய அளவில் அதனை வெட்டிக் குறைக்கவும் முடியாதபடி இருக்கிறது. சுருக்கமாகவும் தெளிவான கருத்து மிளிரக் கூடிய வகையிலும் எழுதுங்கள் பிரசுரிப்போம்.

புவனம்,
கல்முனை.

நீங்கள் கூறியபடி தையற் கலைக் கானபடங்களை வெளியிடுவது எமக்கும் விருப்பம் தான். ஆனால் போதுமான இடவசதியின்மையினாலும், புளாக்குகள் செய்யும் வகையில் பல சிரமங்கள் உள்ளமையினாலும் உடனடியாக அவற்றைச் செய்ய முடியவில்லை. விரைவில் அவற்றிற்கும் வசதிகள் ஏற்படும். அப்போது வேண்டியபடி செய்வோம்.

தி. கமலம்,
மானிப்பாய்.

சுருக்கமாகவும் தெளிவாகவும் சமயற் கணப்புகுதிக்கு வேண்டிய வகைகளை தாராளமாக எழுதி அனுப்புங்கள் பிரசுரிப்போம்.

சகோதரிகளே!

உங்களுடைய எழுத்துக்களை தயவுசெய்து தெளிவாக தாளின் ஒரே பக்கத்தில் எழுதுங்கள். ஒவ்வொரு வரிக்கும் இடையில் போதுமான இடைவெளியிருப்பது அவசியம் கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். எங்கே எழுதுங்கள் பார்க்கலாம்.

உங்கள்,
செல்வி அக்கா;

பிரச்சினை மயமான வாழ்க்கை

1. ஆசை-பேராசை

பிறந்தநாள் முதல் இன்று வரை வாழ்க்கையில் பிரச்சினையேஇல்லாதநாளே கிடையாது. எப்பொழுதும் ஏதாவதொரு பிரச்சினை வந்து வாட்டிவதைத்துக் கொண்டேதானிருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளுக் கெல்லாம் காரணமாயிருப்பது என்ன? மனம்தான். இந்த மனம் எண்ணங்களை உற்பத்தியாக்குகின்றது. எண்ணங்கள் ஆசைஅலைகளை எழுப்புகின்றன. அந்தஆசைகள்தான் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. ஆகவே மனத்தை மடியவைத்துவிட்டால் என்ன என்றுகூட பலர் கருதுவதுண்டு. மனத்தை மாய்க்கமுடியுமா?

மனிதன் சிந்திக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். இந்தச் சிந்தனையினாலேதான் பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்ளுகிறான். சிந்திக்கத்தெரிந்ததனாலேதான் மனிதன்மட்டும் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கிறான்.

சிந்திக்கத் தெரியாத மிருகங்களுக்கும் ஏனைய சீவராசிகளுக்கும் பிரச்சினைகளே கிடையாது. உணவு கிடைக்கும்வரை ஓட்டம். கிடைத்த உணவைப் புசித்தபின்னர் தூக்கம். வர்க்க விருத்திக்கு நாட்டம் இவ்வளவுதான்சிந்தனைச் சக்தியற்ற பிராணிகளின் வாழ்க்கை.

தேவைகள்.....!

மனிதர்களுக்கு உண்ண உணவு தேவை. உடுக்க உடை வேண்டும். இருக்க உறைவிடம் வேண்டும். இத்தனையையும் பெறுவதில் அவன் உருவாக்கும் பிரச்சினைகளே கணக்கிலடங்காதவையாகும். இதற்கிடையில் குடும்பம் ஒரு பிரச்சினை. குழந்தைகள் பெறுவதும் அவற்றைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வருவதும் பிரச்சினைகள் தாமே.

உண்ண உணவு கிடைத்து, உடுக்க உடையும் இருக்க இருப்பிடமும் கிடைத்து விட்டால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? இல்லையே. அன்றாடம் எத்தனையெத்தனை பிரச்சினைகள் உருவாகின்றன.

தங்களுக்குள்ளே எழும் பிரச்சினைகளை மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல் பாசாங்கு செய்பவர்கள் தான் எல்லோரும். ஆகவே உலகத்தில் உள்ளவர்களெல்லாம் நடிகர்களே. இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் 'உலகமே ஒரு நாடகமேடை. நாம் எல்லோரும் நடிகர்களே' என்று ஆங்கில நாடகாசான் செகசிற்பியர் கூறினார்.

வசதிகளற்ற ஒருவன் வெளிப்பகட்டுக்கு தான்எது விதமான பிரச்சினைகளுமற்றவனை நடிக்கப்பார்க்கிறான். எல்லா வசதிகளும் உள்ள ஒருவன் தனது செல்வத்தை பிறருக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய நிலை ஏற்படுமோ என்று அஞ்சி, எதுவுமற்றவனைக் காட்சிதரப் பார்க்கிறான்.

வசதிகளனைத்தும் கொண்டவனுக்குமென்மேலும் வசதிகளைத் தேடுவதில் ஆசை எழுகிறது. அதைப்பேராசை என்று வர்ணிக்கிறார்கள். பிறந்ததுமுதல்இறப்புவரை ஒவ்வொரு வசதியையும் பெறப்பெற ஆசை அதிகரிக்கிறது. ஆகவே பிரச்சினை அற்றவர்களை உலகத்தில் காணவே முடியாது.

செல்வி

சகல வசதிகளும் போதிய செல்வமும் கிடைத்திருக்கும் ஒரு குடும்பத்தைப் பாருங்கள். குடும்பத் தலைவரை அணுகி அவரிடம் அவருடைய குடும்ப நிலையை விட்டு பேச்சுத் தொடுத்துப் பாருங்கள் உங்களுக்கே புரியாத எத்தனை பிரச்சினைகளை விட்டு அவர் உங்களிடம் கூறுகிறார் என்பதை அவதானியுங்கள். அதேபோன்று பிரச்சினைகளே அற்றவராக உலகங்குத் தோற்றமளிக்கும் ஒரு குடும்பத் தலைவியை அணுகி ஆராய்ந்து பாருங்கள். அவர் வர்ணிப்பார் அவருடைய தீராத பிரச்சினைகள் சகலவற்றையும்.

'குடும்பப் பிரச்சினைகளும் பெண்களும்'
என்பது பற்றி
அடுத்த வாரம்
பார்ப்போம்

நடந்த சம்பவம்

ரயிலைத் தள்ளினோம்!

மோட்டார்கள், பஸ், லொறி முதலிய வாகனங்களுக்கு ஏதாவது பழுது ஏற்பட்டால் அவற்றைத் தள்ளிக் கொண்டு போவது வழக்கம். ஆனால் ரயில் வண்டியையே பிரயாணிகள் எல்லோரும் சேர்ந்து தள்ளிக் கொண்டு போன சம்பவத்தை எவரும் கேள்விப் பட்டிருக்கமாட்டீர்கள்.

இந்த அதிசயம் மார்ச் மாதம் 19ம் திகதி நடைபெற்றது. அதுவும் இலங்கையிலேயே தான் நடைபெற்றிருக்கிறது.

அன்று பகல் 2.05க்குப் புறப்பட வேண்டிய உத்தரதேவி கொழும்புக் கோட்டையை விட்டு சில நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டது. வடக்குக்கும் கிழக்குக்கும் தேர்தல் உத்தியோகத்தர்களையும் ஏற்றிக்கொண்டு வண்டி புறப்பட்டது.

உத்தரதேவியிற் சென்றுகொண்டிருந்து மாகோ சந்தியிருந்து மட்டக்களப்பு வரை செல்ல ஒரு சிறிய ரயில் வண்டித் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வண்டியில் சுமார் 150 பேர் வரை பிரயாணம் செய்யலாம். 5 மணிக்கெல்லாம் மாகோ சந்தியிலிருந்து இவ்வண்டி புறப்பட்டது. 6 மணியளவில் கலாவெவ நிலையத்தில் வைத்தே ரயில் சாரதி ஓர் அபாய அறிவிப்பைத் தந்தார். வண்டியில் கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும் எப்படியும் மட்டக்களப்புக்குக் கொண்டு சேர்த்து விடுவதாகவும் அவர் உத்தரவாதமளித்தார்.

கலாவெவயிலிருந்து புறப்பட்ட வண்டி சுமார் இரு மைல்கள் சென்றதும் நின்று விட்டது. டீசல் எண்ணெய் தாங்கி உடைந்து விட்டதனால் அதை ஒட்டுவதற்கு பிரயாணிகளின் கைப் பெட்டிகளிலெல்லாம் சவர்க்காரம் சேகரிக்கப்பட்டது. ஆனாலும் பலன் கிடைக்காது போகவே இடையில், இருளில், கானகத்தின் மத்தியில் வண்டியும் பிரயாணிகளும் தவிக்கலாயினர் என எண்ணி சகல ஆண் பிரயாணிகளும் இறங்கி வண்டியை கலாவெவையை நோக்கித்தள்ள ஆரம்பித்தோம். முடியுமா? விடாமுயற்சி ஓரளவு பலித்தது. சுமார் அரை மைல் வரை வண்டியை நகர்த்தினோம். அதற்கு மேல் ஒரு அங்குலம் தானும் வண்டி நகரத்தயாரில்லை. எனவே 'ரயில் கார்ட்' நடந்து சென்றே கலாவெவையில் நின்ற திருகோணமலை செல்லும் சரக்கு வண்டியை அழைத்து வந்து மீண்டும் எங்களை கலாவெவைக்கே இட்டுச்சென்றனர்.

சுமார் 11 மணியளவில் கல்லோயச் சந்தியை அடைந்து சரியாக 3 மணிக்கு மட்டக்களப்பை அடைந்தோம்.

—சிவா

மிங்கையர் சங்கம்

திரைப் படத்தால் ஆடையில் புதுப்பாணி

"என்னைக் கவர்ந்த அழகி" (MY FAIR LADY) என்ற படம் திரையிடப் பட்டதைத் தொடர்ந்து, அந்தப் படத்தின் கதாநாயகி அணிந்துவரும் ஆடைகளை அணிவதில் ஜெர்மன் பெண்கள் இப்பொழுது பேரார்வம் காட்டுகிறார்கள். தையல்காரர்களும், கடைக்காரர்களும் இந்தப் புதியபாணி ஆடைகளையே அதிகமாகத் தயாரித்து வருகிறார்கள். இந்தக் கோடை காலத்திற்காகத் தயாரிக்கப்படும் ஆடைகளிலும் இந்தப் புதிய பாணி புகுந்து விட்டது. ஆண்டு தோறும் புதியப் பாணியை கண்டு பிடித்து வரும் ஆடைத் தயாரிப்பாளர்கள் இந்த ஆண்டில் என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்தத் திரைப்படம் வெளி வந்தது. அவர்களுடைய சிரமத்தைக் குறைந்து விட்டது. இப்படம் ஒரு புதிய பாணியையும், அதற்கான விளம்பரத்தை அளித்திருக்கிறது.

(யூ. பி. எஸ்.)

விபத்துக்களைக் தடுக்கும் புதுவகைச் சட்டை

தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் போது சுழலும் இயந்திரங்களுக்குள் சட்டை சிக்கிக் கொண்டு பயங்கரமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களில் ஏராளமான உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன.

இது போன்ற விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக, தொழிலாளர்களுக்குப் புது விதமானசட்டைகள் மேற்கு ஜெர்மனியில் தைக்கப்படுகின்றன. சட்டைகையின் கீழ்ப்பகுதியை இலேசாகப் பிடித்து இழுத்ததும்உடனே அது தனியாக வரும் வகையில் இச்சட்டைகள் தைக்கப்படுகின்றன சட்டைக்கை இயந்திரத்தில் சிக்கினால் உடனே அப்பகுதி கிழிந்து விடுகிறது. தொழிலாளியின் உடலுக்கோ உயிருக்கோ ஆபத்து ஏற்படுவதில்லை. கிழிந்த பகுதிக்குப் பதில் வேறு பகுதியை எளிதில் இணைத்துக் கொள்ளலாம்.

(யூ. பி. எஸ்.)

வீணாகும் ஓய்வு நேரம்

பெண்மணிகளுக்கு ஓய்வு எப்போது கிடைக்கிறது?

நமது நாட்டுப் பெண்களை அணுகி அவர்களுக்கு எப்போது ஓய்வு கிடைக்கிறது என்பதை வினவிப் பாருங்கள். எவராவது தங்கள் வாழ்க்கையில் ஓய்வு எப்போதாவது கிடைப்பதாக ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் குடும்பப் பெண்களுக்கு சராசரி நமது நாட்டில் போதுமான ஓய்வு நேரங்கள் அதிகமாகவே இருப்பதை நாம் உணருவோம்.

—புனிதம்—

இலங்கையிலுள்ள குடும்பப் பெண்களையிட்டு ஒரு ஆராய்ச்சியாளர் கூறுமிடத்து, ஒவ்வொரு குடும்பப் பெண்ணுக்கும் சராசரி ஒன்றரை குழந்தைகள்வீதம் தான் இருப்பதாக அறிவிக்கிறார்.

அதிகமான குழந்தைகளைப் பெற்ற தாய்மார் தங்கள் சிறு குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பினை வயதான மூத்த குழந்தைகளிடம் ஒப்படைத்து விடுகின்றனர். சிறு குழந்தைகளாயிருந்தாலும் அவர்களுடனேயே தங்கள் முழுப் பொழுதையும் செலவிடுவர்களல்ல. ஆகவேகுழந்தைகளை அதிகமாகப் பெற்ற தாய்மார் தங்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை என்பதற்கு குழந்தைகளைசாக்குக்காட்ட முடியாது.

கணவனுக்குரிய சகலபணிவிடைகளையும் செய்து அவரை வேலைக்கு அனுப்பி விட்டு வீட்டு வேலைகள் செய்யத் தொடங்கும் ஒருமாது உணவு வகையறுக்களையும் சமைப்பது வரையில் கடுமையாகவே பாடுபடுகிறார் என்பது உண்மையே. ஆனால் அதன்பின்னர் பல மணி நேரங்கள் ஓய்வு கிடைக்கிறது.

வேலைசெய்தகளைப்புத்திர, சிறிது வேளை ஆறியிருக்கலாம். இதற்காக சராசரி மூன்றுமணிப் பொழுதை செலவிட்டாலும் மீதியுள்ள காலம் வெகு பலருக்கு வீண் பொழுதாகவே கழிகிறது.

அரட்டை

எமது நாட்டுப் பெண்கள் வீண் அரட்டைகளிலே பொழுதை விரயம் செய்வதை நாம் பார்க்கிறோம். இந்த அரட்டையினால் ஏற்படும் காலம்தான் வீணாக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், பல குடும்பங்களின் சீரழிவுக்கும் பாரதூரமான பல தொல்லைகள் தோன்றுவதற்கும் இந்த வீண் அரட்டைகளே அடிகோலுகின்றன.

அதிகமான படிப்புவாசனையற்ற பெண்கள் அயலவர்களைப்பற்றி அனுவகியமான வார்த்தைகளைப் பேசுவதனால் தான் அனர்த்தங்கள் பல விழைகின்றன. பெண்கள் பலர் கூடியிருந்து வேறு பல பெண்களையும் குடும்பங்களையும் பற்றி வர்ணிக்கும் போது, அங்கேநடைபெறும் பேச்சுக்கள் எப்படியோ பல ரகங்களில் மாறித் திரிந்து வெவ்வேறு உருவங்களில் வெளிவேறுகின்றன இதனால் பல குடும்பங்களுக்கிடையில் சண்டை மூழுகின்றது. சிநீதிஸ்தலங்கள் வரை சென்றுவிடுகின்றன.

ஓய்வு நேரங்களை வீண் அரட்டைகளில் செலவிடாமல், உபயோகமான சிறு கைத்தொழில்களைச் செய்வதில் ஈடுபடுத்தினால் பொருளாதாரம் சிறக்க வழி ஏற்படுவதுடன் பல தொல்லைகளும் நேராமல் இருக்கவும் வழி உண்டு.

'கமலமலர்' எழுதும் கோதையரின் கூந்தல்

அடுத்த வாரம் வெளிவரும்

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

ஒரு வருடம்	ரூபா 14-00
ஆறு மாதம்	ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

இராமன், முத்தமிழ்ப் புலவன் கம்பர், இனப்பற்றுடையவர்

மாகவி கம்பர், இலக்கண—இலக்கிய ஞானமுடைய கவிஞர் மட்டுமல்லர்; மிகச் சிறந்த தத்துவ ஞானியுமாவார். அவன் காலத்தில் தமிழகத்தில் தத்துவ வாதங்கள் தலை தூக்கி நின்றன. சித்தாந்த—வேதாந்தக் கலைகளும் மலிந்திருந்தன. ஆனால், அவை அனைத்தும் வட மொழியிலேயே புதைந்திருந்தன. அதற்குத் 'தேவ மொழி' என்று பெயரிட்டு, அதிலுள்ள தத்துவ மெய்ஞானக் கலைகளை மக்கள் மொழியில் பெயர்க்கக் கூடாதென்றும் மதவாதிகள் வாதிட்டனர். அதனை, ஓரளவு தகர்த்தெறிந்த பெருமை மணிமேகலை தந்த சாத்தனுக்கே உரிமை. அவர் தந்த மணிமேகலைக் காப்பியத்துள் "சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை", 'பவத்திறமறுகெனப்பாவை நோற்ற காதை" என்ற இரு காதைகளில் சர்வசமயசாதிரங்களின் சாரத்தை வடித்துத் தந்துள்ளார். அகச் சமயத்தைச் சார்ந்த தமிழ்ப் புலவர்களுக்கும் அந்நாளில் தத்துவ ஞானம் இருந்ததுண்டு. ஆயினும் வைதிகர் இட்ட தடையைக் கடப்பதற்கு அஞ்சினர். சாத்தனார் புறச்சமயத்தினர் ஆதலால், தடைக்கஞ்சாப் பாம்பாகச் செலற்பட்டார்.

சைவ, வைணவ, சாங்கிய லோகாயத, சமண, புத்த சாத்திரங்களை முதன் முதலில் தமிழில் தந்த பெருமை சாத்தனாருடையதென்று சரித்திரம் கூறுகின்றது. அந்தப் பெருமகனாருக்குத் தலை தாழ்ந்தி அஞ்சலி செலுத்துகிறேன், கம்மன் சமாதி முன்பு.

சாத்தனார் காலத்திலேயே இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரத்தில் சர்வ சமயக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால், அவை சாத்திரங்களல்ல; தோத்திரங்கள்! சாத்திரங்களாகத் தந்தவர் சாத்தனார் தான்.

இரணியன் வதைப் படலம்

சாத்தனார் துவக்கி வைத்ததைத் தொடர்ந்து செய்த பெருமை கம்பருடையதாகும். 'இரணியன் வதைப் படலத்'திலே—தந்தை இரணியனுக்கு, 22 பாடல்களிலே தெய்வத்தின் இலக்கணத்தைக் கூறுகிறான் பிரகலாதன். அந்தப் பாடல்கள் அனைத்தும் சாத்திரம் எனக் கருதுதற்குத் தகுதியுடையவை. மெய்கண்டார் 12 சூத்திரங்களில்—40 வரிகளில் சித்தாந்த சாத்திரத்தை யாத்துப் போனார். அது போன்று 22 கவிதைகளில் இரணியன் வதைப் படலத்தில், ஒரு சாத்திரத்தைச் சேர்த்து வைத்துள்ளார் கம்பர். மற்றபடி தோத்திரங்களாகவும் வாலி—பிரகலாதன்—கவந்தன் வாயிலாகப் பல பாடல்களைத் தந்துள்ளார் கம்பர்.

இரணியன் வதைப் படலத்தைக் கம்பர் இயற்றக் காரணம் என்ன? இதனை ஆராய்ந்து யான் கண்ட முடிவினை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

வால்மீகி காலத்தில் இரணியன்—பிரகலாதனைப் பற்றிய செய்தி இருந்திருக்கலாம். இராவணனுக்கு ஒரு முகம் முந்தியவனல்லவா இரணியன்! ஆனால், அவனைப் பற்றிய காப்பியம் எதுவும் வால்மீகி காலத்தில் இருக்கவில்லை. 'இராமாயணமே 'ஆதிகாவ்யே' என்பதுதானே வழக்கு! அதனால், இரணியன் கதை வால்மீகி இராமாயணத்தில் இடம் பெறவில்லை. கம்பர் காலத்தில் 'பாகவதம்' தோன்றிவிட்டது. அதனுள்ளே இரணியனும் புகுந்துவிட்டான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தன் காப்பியத்திலும் இரணியனைக் காட்சிப் படுத்துகின்றார் கம்பர்.

ஆணவத்தில் மிஞ்சியவன் யார்?

ஆணவத்தில் இராவணனை விட நிமிர்ந்து நின்றவன் இரணியன். திருமாலே இராமனாக வந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டு, அவன் கையால் மாளுவது புண்ணியம் என்பதைப் புரிந்து கொண்டு, அவன் புகழ் உள்ளவரை தன் புகழ் இருக்கும் என்பதை புரிந்துகொண்டு, அந்தப் பேறுதனை இழந்துவிடக் கூடாதென்று கருதியே இறுதிவரை போராடுகிறான் இராவணன்.

இராமனாக வந்துள்ள இராமன் கையால் கொல்லப்படுகிறோம்; இராமன் புகழ் உள்ளவரை நம் புகழும் நிலைக்கும் என்றெண்ணி மன நிறைவுடன் மாண்டதனாலேயே உயிர்நீத்த பின் "மும்மடங்கு பொலிந்தன அம்முகங்களம்மா" என்று இராவணன் முகங்களை வருணிக்கின்றார் கம்பர்.

இரணியன் கதை வேறு. அதில் தோன்றியிருப்பது திருமால் என்பதைத் தன் மைந்தன் தெரிவித்த பிறகும், செங்கட்சீயம் சிரித்து, தன் பரத்துவத்தைக் காட்டிய பிறகும்,

"ஆரடா சிரித்தாய், சொன்ன
அரிகொலோ"

என்று கேட்டு,

"போரடா பொருதி யாயின்
புறப்படு புறப்படு"

என்று முழங்குகின்றான் இரணியன். ஆணவம் என்பது, மாயையின் விளைவு. மாயை அழியும் பொழுது பரம்பொருள் தோன்றும்; அல்லது அது தோன்றிய கணத்திலே மாயை அழியும். இரணியனுக்குச் செங்கட் சீயத்தின் வடிவத்தில் பரம்பொருள் காட்சியளித்த பின்னரும் மாயையின் படைப்பாகிய ஆணவம் அழியவில்லை. ஆனால் ஒரு நிமிர்ந்த ஆணவம்!

இராவணனைவிட ஆணவத்தில் நிமிர்ந்தவனை எடுத்து காட்ட விடுவன் நினைத்த போது, இரணியன் ஒருவனே அவனுடைய நினைவிற்கு வந்தான். இந்த உண்மையை உணர்த்தும் பொருட்டும், வால்மீகியில் இல்லாத இரணியன் கதையைத் தம் காப்பியத்தில் புகுத்தி வைத்தார் கம்பர். பாகவதத்தைக் கம்பர் பயன்படுத்திக்கொண்டது போல, கம்பரைப் பாரதியார் பயன்படுத்திக்கொண்டு, "இரணியன் போல் அரசாண்டான் சார் எனும் பேர் இசைந்த பாவி" என்று பாடி, கொடுங்கோலன் சார் மன்னனுக்கு இரணியனை உவமைக் காட்டுகிறார். அவருக்கு இராவணன் கதை தெரிந்திருந்தும் "இராவணன் போல் அரசாண்டான் சாரெனும் பேர் இசைந்த பாவி" என்று பாடவில்லை. அவரும் ஆணவத்தில் நிமிர்ந்தவன் இராவணனல்ல, இரணியனே என்று எண்ணினார்.

தமிழ் மகள் சீதை

"இரணியாய நம" என்று தேவர்களையே சொல்லச் சொன்னான். மைந்தனுக்கும் அதையே மந்திரமாக்க முயன்றான்; மைந்தன் மறுத்தபோது, அவனைக் கொன்று முடிக்கவும் முனைந்தான் இரணியன்.

இராவணன் எவ்வளவு கொடியவனாயினும் — ஆணவம் உடையவனாயினும் — மகப் பாசம் உடையவன். மைந்தன் இந்திரசித்தன் மாண்ட செய்தி அறிந்த போது, வெடிபட்ட அவனது கை கிடைத்தபோது, அதனைத் தன் கழுத்தோடு சேர்த்துப் பிள்ளைப் பருவத்தில் மைந்தன் தன்னை தழுவிக் கொண்ட நினைப்சியை நினைவில் கொண்டு வந்து, தன்தலைக் கொரு பாட்டாக பத்து தலைகளுக்கும் பத்துப்

ம. பொ. சி

பாடல் பாடிப் புலம்புகின்றான் எட்டுத் திக்கையும் வென்ற இராவணன் அந்தப் பாடல்களைப் படிக்கும் போது இராவணனுக்கு இன்னும் 90 தலைகள் இருந்திருக்கக் கூடாதா! இருந்திருந்தால் தன் மகனைப் பற்றிய புலம்பலாக 100 பாடல்கள் கிடைத்திருக்குமே என்று எண்ணி ஏங்குகின்றது என் மனம்.

இரணியனோ, மகப் பாசத்தையும் மாய்த்து 'ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாய் இருந்தவனை, ஆளப்பிறந்தவனைக் கொல்ல முயல்கின்றான். அவனன்றோ ஆணவத்தில் நிமிர்ந்தவன்.

கம்பன் செய்த இராமாயணம் இரவல் காப்பியம் தான்; ஆனால் தனிக் காப்பியம் செய்யும் தகுதியும் அந்த மாகவிக்கு உண்டு என்பதற்கு இரணியன் வதைப் படலம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தலைக்கொரு பாட்டு

தமிழ்ப் பெருமக்களே! கம்பன் வெளிப்படையாகக் காட்டிய கருத்தோவியங்களைக் கண்டும் கேட்டும் ரசிப்பதிலேயே நாம் காலம் கழிக்கிறோம். கவிதை இடுக்கிலே இன்னமறை காயென எத்தனை யெத்தனையோ செய்திகளை மறைத்து வைத்திருக்கிறார் அந்த மாகவி.

சித்திரகூடப்பருவத்தில் இராமனைச் சந்தித்த பரதன், தந்தை தயரதனின் மரணச் செய்தியைக் கூறுகின்றான். பின்னர் சீதைக்கும் செய்தி சொல்லுகிறான். இந்த நேரத்தில் இராமனுடைய தாயார் மூவரும் சீதையை அணுகவில்லை சுமந்திரனோடு கண்காணாத தூரத்தில் நிற்கின்றார்கள்—நிற்க வைத்திருக்கிறார் கம்பர்.

மாமனார் இறந்த செய்தி கேட்ட மருகி வாய்விட்டழுது புலம்புகிறாள். அவள், வடபாரதத்தில் பிறந்த மிதிலைச் செல்வி. ஆயினும், தமிழ்ப் பாரதப் பாணியில் ஒப்பாரி பாடி அழுகிறாள். ஆம்; அவளைத் தமிழ் மகளாக்கிறார் கம்பர். "மண் எனும் செவிலிமேல் வைத்த கையினள், பண் எனும் கிளவியால் பன்னி ஏங்குவாளி" என்பது பாட்டு. தமிழ் நாட்டுப் பெண்கள் இழவு வீட்டில் அழும் போது, தனித்தனியே இருந்து அழுவதுவழக்கமில்லை; கூட்டுச் சேர்ந்து அழுவார்கள். இறைவன் கோயிலில் கூட்டு வழிபாடு மறைந்து விட்டதென்றாலும், இழவு வீட்டில் கூட்டு ஒப்பாரி வழக்கம் இன்னமும் இருக்கிறது.

பலபெண்கள் கூடி, ஒருவரையொருவர் கைகளால் தழுவிக்கொண்டு பண்பாடி அழுவார்கள். சீதைக்கோ தழுவிக்கொண்டு அழத் துணை இல்லை. அதனால், நிலமகளைத் தழுவிக் கொண்டான் என்று சொல்ல நினைத்து, 'மண் எனும் செவிலிமேல் வைத்த கையினள்' என்று கூறுகின்றார். ஆம், திருமகளான சீதை அழுகிறாள் என்றால், அவளைத் தழுவியழ நிலமகள் தானே தகுதியுடையவள்!

"பண்ணெனும் கிளவியால்" என்றதால், வடநாட்டு வழக்கப்படி 'ஆய்ணய்' என்று கத்தாமல், தமிழ் நாட்டு வழக்கப்படி எதுகை இடறாமல் மோனை முறியாமல், சீர் சிதறாமல், தாளை தட்டாமல் பண்பாடி அழுதாளாம் தமிழ் மகளாக்கப்பட்டுவிட்ட சீதை.

பேசாத பாத்திரம்

இராமனையும் தமிழ் மகன் ஆக்குவான் கம்பன். கோசலை மைந்தனை வடபுலத்து அயோத்தி அரசனை, "தென் சொற் கடந்தான் வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்" என்கிறான் கம்பன். 'தென் சொற்கடந்தான்' என்பதால். முத்தமிழ் முழுவதையும் பிழையறத் தேர்ந்தான் என்கின்றது. வடமொழியைக் குறிப்பிடுமிடத்துக் 'கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்கின்றான் கம்பன். காரணம், அது பேச்சு வழக்கிலுள்ள மொழியாக அல்லாமல், கலைச்செல்வங்களைத் தாங்கியுள்ள பொது மொழியாக விளங்குவதுதான் ஆம், வாழ்க்கையோடுயைந்த மொழிப்புலமை தமிழிலே; கலைப் புலமை வடமொழியில்!

இந்திய ஒருமைப்பாடு தேவை என்பதைக் கம்பன் உணர்ந்திருந்தான். ஆனால், ஒருமைப்பாடு என்பது, 'தமிழன்' என்ற இன உணர்வை இழப்பதன்று இன உணர்வையும் காக்க வேண்டும், இந்திய ஒருமைப் பாட்டையும் காண வேண்டும். வடபுலத்தார் தென்புலம் வந்தால், தமிழ் மொழி பயில வேண்டும்; தென்புலத்தார் வடபுலம் செல்வதாயின் அங்குள்ள மொழி ஒன்றைப் பயில வேண்டும். இந்த உண்மையை உணர்ந்தாலே இந்திய ஒருமைப்பாடு தோன்றும்.

கம்பன் சொல்லி உணர்த்தியவற்றை விடச் சொல்லாமல் உணர்த்தும் உண்மைகளே மிக மிகச் சுவை தருகின்றன. இராமாயணத்தில் தயரதனின் கட்சி மைந்தன்-பரதனின் மெய்க்காவலன்-சத்துருக்கனன். ஆனால், அவன் பேசாப் பாத்திரம். காப்பியத்தின் முடிவில் ஒரே இடத்தில் சினந்து பேசுகின்றான். அதனால், 'திமிர்போகத்தான்' எனும் சிறப்புப் பெயரையும் பெறுகின்றான்.

இப்படிச் சத்துருக்கனனைப் பேசாப் பாத்திரமாக்கக் காரணம் என்ன? இதனைப் புரிந்துகொள்ள, அவன் பேசியிருந்தால் யாரைப் பற்றிப் பேசியிருப்பான் என்பதனை ஆராய வேண்டும். சத்துருக்கனன் இராமனைப் பற்றிப் புகழ்ந்து பேசியதாகச் செய்தி இல்லை. ஏனெனில், அவனது மனங்கவர்ந்த தலைவன் பரதனே. ஆகவே,

(11-ம் பக்கம் பார்க்க)

உங்களுக்கு வேண்டிய காரணங்கள்
இருக்கின்றதா என்று பாருங்கள்!

எந்தவகையான காரணத்தாலும் மனவேதனை, தொல்லை, துக்கம், துன்பம் இருப்பின், அந்த ரகசியப் பிரச்சினை வெளியிடப்படாது தீர்த்துக் கொடுக்கப்படும். மலைவி—கணவன் பேதம், வழக்கு விவகாரம், பகைவர் தொல்லை, நிந்தனை, பழி, விரும்பியவர்களை அடைதல், தேவையற்றவர்களை விலக்கிவிடல், காதல், அன்பை நிலை நிறுத்தல், பிழை செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்த வகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, வயது கூடி விவாகமின்றி, விவாக சம்பந்தங்கள் முறிந்து போகிறவர்களுக்கு சந்தோஷமான திருமணம் நடைபெற, பட்டம், பதவி, உத்தியோகம், வியாபாரம் அபிவிருத்தியாவதற்கு, ரகசிய நோய்கள், பெண்களின் உடல் இளைத்தல், வேறு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு சிக்கலையும் குப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மைவெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரீகத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும். உண்மையாக யாவற்றையும் எழுதுங்கள் அல்லது நேரடியாக வந்து கூறுங்கள். ஞாயிறு, திங்கள் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனி வரை 103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானையிலும் சந்திக்க முடியும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

தாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா,

அருத எண்ணெய் மருந்துச்சாலை,

கம்பளை.

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஏப்ரல் மாதம் 18-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 சு. பெ. 1183

நடுநிலைமை

நடுநிலைமையே தேசிய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை. இக் கொள்கைக் கிணங்கவே அயல் நாட்டு உதவிகளைத் தேசிய அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் என்று கூறுகிறது அரியணை உரை.

1956ம் ஆண்டு முதல் சென்ற மாதம் வரை ஆட்சி புரிந்த பண்டாரநாயக்கா அரசாங்கங்களும் நடுநிலைமையே தங்களின் வெளிநாட்டுக் கொள்கை எனக் கூறிக் கொண்டிருந்தன.

ஆனால் திருமதி பண்டாரநாயக்காவில் அரசாங்கம் நடுநிலையிலிருந்து தவறிக் கெட்டு ஓர் ஆதிக்க முகாமில் சார்ந்து நின்றது என்று குற்றஞ்சாட்டியது ஐக்கிய தேசியக் கட்சி. ஆகவே தேசிய அரசாங்கத்தின் நடுநிலைமையைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு பெரும்பாலும் ஐ. தே. கட்சிமீதே சுமத்தப்பட்டுளது பிறர் மீது சாட்டிய குறைச்சாட்டு தன்மீது திருப்பி அடிக்கப்படலாமென்பதையும் இக் கட்சி மறந்துவிடக்கூடாது.

நடுநிலைமை என்றால் என்ன? உலக அரங்கில் இரு ஆதிக்கக் கோஷ்டிகளுண்டு. இவற்றில் எக் கோஷ்டியுடனும் தன்னைப் பிணைத்துக் கொள்ளாத 'கோஷ்டி சேராக கொள்கையே' நடுநிலைமையாகும். நடுநிலைமையின் அடிப்படை, சமாதானமாக உடனிருந்து வாழ்வதே. கோஷ்டிகளை கவனியாது, எல்லா நாடுகளுடனும் நட்புறவு பூண்டு எல்லோருக்கும் நண்பனாக வாழ்வதே உடனிருந்து வாழ்வதாகும். இந்தத் தலைசிறந்த கோட்பாட்டை அளித்தவர் உலகத் தலைவர் நேருஜியே. அவர் இதனை இந்திய வெளிநாட்டுக் கொள்கையாக ஏற்று, சரிவர அமுல் நடத்தி உலக அரங்கில் ஒரு புது வழி சமைத்தார். அந்த வழியை அன்று இலங்கையும் பின்பற்றி, நேருஜிக்குப் பக்கபலமாக நின்றது.

ஆனால் இலங்கை ஏனோ பின்னர் இக் கோட்பாட்டைச் சரிவரக் கடைப்பிடிக்க முடியவில்லை. தேசிய அரசாங்கம் இக் தவற்றைத் திருத்தவேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம். நடுநிலைமையைக் கடைப்பிடித்தால் போதாது—கடைப்பிடிப்பதாகத் தனது நடவடிக்கைகளின்மூலம் எடுத்துக்காட்டவும் வேண்டும். ஆம், தேசிய அரசாங்கத்தினது வெளிநாட்டுக் கொள்கையும் அதன் நடவடிக்கைகளின் அடிப்படையிலே நிர்ணயிக்க முடியுமென்பதை மறந்துவிடக்கூடாது.

எந்த நாடும்—குறிப்பாக இலங்கைபோன்ற பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாடுகள்—வெளிநாடுகளின் உதவிகளை நாடும்போது தான் நடுநிலைமையிலிருந்து நழுவுகின்றன. காரணம், உதவி பெறுவதற்காகச் சிற்சில நிர்ப்பந்தங்களுக்கு உட்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுவதே! நிபந்தனைகளுடன் கூடிய வெளிநாட்டு உதவிகளை ஏற்றுக் கொண்டால் நடுநிலைமை நழுவிவிடும் என்பதை உணர்ந்த நேருஜி நிபந்தனையற்ற உதவிகளைமட்டும்பெற்றுக்கொண்டு நடுநிலைமையைப் பாதுகாத்துக் கொண்டவர்.

நமது தேசிய அரசாங்கத்துக்கு இது ஒரு படிப்பினையாக இருத்தல் வேண்டும். ஐ. தே. கட்சி மேலைய நாடுகளின் பால் அனுதாபம் கொண்டது என்ற ஒரு கெட்ட பெயர் நீண்டகாலமாக அதற்கு உண்டு. அதனை அக்கட்சி இனிமேலாவது நீக்கிக் கொள்ளவேண்டும். எந்த ஆதிக்க முகாமிலிருந்து கிடைத்தாலும் சரி, வெளிநாடுகளின் உதவிகள் அனைத்தும் நிபந்தனையற்றனவாகவே இருத்தல் வேண்டும். எந்த ஒரு நிபந்தனையையும் ஏற்றுக்கொள்வது நடுநிலைமைக் கொள்கைக்கும் உடனிருந்து வாழும் உயரிய இலட்சியத்துக்கும் குந்தகம் விளைவிப்பதாகும். உதவி வழங்க நிபந்தனை விதிப்பது அந்த உதவியில் உள்நோக்கமொன்று இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டுவதாகும். உள்நோக்கம் கொண்ட உதவிகளைப் பெறுவது நாட்டின் தன்மானத்துக்கு இழுக்குமட்டுமின்றி நாட்டின் எதிர்கால சுபிட்ச வாழ்வுக்கும் இடஞ்சல் ஏற்படுத்துவதாகும்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து ரூபா 25 கோடி பெறுமதியுள்ள உதவியைப் பெறுவதற்காக கிழக்கு ஜெர்மனியிலிருந்து ரூபா 20 கோடி பெறுமதியுள்ள உதவியைப்பெறும் பொருட்டு அந்நாட்டுடன் இலங்கை ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தைத் தேசிய அரசாங்கம் கைவிட உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இவ்வாறு செய்தல் நம் நாட்டின் கோஷ்டி சேராக் கொள்கையைப் பாதுகாக்க உதவாது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம். 'அந்த உதவியை நிராகரியுங்கள்—இந்த உதவியைத் தருகின்றோம்' என்பது கடுமையான ஒரு நிபந்தனையாகும் நிபந்தனையுடன் கூடிய உதவிகள் இச் சிறிய நாட்டை ஓர் ஆதிக்க முகாமினுள் இழுத்துச் சென்றுவிடுமென்பதில் இருதலை கருத்து இருக்கமுடியாது. இத்தகைய விஷயங்களில் தேசிய அரசாங்கம் நேருஜியைப்போல மிக மிகக் கவனமாகச் செயலாற்ற வேண்டும். மேலைய முகாமில் சார்ந்து விட்டது என்ற அபப்பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது.

நடுநிலைமை கொள்கையைக் கடைப்பிடிப்பதால் இலங்கைக்கு எல்லா வகையிலும் நன்மையுண்டு. அதனால் இரு முகாம்களிலிருந்தும் உதவி பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இலங்கைக்குக் கிடைக்கிறது. ஒருபக்கம் சார்ந்து நின்றால் அந்த வாய்ப்பை இழந்துவிடுவோம். அத்துடன் உலகப்போர் போன்ற நெருக்கடிகள் ஏற்படும்போது எதிர் முகாமின் தாக்குதலுக்கு உட்பட வேண்டிய நிலையும் ஏற்படலாம். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், நடுநிலை தவறாத நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பது தவிர வேறு வழியே [illegible]

சகலரும் சமசந்தர்ப்பம் பெற வழி பிறக்குமா?

அரசியல் தலையீட்டால் தடுமாறும் தமிழாசிரியர்கள்

இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் சகல துறைகளிலும் சமசந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தேசிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கம் வலியுறுத்துகிறது. இந்த வாக்குறுதி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்துவிடாமல் நாட்டுக்குப் பயன்படும் வகையில் அமுலுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். இவ்வாக்குறுதியை நடைமுறையில் கொணர்வதற்கேற்ற வாய்ப்பு ஆட்சிபீடத்துக்கு இன்று ஏற்பட்டுள்ளமையினால் காலம் தாழ்த்தாது காரியமாற்ற வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

சகல இன மக்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று தேசிய அரசாங்கம் தீர்மானித்திருக்கும் இவ்வேளையில், நாட்டைத் தமிழர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டார் திரு. டட்லி சேனநாயக்கா என்ற கோஷத்தைக் கிளப்பிவிடத் தலைப்பட்டுவிட்டனர் எதிர்க்கட்சியினர். இந்த வகுப்புவாதப் பூசலை முன்னின்று கிளப்புபவர்கள் வேறு யாருமல்ல; முன்னாளில், தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்று பாடுபட்டு வந்த மார்க்சீயவாதிகள்தான்!

பரவும் வதந்திகள்...!

செல்வநாயகம் — சேனநாயக்கா ஒப்பந்தத்தை அரசியல் பகடைக்காயாக வைத்து ஒரு இனக் கலவரத்தை மூட்டிவிட இந்த இடதுசாரிகள் முயன்றுவருவதாக அன்றாடம் செய்திகள் பரவிவருகின்றன. இவை வீண் வதந்தியாகவும் இருக்கலாம்!

இந்தப் புகார்கள் கிளம்புவதனால் தீமையே தவிர எவருக்கும் எக்காலத்திலும் நன்மையாகப் போவதில்லை. இத்தகவல்களில் உண்மை ஏதாவது இருக்குமா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இவை வீண் வதந்திகளாக இருக்குமேயானால் இவற்றைப் பரப்பும் தீய சக்திகளை அறிந்து அவற்றை சட்டத்தின் கைகளில் ஒப்படைக்க வேண்டியது பொலீசாரின் கடமை.

செல்வநாயகம் — சேனநாயக்கா ஒப்பந்தத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்யவும், கண்டி தலதா மாளிகைக்கு ஓர் யாத்திரை புறப்படவும், தேர்தலில் முறியடிக்கப்பட்ட சில சிங்களக் கட்சிகள் முயற்சித்து வருவதாகவும் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியை முறியடித்து வஞ்சம் தீர்க்க வகுப்புவாதத் தீயை மூட்டிவிடுவது கூடாது என்று சீனச்சார்புடைய கொம்யூனிஸ்ட் கட்சி ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது.

இந்த இரண்டு செய்திகளிலும் இடதுசாரிகளின் நடவடிக்கைகளையிட்டு நாட்டு மக்கள் ஐயுற இடமுண்டே!

நாட்டுக்குப் பொதுவான எல்லா விடயங்களையிட்டும் சாதக பாதகமான கருத்துக்களைக் கூறச் சகலருக்கும் உரிமை கொடுப்பதுதான்

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

சனநாயகப் பண்பு. எனினும் வகுப்புவாதத் தீயை மூட்டி இனக் கலவரத்துக்கு அடிகோலும் எந்தவொரு நடவடிக்கையைத்தானும் எந்த ஒரு ஆட்சியும் பார்த்துக் கொண்டு வாழாவிருக்க முடியாது.

போக்கு வரத்துத் துறை

புதிய அரசாங்கம் அமைந்த பின்னர், பொதுத்துறையில் உள்ள பழைய அரசாங்க அனுதாபிகள் சில விஷமத்தனங்களில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. பொதுமக்களுக்கு அன்றாடம் சேவை புரியும் போக்குவரத்துத் துறையில் தான் அசிரத்தையுடன் கூடிய சேஷ்டைகள் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

தேசிய அரசாங்கம் அமைந்தவுடனேயே இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிச் சாரதிகளும், 'கொண்டக்டர்' முதலியோரும் தங்கள் வயிற்றெரிச்சலை வெளியிடத் தலைப்பட்டனர். பொதுவாகத் தமிழ் துவேஷக் கோஷங்களையே இவர்கள் கிளப்பி வந்துள்ளனர். இதனால் பல இடங்களில் பல அனர்த்தங்களும் விளைந்திருப்பதாகத் தெரிகிறது.

ரயில்வே ஊழியர்களின் மத்தியிலும் இந்த ரீதியில் பல சங்கடங்கள் உருவாகியிருக்கின்றன.

மட்டக்களப்பில் அன்றொருநாள் இரவு மெயில் வண்டியை ஓட்டுவதற்குச் சாரதி கிடைக்கவில்லையாம். வேறோர் சாரதிக்கு அளிக்கப்பட்ட சுடமைக்கான உத்தரவுச் சீட்டை அவர் பிரயாணிகளின்முன் நிலையிலேயே கிழித்தெறிந்ததாகவும் கூறப்படுகிறது.

சில இடங்களில் புகை வண்டிகளே குறித்த நேரத்தில் புறப்படுவதாயில்லை. பஸ்களும் அவ்வண்ணமே. இதனால் பல்லாயிரக் கணக்கான பொது மக்களுக்கு பாரிய இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை விமான சேவையிலும் கணிசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த இரு நாட்களாக இலங்கை உள்துறை விமானப் போக்கு வரத்து ஸ்தம்பித்துள்ளது விமானம் ஓட்டிகளின் கெடுபிடியே இதற்குக் காரணம் என்றும் வர்ணிக்கப்படுகிறது.

விமான சேவைச் சீர்குலைவினால் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு நோயாளியின் அவசர தேவைக்கு கொழும்பு இரத்த வங்கியிலிருந்து அனுப்பி வைக்க வேண்டிய இரத்தம் உரிய காலத்தில் போய்ச் சேரமுடியாமல் போய் விட்டது என்று ஒரு செய்தி கூறுகிறது.

போக்கு வரத்துத் துறைகளில் அரசியல் காரணமாக இத்தகைய அசம்பாவிதங்கள் நேர்ந்ததென்றால் அதற்குரிய பரிகாரம் உடனுக்குடன் செய்யப் பட்டாலன்றி இத்துறை சீர் பெற முடியாது. காலம் கடந்தால் புண் புரை ஓடி உடனேயே செல்லரித்து விடுவதுண்டு. காலம் தாழ்த்தாது கடமை செய்து நிர்வாக இயந்திரத்தை செப்பனிட வேண்டும்.

அரசினர் வைத்தியசாலைகளிலும் அசிரத்தைகள் அதிகரிப்பதனால் ஆபத்துக்கள் அனேகம் ஏற்படுகின்றன. இங்கே, அரசியல் ஆதிக்கங்களினால் தான் அனர்த்தங்கள் விளைகின்றன என்று கூறுவதற்கில்லை. எனினும், தேவையற்ற சுணக்கங்களை நீக்குவதால் பல உயிர்கள், விலைப்பலியாவதைத் தடுக்கலாம்.

தமிழாசிரியர் இடமாற்றங்கள்

தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினைகளில் அரசியல் வாதிகள் புகுந்து பல சிக்கல்களை ஏற்படுத்தி வைத்துள்ளனர். இதனால் தேவையான இடமாற்றங்கள் வெகுவாகப் பின்போடப் பட்டுவருவதும், அவசியமற்ற இடமாற்றங்கள் இடம் பெறுவதும் சகசமாகிவிட்டது.

பல வருடங்களாக தொடர்ந்து துன்பம் அனுபவிப்பவர்களுக்கு கடந்த காலங்களில் விமோசனம் கிடைக்கவேயில்லை. உள்ளூரிலேயே தொழில் கிடைத்த நாள் முதல் பணிபுரியும் ஆசிரியர்கள் தொடர்ந்து தங்கள் ஊர்களிலேயே வாசம் செய்கின்றனர். இந்தப்பாகுபாடு நிலவுவதற்கு ஒரளவு அரசியல் வாதிகளின் தலையீடே காரணம் என்றும் கூறலாம்.

ஆசிரிய இடமாற்றப் பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் பேசும் மக்களின் ஒரு அங்கமான மலைநாட்டுத் தொழிலாளர்களின் குழந்தைகளும்,

(பக்கம் [illegible] பார்க்க)

இலங்கையின்புதியபிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா உண்மையான நடுநிலைமை வெளிநாட்டுக் கொள்கையொன்றினைக் கடைப்பிடிப்பதாகக் கூறியுள்ளாரென்றும், அதன் உண்மையான கருத்து அமெரிக்க முகாமுக்குச் சாதகமாக இருப்பதுதானென்றும் உலகப் புகழ்பெற்ற 'டைம்' என்றும் அமெரிக்கச் சஞ்சிகை ஏப்ரல் 2 ந்திகதி எழுதியுள்ளதாக அறிகின்றோம். இம்மாதிரியான பிரசாரத்துக்கு உடனுக்குடன் தேசிய அரசாங்கம் மறுப்பு தெரிவிப்பது அவசியமாகும். இல்லையேல் நம்நாட்டு நடுநிலைமைக் கொள்கையின்பால் உலக அரங்கில் தப்பபிப்பிராயம் ஏற்பட வழிபிறக்கும்.

ஆதலின், புதிய தேசிய அரசாங்கம் நிர்ப்பந்தங்களுக்கோ, நிபந்தனைகளுக்கோ அட்படாமல், தராசு முனையோல நடுநிலை நின்று நடுநிலைமைக் கொள்கையையும் உடனிருந்து வாழும் உயரிய இலட்சியத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மொழிவழித் தொழிற் சங்கங்களின் மே தின ஏற்பாடு

கலை, இலக்கிய மன்றங்களுக்கு எ. வி. ச. செயலாளர் வேண்டுகோள்

மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டங்கள் இம்முறை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெறும் என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. வே. தங்கவேலு நமது நிருபரிடம் கூறினார். இம் மேதினக் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் கலந்துகொள்ள விரும்பும் கலை, இலக்கிய மன்றங்களும் எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமை நிலையத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணமும் அவர் வேண்டியுள்ளார்.

மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் வளமை போன்று இம்முறையும் சிறப்பாக நாலு இடங்களில் நடைபெறும். எழுதுவினைஞர் சங்கத்தின் சிறப்பு மேதினக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறும். யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களிலும் எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையில் ஏனைய மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி மேதினக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடாத்துவார்கள்.

வே. தங்கவேலு

மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் சகல உதவிகளையும் செய்ய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி முன் வந்திருப்பதாகவும் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. வே. தங்கவேலு சங்கத்தின் சார்பில் கலந்துகொள்வார். மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டத்தில் எ. வி. சங்கத் தலைவர் திரு. சே. கோடீசுவரன் சங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்வார். இதர இடங்களில் நடைபெறும் கூட்டங்களிலும் எ. வி. சங்க முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று தெரிகிறது.

மொழிவழித் தொழிற்சங்கங்களின் மேதினக் கூட்டங்களில் இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரதிநிதிகளான திரு. அ. அமிர்தலிங்கம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், மு. எல்லாளன், செ. கலியபெருமாள் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிகிறது.

இம் மேதினக் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் பங்கு கொள்ள விரும்பும் கலை, இலக்கிய மன்றங்களையும், பொதுக் கழகங்களையும் 676, காலி வீதி, கொழும்பு—3-ல் உள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையுடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளும் வண்ணம் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வே. தங்கவேலு ஒரு அறிக்கை மூலம் வேண்டியுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் கழகமும் மேதினக் கூட்டத்தை மலையகத்தில் சிறப்பாக நடத்த முயற்சிகள் எடுத்து வருவதாக நமது அட்டன் நிருபர் தெரிவித்துள்ளார். இ. தொ. கழகத்தின் மேதினக் கூட்டத்தில் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்வார்கள் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கங்களின்

மாணவ ஆசிரிய பரீட்சையை மீண்டும் நடாத்துக

கல்வி அமைச்சரிடம் கா. பொ. இ. வேண்டுகோள்

தமிழ்ப்பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும்முகமாக மீண்டும் ஒரு மாணவ ஆசிரியர் பரீட்சையை நடாத்தும்வண்ணம் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள ஒரு மகசரில் வேண்டியுள்ளார். மாணவ ஆசிரியர் தேர்வில் சிங்கள வாலிபர்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தமிழ் வாலிபர்களுக்குக் கொடுக்க பழைய அரசாங்கம் தவறிவிட்டமையினால் இப்பரீட்சையை மீண்டும் ஒரு முறை தமிழ்ப் பகுதிகளுக்கு நடத்தவேண்டியது அவசியமென்று அம்மகசரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள கல்லூரிகளின் நிலைமையை விளக்கி கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ள ஆறு அம்சத் திட்டங்களைக்கொண்ட ஒரு மகசரிலேயே திரு. இரத்தினம்இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இத் திட்டங்கள்பற்றி கல்வி அமைச்சின் சிரந்தரச் செயலாளருடனும் திரு இரத்தினம் ஆலோசனை நடாத்தியுள்ளார் என்று தெரிகிறது.

கிளிநொச்சித் தொகுதியில் உள்ளசல்லூரிகள் பற்றி திரு. இரத்தினம் சமர்ப்பித்த மகசரில் குறிப்பிட்டிருப்பதாவது:-

மாவித்தியாலயங்கள் அனைத்திற்கும் விஞ்ஞான ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் உடன் அனுப்பப்படுவதுடன் விஞ்ஞான உபகரணங்களும் அனுப்பப்பட வேண்டும்.

காலியாக உள்ள ஆசிரியர் பதவிகள் 1-5-65க்கு முன் நிரப்பப்படவேண்டும்.

மாணவ ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 22 பேர் பதவியேற்கமறுத்துவிட்டார்கள். இவர்களின் இடத்திற்கு பழைய பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த 22 பேர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

கிளிநொச்சி மாவித்தியாலயத்திற்கான கட்டிடத்தை உடன் கட்டித் தரும்படி தாணி அபிவிருத்தித் திணைக்களத்தை கல்வி அமைச்சு பணிக்க வேண்டும்.

புயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடங்கள் உடன் திருத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கியின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இன்றைய தேசிய அரசாங்கத்திற்கு தமிழ் அரசியல் வாதிகள் ஆதரவு கொடுப்பதிலிருந்து. இன்றைய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையில் மாற்றமிருக்க வேண்டும். அது பற்றி எதுவும் இன்னும் தெளிவாகவெளியாகவில்லை. இந்த நிலையில் வங்கியின் திடீர் மொழி மாற்றம் காலமுந்திய செயல் என்றே கருதுகிறோம்" என்று தமிழ் ஊழியர்கள் ஆணைக்குழுவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்களாம்.

காங்கேசன்துறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் அரசியல் காரணங்களினால் ஒதுக்கப்படுவது வருந்தத்தக்கதே.

இத்துறைமுக அபிவிருத்திக்கான சகல புள்ளிவிபரங்களையும் நான் மீண்டும் உங்களுக்கு கூற வேண்டுமென்பதல்ல. சகல விபரங்களும் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் உள்ளன. இவற்றைப் பரிசீலனை செய்து துரிதமாக இத்துறைமுக அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகலரும் சமசந்தர்ப்பம்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுமேயாவர்.

பயனற்ற சேவை

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து பல வருடங்களுக்கு முன்னர் மலை நாடுகளுக்கும் ஏனைய சிங்களப் பிரதேசங்களுக்கும் கடமையாற்றச் சென்ற ஆசிரியர்கள் ஆண்டாண்டு தோறும் தங்கள் குடும்பங்களையும் சுற்றம் குழலையும் நினைந்தே தவிக்க வேண்டியிருக்கிறது. சொந்த ஊருக்கு இடமாற்றம் தேடி அலைந்து ஏமாற்றப்பட்டமையினால் இவர்கள் ஓரளவு விரக்தி மனப்பான்மையுடன் புரியும் தொண்டு உண்மையிலேயே மாணுக்கர்களுக்குப் பயன்படும் என்று சொல்லுவதற்கில்லை.

தொடர்ந்து தங்கள் சொந்த ஊர்களிலே கடமை பார்த்துப் பழகிய ஆசிரியர்களை வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்தால் உடனடியாக ஏதாவது சாக்குப் போக்குக் காட்டி தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்ச்சிறார்கள் தரமான கல்வி பெற முடியாத நிலையில் வேற்று மொழியான சிங்களத்தைக் கற்க முற்படுகின்றனர்.

மலையகச் சிறார்களுக்குசிங்களத்தைத் தெரிக்க முயலும் சிங்கள வெறியர்களுக்கு இச் சந்தர்ப்பம் வெல்லப்பாக ஆகிவிடுகிறது. தங்களின் சுயநலத்தை ஓரளவு விட்டுக், கொடுத்தாவது நமது இனத்துக் குழந்தைகளுக்கு தமது தாய் மொழி உணர்வை ஊட்ட இத்தமிழாசிரிய சமூகம் முன்வர வேண்டும்.

புதிய கல்வி அமைச்சரின் இடமாற்றத் திட்டங்கள்

ஆலோசனைகூறும் அரசியல் வாதிகளும் ஆசிரிய சங்கங்களும் இத்திட்டங்களை அலசி ஆராய்ந்து தக்கபடி நடந்து கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறோம்.

அயல் நாட்டுக் கொள்கை

புதிய அரசாங்கத்தின் அயல் நாட்டுக் கொள்கையில் பெரியமாற்றம் ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இம் மாற்றங்களினால் கொம்யூனிச சார்பு நாடுகள் இதுவரை கடைப்பிடித்து வந்த 'ஆதிக்கம்' ஓரளவு ஆட்டம் காணும் என்று நம்பப்படுகிறது.

குறிப்பாக சீனாவுடன் பழைய அரசாங்கம் கொண்டிருந்த ஒட்டுறவினால், பண்டைய காலம் முதல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த கலை, கலாச்சாரம், பண்பாடு, மதம் ஆகிய துறைகள் பாதிக்கப்பட்டு விடக் கூடிய தொரு நிலை உருவாகியிருந்தது.

கொம்யூனிஸ்ட் சீனா தனது இந்தியாவுக்கு எதிரான பிரச்சார இயக்கங்களுக்கு இலங்கையை ஒரு நிலையமாகப் பாவித்து வந்திருக்கிறது என்று கூறப்பட்டுவந்தது. அண்மையில் நடைபெற்ற கேரளத் தேர்தலின் போதும் சீனச் சார்பு பிரசுரங்கள் இலங்கையிலிருந்து அச்சிட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்பட்டது.

சீன-இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றிலிருந்து சீனாவுடன் இலங்கை நடத்தும் வர்த்தகம் அநேகமாக முடங்கிவிடுமென்றே வர்த்தக வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனியுடன் நடைபெறும் வர்த்தகமும் மந்த நிலை அடையுமெனத் தெரிகிறது. கிழக்கு ஜெர்மனியிலிருந்து ரூபா 200,000,000 பெறுமதியுள்ள உதவிகளைப் பெறுவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் கைவிடப்படலாமென்றும், இதனையொட்டி இரு நாட்டு வர்த்தகமும் பெருமளவு பாதிக்கப்படலாமென்றும் தெரிகிறது. ஆனால் மேற்கு ஜெர்மனியுடன் சிறந்த முறையில் வர்த்தகம் நடைபெறலாமென்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வழங்குவதாக பிரிட்டன் ஏற்கனவே வாக்களித்துள்ளதென்றும், அமெரிக்காவும் உதவி வழங்கத் தயாராயிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

இலங்கை இந்திய உறவை முறியடிப்பதானது இலங்கை தன்னையேதற்கொலைசெய்து கொள்ளுவதற்கு ஒப்பானதாகும். இத்தகைய தீய சக்திகள் இனி மேலும் இலங்கையில் தலைகாட்டாதிருக்க இலங்கையின் அயல் நாட்டுக் கொள்கை சீர்திருத்தப்படவேண்டியது அவசியம்.

கொம்யூனிஸ்ட் கட்சி....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக்கட்சி தமிழரசுக் கட்சியையும் இணைத்து தேசிய அரசாங்கத்தை நிறுவியதையிட்டு சிங்கள—தமிழ் வகுப்புவாதத்தைக் கிளறி கொம்யூனிஸ்ட்கட்சித் தலைமைப்பீடம்முயன்று வருகிறதாம். இந்தக் காரணத்தைச் சுட்டிக்காட்டியே வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும்கட்சி அனுதாபிகளும் தலைமைப் பீடத்தில் அதிருப்தி கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'கொம்யூனிச சித்தாந்தத்தின்படி வகுப்புவாதத்தைத் தூண்டுவது பாரதூரமான குற்றமாகக் கருதப்படுமாம். வகுப்புவாதத்தைக் கிளறுபவன் எவனும், இனத்துவேசத்தை தூண்டி கலவரங்களுக்கு வழிவகுப்பவன் எவனும் உண்மையான கொம்யூனிஸ்ட்டாகவிருக்க மாட்டான்' யு. என். பி—தமிழரசு கூட்டுறவை முறியடிக்க கொம்யூனிஸ்ட்கட்சி வகுப்புவாதத்தை தூண்டவும், இனக் கிளர்ச்சியை ஏற்படுத்தவும் முயலும் பட்சத்தில் தமிழ்பேசும் கொம்யூனிஸ்ட்கள் தங்களுக்கான ஒரு தனி நிறுவனத்தை அமைத்துக் கொள்ளுவதில் எத்தகையதவறும் இருக்க முடியாது' என்று ஒரு தமிழ் கொம்யூனிஸ்ட் பிரமுகர் கருத்து வெளியிட்டுள்ளார்.

'எத்த' என்ற பெயருடன் கொம்யூனிஸ்ட்கட்சி தலைமைப் பீடத்திலிருந்துவெளியாகும் சிங்களத் தினசரி வெளியிடும் செய்திகள் அனைத்தும் தமிழ் துவேசத்தை மூட்டும் வகையில் பிரசுரிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சில சிங்கள கொம்யூனிஸ்ட் வாதிகளும் கடந்த சில வாரங்களில் பகிரங்கமாகவே தமிழ் துவேசத்தை மூட்டும் வகையில் பேசியிருக்கின்றனராம்.

வடமாகாணத்திலுள்ள சில கொம்யூனிஸ்ட் பிரமுகர்கள் கொழும்பிலுள்ள தலைமைப் பீடத்துக்கு தங்கள் அதிருப்தியை மகஜர்கள் மூலம் தெரிவித்துள்ளனராம். அண்மையில் வடக்கிலிருந்து தூதுக்குழு ஒன்றும் கொழும்புக்குவர விருப்பதாகவும்கூறப்படுகிறது.

செய்யாத கடமை

மு. கனகராசன்

குட்டிக் கட்டி வைத்திருந்த கயிற்று வடத்தை அவிழ்த்து உருட்டி விட்டதைப் போல செறித்தடரிந்திருந்த அக்கானத்தை ஊடுருவி ஓடிக் கொண்டிருக்கிறது அந்தப் பாதை. பாதையில் கேட்ட குளம்பொலி காட்டையே அதிரச் செய்கிறது. வந்து கொண்டிருந்த இரு புரவிகளின் கால்களுக்கும் இன்று நல்ல வேட்டை. ஆமாம் இமைக்கும் நேரத்திற்கிடையில் தான் எவ்வளவு தூரத்தை கொன்று குவிக்கின்றன அவை! அவை வானாவிய இருஇராட்சத வைக்கோற் போர்களையா கட்டி இழுத்து வருகின்றன? சேச்சே! என்ன மடமை, வைக்கோற் போரல்ல, புழுதிப் போர். ஆமாம் தூசிப்படை!

நெடுந்தூர ஓட்டத்தின் பின் இரைக்க இரைக்க நின்ற புரவிகளிரண்டையும் கட்டுவிட்டு அவற்றில் பிரயாணம் செய்த இலங்கை ஈன்றெடுத்த அவ் வீரர்களிருவரும் அருகிலிருந்த கூடாரத்தை நெருங்குகின்றனர்.

பாசறையுள் கட்டிலிற் கிடந்த வண்ணம் பலத்த யோசனைக்காட்பட்டிருந்த கட்டிளங்காளையொருவன், யாரோ நுழைவதை யுணர்ந்து சிறத்தையைப் போல சிலிர்த்தெழுகின்றான்.

'அரசே! இப்போதுதான் வருகிறோம்' இருவரும் ஏக தொனியில் கூறி, வள்ளந்து வணக்கம் தெரிவித்து நிமிர்கின்றார்கள்.

'வரவேண்டும், வரவேண்டும், மித்ரசேனா! சிங்கசேனா! உங்களைத்தான் எதிர்பார்த்திருந்தேன்.....'

'மன்னா! வெற்றி நமது தான். ஐயம் வேண்டாம். கச்சனின் கோட்டை வீழ்ச்சியைத் தொடர்ந்து எல்லாளனின் முக்கியமான படைபலமிக்க விசிதபுரமே தங்கள் காலடிகளைத் தழுவின எனக்கேட்ட நமது தென்னகமே திரண்டுநிற்கிறது. இதோ வீரத் தளபதிசிங்கசேனர் கூட மகியங்கனையில் ஒருபடையை நிறுத்தி விட்டுத்தான் என்னுடன் புறப்பட்டிருக்கிறார்.' சிங்கசேனரின் முகத்தில் மத்தாப்பு செய்கிறது குறுநகை.

'என்னருமைத் தளபதிகளே! தங்களின் ஒவ்வொரு சொல்லும் என்னுடலில் குடான இரத்தத்தையும், புது வீரத்தையும் பாய்ச்சுகின்றன—எனது சைனியத்துக்கே புதிய எழுச்சியைத் தருகின்றன. நாம் வெற்றியின் புதல்வர்கள்! இதில் சந்தேகமேயில்லை! இதோ புறப்படுவோம்...'

'அரசே! அனுராதபுரத்தைப் பிடிப்பதென்பது அவ்வளவு எளிதானதென்று நான் நினைக்கவில்லை'—இது சிங்கசேனர்.

'ஆமாம் அரசே! எல்லாளன் தன் வீரத்தின் கடைவாயிலேயே காட்டக் காத்திருக்கின்றான்'

'உண்மைதான். அத்துடன் இன்னொன்றையும் நினைவிற் கொள்ளுங்கள். எல்லாளன் படைப்பலத்தைப் பெருக்கியுள்ளான் என்றே நாம் நினைத்திருந்தோம். அதுதான் தவறு! முதுமையும், தர்மமும், பக்தியும் எல்லாளனுக்குப் போரில் வெறுப்புணர்ச்சியைத் தூண்டி விட்டிருக்கின்றன. தூதுவர் சோழகத்துக்கு விரைந்திருக்கின்றனர். சோழ பூமியிலிருந்து தன் படைகள் வருவது இப்போதோ, இன்னும் சிறிது நேரத்திலோ இன்றோ, நாளையோ எனக் காத்திருக்கிறான் எல்லாளன். வீரத் தளபதிகளே! தென் பாரதம் அங்கே! தென்னிலங்கை இங்கே! இதைவிட அரிய சந்தர்ப்பம்—பொன்னான ஒரு நேரம்-இனி நமக்கு வாய்க்கப் போவதேயில்லை. நம் ராசகுருவும் கூறிவிட்டார் சாத்திரப்படி நல்ல நேரமென்று. இனியும் ஏன் தமாதம்...நம் வீரர்கள் காத்திருப்பர்'

'இதோ புறப்படுவோம்'

'நாளை சந்திரோதயத்துக்கு முன் அநுராதபுரம் நம் காலடியில்! ஹஹ் ஹஹ்...ஹா!'

'ஜயவேவா!'

'ஜயவேவா!'

கமுனுவின் புரவி துள்ளிப் பாய்ந்து விரைகிறது முன்னால்.

(2)

வானமே ஸ்தம்பித்து நின்று விட்டது, என்ன நேருமோவென்று மிகத் தெளிவாகத் திட்டமிட்டு போர் தொடுத்திருந்த கமுனுவின் வீரர்கள் ஆக்ரோசமாக பலியாகிக் கொண்டிருந்தார்கள்.

கமுனு எண்ணியதைப் போல அந்த 'இன எழுச்சிப் போர்' அத்தனை இலகுவாக ஒரே சூரியாஸ்தமனத்தோடு சமாதியாகி விடவில்லை. தொடர்ந்து பல சந்திரோதயத்தை வரவேற்றபடியேயிருந்தது. ஆனாலும் மாற்றான் எம்மை ஆள்வதா என்று கொப்புளிக்கும் உணர்ச்சி பெற்ற சிங்களச் சைனியம் சோர்ந்துவிடவில்லை. அதற்கேற்ப மாவீரன் கமுனு தன் வீரர்களுக்குப் புது உயிரும், புதுப் பலமும் ஏற்றியபடியே இருந்தான்.

போர் முடிவதாயில்லை. பல மாதங்களாக இரு தரப்பினரும் ஆவேசமாக வீர இரத்தம் பெருக்கியபடியேயிருந்தார்கள். கமுனுவின் சேனை பல முறை தோற்கவும் நேரிட்டுவிட்டது. எனவே அவனதுவீரர்கள் தளர்ச்சியடைந்தார்கள். இதைக் கண்ணுற்ற அந்த ரொகுனுரதாவின் இளவரசனுக்கு போரில் நம்பிக்கை நைந்துபோயிற்று. எனினும் பலமுறை தோற்றிருந்த தன் படைகளிடையே தம் வெற்றியைப்பற்றி சந்தேகம் கொஞ்சமேனும் தளிர்விட்டுவிடக் கூடாதே என்ற உறுத்தல் அவனது மனதில் ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது. எனவே அவசரமாகத் தன் மந்திரிப் பிரதானிகளைக் கூட்டி ஆலோசனை நடத்தினான். பலன்! நல்லதோர் தீர்வு கிடைத்துவிட்டது அவனுக்கு.

எந்த ஒரு செயலுக்கும் மூலாதாரமான ஓர் உணர்ச்சி தூண்டப்படல் வேண்டும். அந்த உணர்ச்சியைத்தான் கமுனு தூண்டிவிட்டான்.

புத்தமதம் ஈழத்தில் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது. 'பௌத்தம்' எல்லோரையும் கவர்ந்தது. புத்த பெருமான் அனைவரிதயத்திலும் கோயில் கொண்டார். அன்றே 'பௌத்தன்' என்றால் 'சிங்களவன்' என்ற நிலை உருவாகி விட்டிருந்தது. எனவே துட்டகமுனு எல்லாளனுடன் நடத்தும் போரை சிங்களவர்களுக்காக நடத்தும் போரென்றான்! சிங்கள இராச்சியமே அழிந்து மண்மூடப் போகிறதென பறைசாற்றினான்! சிங்களப் பிணத்தின் மீது வளரும் புல்லும் அழிக்கப்படப் போகிறதென தூபமிட்டான்! பௌத்த மதத்துக்காகத் தம் உயிரை அர்ப்பணிக்க வேண்டும் என முழங்கினான்! பௌத்தத்தின் புனிதத்தை வாழ்விக்க நடத்து



கின்ற கடைசியான இலட்சிய யுத்தம் என்று வருணித்தான். பலன்—?

கிடைத்துவிட்டது, அவன் எதிர்பார்த்ததற்கும் மேலாக. ஆமாம்! கமுனு மக்களின் அடிமனதின் உயிரையே தொட்டு அசைத்துவிட்டிருந்தானல்லவா? மக்களனைவரும் கொப்புளிக்கும் உணர்ச்சிகளுடன், வீரத்துடன் கமுனுவின் பின் அணிவகுத்தார்கள்.

(3)

'ஜயவேவா' எனக் கோசித்துக் கொண்டு துட்டகமுனுவின் படைகள் எல்லாளனின் அனுராதபுரக் கோட்டையை முற்றுகையிட்டு விட்டன.

'இரத்தமா? இலங்கையா?' வீரர்களின் ஒவ்வொரு நரம்பும் கேட்ட கேள்வி இதுதான். இந்தக் கேள்வி அவர்களின் வாள் முனைகளிலே 'பளீர் பளீர்' என மின்னின.

பயங்கர யுத்தம்! சோழன் தோற்கவில்லை. சிங்களம் வெல்லவில்லை. களத்து உதிரம் மாதல் கணக்கில் தன் வெறி கொண்ட அதரங்களால் அனுராதபுரத்தைக் கொஞ்சி மகிழ்ந்தது.

இந்தக் கட்டத்திலே தான் சமபலம் கொண்ட போரின் நிலை மகத்தானதொரு திருப்பு முனையை யடைந்தது.

ஆமாம்! கமுனுவுக்கு அது ஒரு மகத்தான திருப்பம்தான். இன்பமோ, துன்பமோ; வெற்றியோ, தோல்வியோ எதுவும் தனித்து வருவதில்லை. 'படை' சேர்ந்துக் கொண்டுதான் வரும். மங்களகீதமாயிருக்கும் அல்லது மரண ஓலத்தோடு முடியும். கமுனுவின் படையில் பம்பையும், பறையும் முழங்கி தேவலோகத்துக்கே செய்திசொல்ல புறப்பட்டுவிட்டன. அவர்தம் நெஞ்சங்களிலோ மங்கள இசையும், மத்தாப்பு மகிழ்வும்!—ஏன்?...

அந்தோ! என் செய்வது? வெண்ணெய் திரண்டு வந்த நேரமன்றோ?...என்னதான் நிகழ்ப்போகிறது...?

எல்லாளன் தன் கோட்டைக்குள்ளே! தமிழ் வீரர்களுக்கு வெளியுலகத்தோடு தொடர்பறுந்து விட்டது. களஞ்சியம் காலியாகிறது! உணவுப் பற்றுக்குறை! தானிய வறட்சி! பசி! பசி! பசி!

பசி வந்ததன்பின் மற்றவற்றிற்கு அங்கெங்கே வேலை. எல்லாளன் செய்வதொன்றறியவில்லை. ஏதாகிலும் செய்யத்தான் வேண்டும், என்ன செய்வது...

வீரவேந்தன் எழுந்து நிற்கிறான். அழைப்புமணி 'கணீர்' என கூப்பிடுகிறது. சேவகன் ஓடிவருகிறான். ஆம்! தமிழ் மன்னன் போருக்கு ஒரு முடிவெடுத்துவிட்டான்.

இந்த உணவுப்பஞ்சம் ஏற்படாதிருந்தால்,...? அல்லது தமிழ்ச்சேனைக்கு வெளியுலகத் தொடர்பிருந்திருந்தால்...? சோழநாட்டுப் படைகள்தான் குறித்த நேரத்திற்கு வந்திருந்தால்...? இல்லை, எல்லாளன்தான் ஒரு திருப்பத்தை புகுத்தவில்லையானால்...? ஆமாம்! ஈழத்தின் அரசியலே தலைகீழாக மாறியிருக்கும்.

(4)

துட்டகமுனு திகைத்து விட்டான், எல்லாளன் ஓலையைக்கண்டு! எல்லாளன்வரைந்திருந்தான்!

'தமிழரும் சிங்களவரும் ஈழத்தினிரு கண்கள். ஈழத்திலோ, அதன் அரசியலிலோ எவ்வித ஏற்றத்தாழ்வுமற்றவர். சிங்கள இனம் தோன்றுதற்குமுன் பிறந்தே ஈழத்தின் பழங்குடிகளான திராவிட இனத் தமிழர்கள் தம் நாகரிகமும், பெருமையுமிக்க இங்கு வாழ்பவர்கள். தமிழர்கள் பௌத்த மதத்தை வளர்த்தார்கள், வளர்க்கின்றார்கள். சகோதரர்களாக வாழும் தமிழருக்காகவும் சிங்களவருக்காகவும் நாம் இன்று சமர் செய்கின்றோம். ஏன்? ஆட்சிக்காக; இப்போரில் அன்பேயுருவான சைவர்களும், கருணையே உருவான பௌத்தர்களும் ஆயிரமாயிரமாக அழியத்தான் வேண்டுமா? நாம் ஏன் நல்லவர் பலரைக் கொன்று குவிக்கவேண்டும்? நமக்குத்தானே போட்டி. நாமிருவரும் தனித்தே போரிடுவோம். வெற்றி அல்லது வீழ்ச்சி! நம் போட்டியின் முடிவு இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கட்டும். இந்நல்ல முடிவை ஏற்பாயென நம்புகிறேன். உன் வீரத்தை நம்பி வரவை எதிர்பார்த்திருப்பேன்.

—'எல்லாளன்'

அவனால் நம்ப முடியவில்லை. தோல்வியின் தலைவாயிலிற் காலெடுத்து நுழைந்தபின் இவ்வோலை வந்திருப்பினும் எல்லாளனின் நேர்மையிற் களங்கம் கண்டானில்லை துட்டகமுனு. எனவே தன் வீரத்தைப் பூசித்து ஈழமாதேவியை வணங்கி எல்லாளனிடம் விரைகின்றான் அவன். ஏனெனில் அதுவே இலங்கையில் நடக்கும் கடைசிப் போராக இருக்க வேண்டும் என்ற அவனது எண்ணம், ஆசை, என்பதனால்தான்.

இரண்டு களிறுகள் பிளிறிக்கொண்டு கோரமாகச் சமர் புரிகின்றன. அநுராதபுரத்து பட்டத்து யானைமீது பராக்கிரமமிக்க வீர எல்லாளன். அவனின் பரந்த நெற்றியை விபூதியும் ஸ்ரீதிலகமும் அலங்கரிக்கின்றன. முறுக்கேறிய வயோதிபக் கரத்திலே வீரவேல். அந்தக் கவசமென்னஎல்லாளனின் மார்பிற்கென்றே உருக்கி வார்க்கப்பட்டதா? எவ்வளவு பரப்பு அதற்கு? கூரியகண்களிலே தமிழனுக்கேயுரித்தான ஆக்ரோசக் கனல்!

அதோ கமுனு! இளஞ்சிங்கமல்லவா அவனும்! கொதித்தோடும் உதிரம் அவனை வெறியனாக்குகிறது வெற்றி! அல்லது வீரசொர்க்கம்! இதற்கிடைபட்டது எதுவோ, எதுவும் வேண்டாம். இதுவே அவனின் உறுதி! துட்டகமுனுவின் இலட்சியம் இது.

போர்! போர்!! போர்!!

அநுராதபுரப்பட்டத்து யானைக்குப் படுகாயம். கமுனுவின் 'கந்துலா' அதைத் தாக்குகிறது. ஈற்றில்...ஐயகோ, ஈழத்தின் சக்கரவர்த்தி—தமிழ் மாமன்னன்—வீரத்தமிழ் மறவன்—எல்லாளன் தலையில் சாய்கிறான்!

யானைமீதிருக்கும் இளஞ்சிங்கத்துடன் தலையிலிருக்கும் வயோதிகப் புலிக்குத் தாக்குப்பிடிக்க இயலவில்லை. எனினும் தோல்வியைத் தழுவ எல்லாளன் தயாராயில்லை. ஒவ்வொரு துடிப்புடனும் தன்வாளைச் சுழற்றுகிறான்.

குற்றுயிராய்ச் சாய்ந்துவிட்டான் எல்லாளன். கமுனு அவனது எதிரியெனினும் வீரன், அரசகுலத்தவன்; இறங்கி, வீழ்ந்த வேந்தனைத் தாங்கிப் பிடிக்கிறான். என்ன பேசுவதென்றே புரியவில்லை அவனுக்கு. எல்லாளன் துட்டகமுனுவைநம்பிக்கை ஒளிவிடும் கண்களால் நோக்குகின்றான்.

'வேற்றே! தங்கள் வேண்டுகோளேதும் உண்டா? தங்களின் ஆசைஎதுவானாலும் கூறுங்கள் நிறைவேற்றி வைப்பேன்...'

(14-ம் பக்கம் பார்க்க)

"நிச்சயமாக மன்னா, நீங்களெப்படிப் புத்தமதத்தையும் வளர்க்க உதவி, சிங்களவரையும் தமிழரையும் சம அந்தஸ்துடன் ஆட்சி செய்தீர்களோ அதுபோல் நானும் தமிழரையும், சிங்களவரையும் பேதமின்றி நடத்துவேன்! இது சத்தியம்! என் வீரத்தின் மீது ஆணை!" எல்லாளனுக்கு வீரசொர்க்கம் காட்டிய கமுனுவின் வார்த்தைகள் இவை!

நடந்ததுவோ.....!

கமுனு தாயின் பேச்சைத்தான் கேட்டான்!

அல்லாமா இக்பால்

ஐ. செய்யது ஏ. மௌலானா

இழக்கு நாடுகளின் இலக்கிய வானில் என்றுமே மங்காப் பொலிவுடன் பிரகாசிக்கும் மகா கவிஞருள் இக்பாலும் ஒருவராவர். நாடு நலிவிலேவலுவடைந்த காலத்தில் இக்பால் இப்போதைய பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் பிறந்தார். இந்தியா அந்நியர்களால் ஆட்கொள்ளப்பட்டு, மக்கள் யாவரும் மீளாத்துன்பத்தில் சிக்குண்ட காலமது. சுதந்திர உணர்விழந்து மதிமயங்கிய மக்கள் கூட்டம் வாழ்ந்த நேரமது. அந்தகரும் நிலைதான் இக்பாலை உருவாக்கியது.

அமைதி இழந்த சந்தர்ப்பத்தில், மக்கள் மனங்களில் சுதந்திர தாகத்தை ஊட்டச் செய்து, அவர்கள் குருதியைச் சுறுசுறுப்படையுமாறு செய்தார். அதற்காகவேதம் மையும், தமது சேவையையும் அர்ப்பணித்தார். தமது கற்பனைச் சக்திமூலம் முழு இந்தியாவுக்கும் சுதந்திரம் வேண்டி புது உணர்வையும்—புதுத் தெம்பையும்—புது வழியையும் காண்பித்துத் தவிப்பெரும் புரட்சிக் கவியாகவும்—மாததீதுவமேதையாகவும்—தேசியக் கவியாகவும் எல்லோர் உள்ளங்களிலும் அல்லாமா குடிகொண்டார்.

இலட்சியவாதி

பாரத நாட்டின் பொலிவும்—புகழும் மேம்பட்டது. ஆனால் ஆங்கிலேயர் அதை அடிமைப் படுத்திவாழ்ந்த போது, அத்தனையும் குழியுள் மூழ்கின. சுதந்திரத்தோடு வாழ்ந்த சுதேசிகள் எண்ணவும்—கூறவும் இழிவான முறையில் நடாத்தப் பட்டார்கள். தங்களது பழைய நிலையை உணர்ந்து அவர்கள் ஓரளவு நிம்மதி எய்தினார்கள். இருந்தும் ஏதுபயனும் கிட்டாது போயிற்று. கவிஞர்கள் வெறும் பொழுதுபோக்குப் பாடல்களை இயற்றி இறுமாப்பெய்துகின்ற வேளை, 'இலட்சியத்தோடு கொண்ட கவிஞனே மேம்பட்டவன்' என்ற கருத்தைத் தந்த இக்பால் அப்போதைக்கு அந்த நாட்டின் தேவையை உணர்ந்தார். நிலையினைத் தெரிந்தார். வழி காட்டும் முறையினை வகுத்தார். தமக்குத் தாமே கொள்கையையும் வகுத்து மக்களை வழி நடாத்தி இப்படிக் கூறுகிறார்:-

'மௌனமே என் பேச்சு
மூங்கையே என் நாவு
என் கதையைப்
பொறுமையுடன்
கேட்டது கடமையன்று
ஹே...! இந்தியாவே
உன் நிலைமை
என்னை அழச்செய்கிறது
சகல கதைகளிலும்
உன் கதை
மிகவும் சோகமானது.'

என்று துக்கித்துக்கூறிவிட்டு-இந்திய மக்கள் யாவரும்தங்களது நாடு காக்க ஓடி வருமாறு இந்தப் பாணியில் உணர்ச்சி யூட்டுகிறார்:-

'நீ இந்தியாவைக்
கண்டதில்லையா
இதயமுள்ள யாரும்
போற்றாநாடல்லவா அது?
அதன் ஒவ்வோர் அணுவும்
உலகின் மீது வீசினாலும்
அந்தேஸ்! அதுபாழியிலும்
குருதியிலும்
கிடந்து தத்தளிக்கிறது.'

உளம் வெந்து உணர்ச்சியூட்டிய கவி இங்கே வீர நாதம் எழுப்புகிறது:-

'வானத்தின் அங்கியுள்ளே
இடி மறைந்து
இருக்கிறது
இந்தப் பாரத பூமியின்
புல்லானா நாம்
கவலையற்று நம்
கூடுகளில் தூங்கிக்
கொண்டிருக்க
இதுவன்று நேரம்'

என்கிறார்.

தேசியம்

தேசியம் தலை தூக்கவேண்டிய போது—சாகித்யம் தலை தூக்குகிறது. அதனால் தமது முயற்சிக்கும்-சுதந்திர அணிவகுப்பிற்கும் பங்கம் விளைவதை உணர்ந்த தேசிய புரட்சிக் கவி இக்பால் இங்கே:

'மதம் ஒருவரோ-
டொருவர்
பகைமை பாராட்டுமாறு
போதிக்கவில்லை.
ஹிந்து நமது தாயகம்
ஹிந்துஸ்தான்
நம்முடையது'

என்று தேசப் பற்றைநாட்டு மக்களுக்கு ஊட்டுகிறார்.

மனிதன் சகல ஆக்கங்களை விடவும் சக்தி வாய்ந்தவன் என்பதற்குப் பொருள் அவன் மானிடப்பிறவியாகப் பிறப்பது வல்ல. அவனால் மற்றவர் களுக்கு ஏதும் நன்மை பயப்பதுவாக இருக்க வேண்டும் என்பதற்காகவே பிறக்கிறான். அதற்காகவே இறைவன் இப்பரணியில் பலதையும் அவனுக்கு வரப் படுத்தினான். ஆனால் அதை மானிட சமூகம் மறந்து தானும்-தன் பாடுமே என்று அலைகிறது. அது உனது செயலல்ல நீ வந்த விடயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தவறுதே என்று இக்பால் இந்த முறையில் அவன் சிந்தனையைத் தூண்டுகிறார்:—

"நான் ஏன் ஒரு மலரில்
பனித்துளியாக விழக்
கூடாது?
அல்லது ஒரு சிப்பாயின்
மனைவி
தன் கணவனை வழியனுப்
புகையில்
வெளியாகும் ஒரு துளிக்
கண்ணீராக
(நான் ஏன் ஆகக்கூடாது)?
புழுதியில் கலந்து நான்
அமர வாழ்வடைவேன்
அதன் மூலம் உலகிற்குக்
காதல் நெருப்பின்
தன்மையை எண்பிப்பேன்"

என்கிறார். பிரயோசனத்துக்காக வாழுமாறு காட்டிய கவிஞரின் குரல் கேட்டு எழுந்த மனிதன் எப்படி அந்தப் பிரயோசனத்தைப் பிறருக்களிக்கலாம் என்று அலைகிறான். அதற்கும் இங்கே:—

"ஹா...! யாரைத் தேடி
அலைகிறாய்
நீ தான் பாதை, நீ தான்
வழிப்போக்கன், நீயே வழி
காட்டி.
நீயே தான் லட்சியமு
மாவாய்!!'

இக்பால் வழி காட்டுகிறார்.

இதே வழியில் சென்றவன் முடிவு இல்லாது தத்தளிக்கிறான். பின் தனக்குள் தானே சோர்வடைந்து விடுகிறான். இது என்ன வாழ்வு-அகமியம்-வாழ்க்கை என்று நொந்து கொள்ளும் இதயத்துக்கு மாகவி இந்தப் பாணியில் சுறு சுறுப்பூட்டுகிறார்:—

"(சிருஷ்டிக்) குயவனின்
பாணியும், சக்கரம்
சதா சுழல்வதால்
ஓயாது மாறுவதால்
அல்லவா
வாழ்க்கை எனும் பானை
உருப் பெறுகிறது!
சதமான வாழ்க்கையின்
மர்மம்.
முடிவற்ற மாற்றங்கள்
கொண்ட
அநித்யமேயாம்!!"

சுதந்திரம்

மக்களாட்சி சிறப்புடையது. ஆனால் மக்களை தமக்குத் துரோகம் செய்யும் ஆட்சியையும் சில வேளை தோற்றுவித்து வருகிறார்கள். அதனால் எண்ணிறந்த துன்பங்களுக்கு இலக்காகுகிறார்கள். சுதந்திரம் என்ற தூய நாமத்தின் பொருள் புலப்படாமல்-சுதந்திர வாளர்களே-சுதந்திரத்திற்குப் புறத்தே குழி தோண்டி விடுகிறார்கள், இதை அரசியல் மேதை அல்லாமா இங்கே எச்சரிக்கை செய்கிறார்:—

"உனக்கு அளிக்கப்
பட்டுள்ள சுதந்திரமான
இயல்பை அடிமைத்தனம்
மாசு படுத்த அனுமதி
யாதே பொய்யான
விக்கிரகங்களையும்,
உன்னையே பிணைத்துப்
போட்டு விடும்
குருமார்களையும்
சிருஷ்டியாதே"

அமைதியிலே—இருளகற்றும் சாதனம் மெழுகு வர்த்தி. ஆனால் அது எதுபலனும் பிறரால் பெறுது தனது கடமையைச் செய்து விட்டு ஓய்ந்துவிடுகிறது. இப்படியே உலகிலும் உத்தமர்கள் அமைதியிலே அகமியத்தைத் திருத்தி மடிய வேண்டும், என்ற தத்துவத்தை தத்துவஞானி இக்பால் எதிர்த்தார். வெறுத்து வேதனை அடைந்தார். அமைதியில் கடமை செய்து அழிவெனும் ஆனந்தத்தைப் பெறுவதை விட—உயரிய லட்சியத்துக்காகவும் தீவிரமாகப் போராடி அழிதல் இன்பம் எய்துவதே சிறப்புடையது என்கிறார். அதைத் தமது தத்துவ மொழியில்:

மெழுகு திரி எரியும்
உன் கதையை
நிறுத்தப்பா!
அதைக் கேட்டுக் கேட்டுக்
காது புளித்துப் போய்
விட்டது
தீவிரமாகப் போராடி
இன்பமாய் எரிந்து மடியும்
ஈசலைத் தான்
நான் மதித்துப்
போற்றுகிறேன்."

என்று கூறுகிறார்.

எதிர்ப்பு இல்லாத வாழ்வு உப்பில்லாத உணவு. புகழ்வோர் மத்தியில் வாழ்வதை விட எதிர்ப்பவர் அரங்கில் வாழ்வதில் தான் இலட்சியவாதி ஈடேற்றம் காண முடியும். தன் இலட்சியத்தை வெற்றியோடு கொண்டு செல்ல முடியும். அப்படியானவனே இலட்சிய வாதியாவான்.

"ஆம் நாடு கரை காணாத
ஒரு கடல்
அதன் கண் வர்ண
சாலங்கள் வீசும்
முத்துக்கள் பல வுண்டு
எனினும் சுழுமீன் அபாய
மில்லாத ஒரு கடலிலே
நான் எனது படகை
ஓட்டிச் செல்ல
மாட்டேன்"—என்கிறார்.

வைரி இல்லாது சமுதாய சிற்பிகள் உருவாக முடியாது. அப்படி உருவானால் அவர்கள் சமூக சீர்திருத்த செம்மல்களாக மிளிர முடியாது. அதற்கு ஆதாரமாக அகிலம் புகழும் அண்ணல் முகம்மது (ஸல்) அவர்களை மேற்காட்டி எம்மை ஊக்கு விக்கிறார் கவிஞர்:-

"இந்த முகம்மதால்,
எங்கள் மனமும் விண்டு
போயிற்றுஅவர் போதனை
கள்கம்பாவின்ஒளியைமங்கச்
செய்து விட்டன.
கைஸரும்—குஸ்ருவும்
வேண்டாமென்கிறார்
அவர்
எங்களிடமிருந்து
இளைஞர்களையும் தம் பக்கம் இழுத்துக் கொண்டார்
அவர் தாக்குதலால்
லாத்தும்—மனாத்தும் தூள்
தூளாகி விட்டன
ஏ உலகமே, நீ அவர்
பேரில் வஞ்சம் தீர்த்துக்
கொள்.
அவர் மதத்தில் சாதி
பேதங்களைக் காணோம்,
அவர் குறைசிக் கூட்டத்தாராயினும் அராபியர்கள்
உயர்ந்தோர்களல்லர்
என்கிறார்.

(12-ம் பக்கம் பார்க்க)

இராமன், முத்தமிழ்ப் புலவன்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் வாய் திறந்து பேசியிருந்தால் பரதன் புகழையே பேசியிருப்பான். இராமனுக்கு இலக்குவன் எப்படியோ, அப்படியே பரதனுக்குச் சத்துருக்கனன். ஆனால், இராமன் புகழை இலட்சுமணன் பேசுவது காப்பியத்தின் கதைப் போக்குக்குப் பொருந்துவதாகும். ஆனால், பரதனுக்கு சத்துருக்கனன் புகழ் பொருந்தாது.

பரதன் ஒரு புதிர்

சுமந்து பெற்ற கோசலை, அன்புகாட்டி வளர்த்த தந்தை, கோசலத்தின் சக்கரவர்த்தி, கானகத்து முனிவர்கள், வானகத்துத் தேவர்கள், கங்கைப் புறத்து வேடர்கள், குரக்கினத்தார், பறவை வேந்தன் சடாயு அனைவருமே இராமனை ஏகத்தலைவனாக ஏற்றுக் கொள்கின்றனர். இதற்கு விலக்கானவன் போலப் படைக்கப் பட்டிருக்கிறான் சத்துருக்கனன். ஆகவே அவன் வாய்திறந்து பேசியிருந்தால், சொல்லுக்குச் சொல்தன் தலைவன் பரதனையே புகழ்ந்திருப்பான். இங்கொரு சிக்கல். இலக்குவனுக்கு நிகரானவன் சத்துருக்கனன் ஆனால் இராமனுக்கு நிகரானவனல்ல பரதன். இதனை அவனே ஏற்கிறான். 'ஆயிரம் ராமர் நின் கேழ் ஆவரோ தெரியினம்மா' 'எண்ணில் கோடி ராமரும் நினைக்கினை யாவரோ' என்பதும், காயுரை கேட்டுத் தந்தையுதவிய தரணிதன்னைத் நீயினையென்ன நீத்த நியாகத்தால் கிடைத்த பெருமைகளாம்.

இதனாலேயே பரதன் இராமனுக்கு இணையாகிவிட முடியாதல்லவா. இந்த நிலையில் பரதன் புகழ் பாடச் சத்துருக்கனனை அனுமதித்திருந்தால், அது காப்பிய நாயகனுக்குப் போட்டித் தலைமை தோற்றுவிப்பது போலாகும். அதனால், மைந்தன் சத்துருக்கனனைக் கதை முடியும் வரையில் பேசாப் பாத்திரமாகவே செய்து விட்டார் கம்பர்.

இராமாயண மைந்தர்களிலே இலக்குவன் ஒரு தனிப் போக்குடையவன். இராமன்பால் அவனுக்கு இருந்தபக்தி, மற்றவரிடமுள்ள சிறப்புக்களைக் காண முடியாதபடி அவன் கண்களைக் குருடாக்கி விட்டது. சித்திர கூடத்திலுள்ள இராமனைச் சந்திக்கப் பரதன் வரும் கோலத்தைக் கண்ட இலக்குவன், இராமனுடன் போரிடத்தான் பரதன் வருகின்றான் என்று முடிவு செய்து கொள்கிறான். இது, அவனுடைய அறியாமையன்று, அவன் அறிந்து கொள்ள முடியாத புதிராகப் பரதன் படைக்கப்பட்டிருப்பதுதான்.

தந்தை புரியா மைந்தன்

இராமன் வனம் புகும் வரை நாம் பரதன் குரலைக் கேட்க முடியவில்லை. கேட்டிருந்தால், அவனுடைய குணநலன்களைப் புரிந்து கொண்டிருக்க முடியும். அந்த நிலைக்கு இடந்தராமல், இராமன் வனம் புகும்வரை பரதனை மௌனப் பாத்திரமாக ஆக்கி விடுகின்றார் கம்பர். நாம் என்ன, பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் கைகேயிகூட அவனுடைய போக்கினைப் புரிந்து வைத்திருக்கவில்லை. அதனால், தன்னுடைய திறமையால் இராமனிடமிருந்து கவர்ந்து தரும் மணிமுடியைத் தன் மகன் ஏற்பானா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிட்டாள் கைகேயி. பரதனைத் தன் வயிற்றில் சுமந்து பெற்றதன்றி, கைகளில் ஏந்தி வளர்க்கும் பாக்கியதை அவள் பெறுதவள். இராமன் ஒருவனிடமே உள்ளத்தைப் பறிகொடுத்து அவன் ஒருவனையே தன் பிள்ளையாகக் கருதி வளர்த்தாள். ஆதலால், மந்தரையிடம் உபதேசம் பெறும்வரை பரதன் அவள் மனத்தில் இடம் பெறவில்லை.

தயரதன் கூட மைந்தன் பரதனை அறிந்து வைத்திருக்கவில்லை. கைகேயி கவர்ந்து தரும்மணி முடியை பரதன் ஏற்கமாட்டான் என்ற துணிவு அவனுக்கு ஏற்படவில்லை. கைகேயிடம் 'கொள்ளான் நின்சேய் இவ்வரசு' என்று கூறிய அவன், அந்த எண்ணத்திலே ஊன்றி நிற்க முடியாமல், 'அன்னான் கொண்டாலும், நன்னாளது இந்த நாநிலம்' என்று கூறித்தவிளாடும் மனத்தைக் காட்டுகிறான் தயரதன்.

கம்பன் திறமை

பரதனுடைய குணநலங்களைத்—தியாக உணர்வை—இராம பக்தியை—கைகேயி அறிந்திருந்தால், தயரதனிடம் வரங் கேட்கவே துணிந்திருக்க மாட்டாள். அதனால், கதையின் வளர்ச்சி தடைப்பட்டிருக்கும்.

தயரதனேனும் அறிந்திருந்தால், பரதனைக் கொண்டே கைகேயியின் மனதை மாற்ற முயன்றிருப்பான். அதனால் கதையில் சிக்கல் தோன்றியிருக்கும்.

பரதன் நகரில் இருந்திருந்தால் அண்ணனை வனம் செல்ல ஒட்டாமல் தடுத்துக் கதையின் திருப்பத்திற்கே தடைக்கல்லாக இருந்திருப்பான். அதனால்தான் யாரும் புரிந்து கொள்ள முடியாத பாத்திரமாகச் செய்யும் பொருட்டு அவனைப் பேசாப் பாத்திரமாக்கி கதையில் திருப்பம் ஏற்படும் வரை அவனைக் கோசலை நாட்டில் தங்கும்படி செய்து விடுகின்றார் கம்பர்.

★ [காரைக்குடிக் கம்பன் கழகத்தின் ஆதரவில் ஆண்டுதோறும் மார்ச்மாத நடுப் பகுதியில் கம்பன் விழா சிறப்புற நடைபெற்று வருகிறது. இம்முறையும் விழா மார்ச் மாதம் 15, 16, 17ம் திகதிகளில் காரைக்குடியிலும் கடைசி நாளாகிய 18ம் திகதி கம்பன் சமாதி இடம் பெற்றுள்ள நாட்டரசன் கோட்டையிலும் சிறப்பாக நடைபெற்றது. நாட்டரசன் கோட்டையில் நடைபெற்ற விழாவுக்கு தலைமை வகித்த திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார் நிகழ்த்திய உரையின் தொகுப்பே இக்கட்டுரை.]

அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது ஏன்?

மொழி அமுல் பற்றிய நிலை வரவேற்கத்தக்கது

கன்னிப் பிரசங்கத்தில் கதிரவேற்பிள்ளை விளக்கம்

"தமிழையும் சிங்களத்தையும் அந்த அந்த இடத்து நிர்வாக மொழியாக அமுல் நடத்த வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கை வரவேற்கத்தக்கது. அதற்காக நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு மிகவும் நன்றி செலுத்துகிறோம். இந்தக் காரணத்தினாலேதான் நாங்கள் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்து சேர்ந்தியங்கத் துணிந்திருக்கிறோம்" என்று அரியணை உரையை வழி மொழிந்து தனது கன்னிப்பேச்சைப் பாராளுமன்றத்தில் நிகழ்த்துகையில் கோப்பாய் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினார்.

எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் திரு. 'மைத்திரிபால சேனநாயக்கா வீட்டுக்கு இலட்சுமியை எடுத்ததுபோலவே நாட்டையும் கணிப்பார்' என்று கூறிய திரு கதிரவேற்பிள்ளை 'அவர் வீட்டுக்கு இலட்சுமியை எடுத்ததைக் கொண்டு நான் அவரை அத்தான் என்றோ, மச்சான் என்றோ கூற வேண்டிய நிலையில் இருக்கிறேன்' என்றும் கூறினார்

அரியணை உரையை வழி மொழிந்து திரு. கதிரவேற்பிள்ளை பேசுகையில் மேலும் கூறியதாவது:

"கனம் சபாநாயகரவர்களே, கௌரவ சேவாகெற்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் சமர்ப்பித்த பிரேரணையை ஆதரித்து வழி மொழிய நான் மிக மகிழ்ச்சியுடன் எழுந்து நிற்கின்றேன். இந்த மகிழ்ச்சி இரட்டிப்பாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கின்றது கடந்த ஒன்பது ஆண்டுகளாக சிம்மாசனப் பிரசங்கம் பற்றிய நன்றி தெரிவித்தற் பிரேரணையை எந்த ஒரு தமிழனும் ஆதரித்து வழி மொழிந்ததாக இல்லை. இன்று ஒரு தமிழன் சிம்மாசனப் பிரசங்கத்தின் நன்றி தெரிவித்தற் பிரேரணையை ஆதரித்து வழிமொழிவது ஒரு விசேட அறிகுறியாக இருக்கின்றது.

நன்றியும் மகிழ்ச்சியும்

"நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு தேசிய அரசாங்கத்தில் இந் நாட்டு நலனுக்காக ஒத்துழைக்க முன்வந்துள்ளோம் என்பதே அந்த விசேட அறிகுறி. கடந்த ஒன்பது ஆண்டுகளாக நாங்கள் பட்ட கஷ்டங்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பல மேடைகளிலும், இங்கும் வெளியிலும் எடுத்து கூறியிருக்கின்றோம். இன்று நல்லவர்கள் சேர்ந்து நாட்டில் சனநாயகம் வளர வேண்டும் என்றும், இந்த சனநாயகத்தின் மூலம்தான் எல்லோருக்கும் சுதந்திரம் கிடைக்கும் என்றும் உறுதியுடன் இயங்கும் காரணத்தினால் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள்—தமிழ் பேசும் மக்களின் முக்கிய பிரதிநிதிகளாக இருக்கும் நாங்கள் அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கின்றோம். இத்தகைய நல்ல தோர் நிலைமையை உருவாக்கியமைக்காக இந்த அரசாங்கத்துக்கு நாங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.

"சனநாயக அடிப்படையிலே தான் எங்கள் உரிமைகளைப் பெறக்கூடும் மனித அடிப்படை உரிமைகள் இந்த நாட்டில் நிலவக்கூடும் என்ற உறுதி இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்தில் இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய சம்பவம்

"கனம் சபாநாயகரவர்களே, இந்த இடத்தில் இன்னுமொரு விசயத்தை எடுத்துக்கூற விரும்புகின்றேன். இந்த நாட்டில் முக்கிய மதமாக இருக்கும் பௌத்தத்துக்கு உரிய இடம் கொடுக்கும்பொழுது மற்றைய மதங்களுக்கு எவ்வித பாதகமுமில்லாமல் நடந்து கொள்ளப் போவதாகச் சிம்மாசனப் பிரசங்கத்திலே கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. பௌத்தத்துக்கு உரிய இடம் கொடுக்கும் பொழுது பௌத்த மதத்தின் உயர்ந்த பண்பாட்டுக்கும் கொள்கைகளுக்கும் அமைவாக இடம் கொடுக்கப்படும் என்பதில் எனக்கு எந்த விதமான ஐயமும் இல்லை. அப்படிக் கொடுக்கும் பொழுது எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் கூட அதை ஆதரித்து அந்தப் பண்பான, உயர்ந்த கொள்கைகளை நடைமுறையில் நடத்த வேண்டுமென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த இடத்துக்கு நான் புதியவனாக இருந்த காரணத்தினால், முதற் கூட்டத்தொடரிலே நடந்த சில விசயங்கள் என்னுடைய மனதில் ஒரு வித தாகத்தை உண்டு பண்ணியது. அதைப் பற்றியும் இந்த இடத்தில் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

'வீட்டைப்போல் நாட்டையும் கணியுங்கள்'

"பௌத்த மதத்தின் உயர்ந்த தத்துவங்களைப் படித்த ஒருவன் என்றமுறையிலே, கோப்பாய்த் தொகுதியிலே உயர்ந்த பௌத்த மதத்தின் அடிப்படையிலே சாதி, சமய வித்தியாசம், பாராட்டாமல் வீட்டுக்கு லட்சுமியை எடுத்த கௌரவ மதவாச்சி பிரதிநிதி (திரு. மைத்திர்பால சேனநாயக்க) அவர்கள் ஒரு விசயத்தை எடுத்துச் சொன்னார். அவர் வீட்டுக்கு லட்சுமியை எடுத்த அந்த அடிப்படையிலே தான் நாட்டிற்கு நல்ல கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டில் நடத்திய உயர்ந்த பண்பான கொள்கையை நாட்டிலும் நடத்த வேண்டும் என்று அவரைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"அவரை நான் அத்தான் என்றோ, மச்சான் என்றோ கூற வேண்டிய நிலையிலே இருக்கிறேன். என்னுடைய வீட்டுக்கு முன்னாலே, மிகவும் பண்பான, கௌரவமான, கடவுள் நம்பிக்கையுடைய ஒரு கிறிஸ்தவ தமிழக் குடும்பத்திலிருந்து தன்னுடைய வீட்டுக்குச் சேர வேண்டிய லட்சுமியைத் தெரிந்தெடுத்தார். இந்த நாட்டில் பௌத்தத்துக்கு உரியஇடம் கொடுக்கப்படும் பொழுது, எதிர்க் கட்சியில் உள்ளவர்களும், நாட்டு மக்களும் பௌத்தத்தின் உயர்ந்த பண்பாட்டின் வழியிலே தான் அந்த இடத்தைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

"மற்றது, சனநாயகத்தைப் பற்றி அதிகமாகநான் இங்கு சொல்ல வேண்டியதில்லை. நாட்டு மக்களின் தீர்ப்பை நாம் இன்று கண்டுள்ளோம். அதனை நாங்கள் தொடர்ந்து நடாத்தி அம்முறையிலே இந்நாட்டை இயங்க வைத்தால் இந்நாடு பொருளாதாரத் துறையிலும் மற்ற சகல துறைகளிலும் முன்னேற்றமடையும் என்பதிற் சந்தேகமே இல்லை.

எனது தொகுதி

"இனி, என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில விசயங்களை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கோப்பாய்த் தொகுதியைப் பொறுத்த மட்டிலே, கொள்கையிலே, மனிதப் அடிப்படை உரிமையிலே பாசங் கொண்டு அதனை அவற்றை முன்வின்று வாக்களித்தது கோப்பாய்த் தொகுதி. இன்றுவாசிக்கப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்திற் கூறப்பட்டுள்ள பலதிட்டங்களுடன் ஒட்டுபாடு கொள்ளக்கூடிய தொகுதி என்னுடைய தொகுதி.

"இந்நாட்டுக்குத் தேவையான வெண்காயம், வாழைப்பழம் பெருமளவில் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றை இன்னுமதிகமாக விலைவிக்க உதவியாக இருக்கக்கூடிய இறைப்பு இயந்திரங்களுக்கு இப்பொழுது தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கின்றது. இறைப்பு இயந்திர உறுப்புக்கள் நிறைய இறக்குமதியாகி இருந்தால், இவ்வியந்திரங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்தால் எனது தொகுதி மக்கள் விளைவிக்கும் இப்பொருள்கள் இன்னுமதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வெண்காயம், வாழைப்பழம் போன்ற பொருள்களில் இந்நாடு சுயதேவைப் பூர்த்தியடையக்கூடியதாகவும் சுபீட்சமடையக் கூடியதாகவுமிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மின்சாரம்

"அடுத்ததாக மின்சாரத்தைப் பற்றியும் இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்திற் குறிப்பிட்டது எனது தொகுதியைப் பொறுத்தவரை மிகப்பொருத்தமாகுமென்று நினைக்கிறேன். எனது தொகுதியில் மின்சாரம் சரியாக இயங்கின் அப்பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களில்—விவசாயத்திலும் குடிசைக் கைத்தொழிலும்—இன்னுமெவ்வளவோ முன்னேற்றமடையும் என்று உறுதி கூறுகிறேன்.

"எனது தொகுதியிலே தண்ணீர் விநியோகம் குறைவாக இருப்பதைப் பற்றியும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். குறிப்பாக வாகரை போன்ற இடங்களுக்கு தண்ணீர் விநியோகம் அதிகமாகத் தேவையாக இருக்கின்றது. சிம்மாசனப் பிரசங்கத்திற் குறிப்பிட்டிருப்பதைப்போல இத்தகைய சேவைகளை அரசாங்கம் கூடிய கெதியிற் கிடைக்கச் செய்யுமென்று நான் நம்புகிறேன்.

"கடந்த காலத்தில் நாங்கள் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி எவ்வளவோ நம்பியிருந்தோம். ஆனால் இந்நாட்டின் போக்கு, அரசாங்கத்தின் நிர்வாகத்தின் போக்கு நாட்டை நல்ல முறையிலே செலுத்த விடாமல் கீழ்நோக்கிச் செல்ல விட்டதையிட்டு நாங்கள் வருந்த வேண்டியிருக்கின்றது. இந்நிலையை மாற்றி ஊழலையும் அதனைச் சேர்ந்த சீர்கேடுகளையும் அகற்றி இந்நாட்டின் நிர்வாகத்தை நன்றாகச் செலுத்த இந்த அரசாங்கத்தால் எடுக்கப்படவிருக்கும் முயற்சிகளைக் குறித்து நாங்கள் நன்றி செலுத்தவேண்டும்.

மொழிப் பிரச்சினை

"அடுத்ததாக, மொழிப் பிரச்சினையால் இந்நாடு இரண்டாகப் பிரிந்து, பிளந்து கிடந்தது எல்லோருக்கும் தெரிந்த விசயம். தொடர்ந்தும் இந்நிலை நீடிக்காமல், எங்களிடையே மொழி விசயத்தில் போட்டி இல்லாமல் தமிழ்பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் ஐக்கியப்பட்டு நாட்டின் வளத்துக்காக, நாட்டின் பொருளாதார உயர்ச்சிக்காக உழைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கத்தக்க விதத்தில் இம்மொழிப் பிரச்சினையைத் தீர்த்து, சிங்களத்தையும் தமிழையும் அந்தஅந்த இடத்து நிர்வாக மொழியாக அமுல்நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தின் கொள்கை மிகவும் வரவேற்கத்தக்கது. அதற்காக நாங்கள் இந்த அரசாங்கத்துக்கு மிகவும் நன்றிசெலுத்துகிறோம். இந்தக் காரணத்தினாலே தான் நாங்கள் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, சேர்ந்தியங்கத் துணிந்திருக்கின்றோம்.

"இன்னொரு விசயம் உங்களுக்குத் தெரியும், இந்நாட்டிலே சனநாயகம் வளர வேண்டுமென்றால் உள்ளூர் ஆட்சிமன்றங்கள் பெரும்பாலும் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய, நிர்வகிக்கக் கூடிய ஆற்றலைப் பெறவேண்டும். அதற்காக மாவட்ட சபை மனை நிறுவிமக்களுக்கு சுயாட்சி தங்களைத் தாங்களே ஆளும் பண்பை அதிகரிக்கச் செயலிற்ற திட்டம்-நாங்கள் மிகவும் விரும்பி வரவேற்கத்தக்க திட்டமாக அமைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

"நான் இங்குஇன்று முதன் முறையாகப் பேசுகிறேன். என்னுடைய பேச்சை இவ்வளவு பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த கௌரவ சபாநாயகர் அவர்களுக்கும் மற்றும் கௌரவ அங்கத்தவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை வழிமொழியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தமை குறித்து என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

த. அ. க. வாலிப முன்னணி, வரணி

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி வரணிக் கிளையின் ஆரம்பக் கூட்டம் கடந்த 7ம் திகதி பிற்பகல் வரணி சந்தை மைதானத்தில் நடைபெற்றது. நூற்றுக்குமதிகமான வாலிபர்கள் பிரசன்னமாகியிருந்த இக் கூட்டத்திற்கு திரு. சி. மாணிக்கத்தியாகராசா தலைமை தாங்கினார்.

நடப்பு வருடப் பதவியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு. செவ்விரசிங்கம் துணைத் தலைவர்: திரு. வே. நடராசா, இணைச் செயலாளர்கள்: திரு. ஆ. குமாரவேலு, திரு. ந. சிவசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. க. திருஞானசம்பந்த மூர்த்தி.

—

இக்பால் தின விழா

இஸ்லாமிய இளைஞர் கவுன்சிலின் ஆதரவில் இத்திங்கள் 18-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இக்பால் தினக் கொண்டாட்டம் கொழும்பு சாகிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெறும்.

திரு. எஸ். ஏ. விசயதிலக அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் 'இக்பால் கண்ட சமுதாயம்' என்ற நூலும் வெளியிடப்படும்.

அல்லாமா இக்பால்

(11-1 பக்கத் தொடர்ச்சி)

அவர் மதத்தில் உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் ஒன்றாகும்.

தன் அடிமை உண்ணும் தட்டில் தானும் உடனிருந்து உண்ணுகிறார்."

இம் மேலான வாழ்வில் இரகசியத்தையும் இலட்சியத்தையும் காட்டித் தந்த மாகவி அல்லாமா இக்பால் 1938-ம் ஆண்டு இதே மாதம் 21ம் நாள் அஸ்ராரே குதியி (இதயத்தின் இரகசியம்) ரமூசே பேகுதியி (பொதுவாழ்வின் மர்மம்) பயாமே மஸ்ரிக் (கிழக்கின் தூது) தூவிது தாமா (எதிர் கால வாழ்வு) ஆகிய அறிவுக் கருவூலங்களை எமக்தியில் ஆக்கித் தந்து—அவைகளைச் சுவைத்த மக்கள்—இக்பால், தேசியக் கவி—புரட்சிக் கவி—மாகவி—தத்துவ மேதை—உர்து இலக்கியக் கர்த்தா என்றெல்லாம் உணர்ந்து அவர்கள் உள்ளங்களிலே புகழ் மாலை சூட்டி மகிழ்ந்த போது;

பாகிஸ்தான் என்ற தேசியத்துக்காக விழித் தெழுந்த கூட்டம் வேல் தாங்கி நின்ற வேளை—அவரும் தாங்கார் சோகத்தில் மூழ்க அமரராகி விட்டார்.

பெரியவர்கள் சென்றபின்பு தான் அவர்களின் சேவை கௌரவிக்கப்படுவது, உலகம் காட்டித்தரும் பாடங்களுள் முக்கியமானது! இக்பால் எம்மை விட்டுமறைந்தாலும்—அதே ரீதியில் அவர் சேவையும் தொண்டும் எம்மால் எண்ணங்களிலும் போற்றப்பட்டு வர ஆவன செய்வோமாக!

நாகேஷின் கோமாளித்தனம் விளையாய்த் தொடங்கி விளையாட்டானது

'மகளே மகளே' என்று அலறியபடி என் தாயார் ஓடி வந்தார். அவருடைய அலறலைக் கேட்டு ஏதோ நடக்க முடியாதது நடந்துவிட்டதாகத் தான் நான் கருதினேன். என் அம்மாவுடன் கூட விஜயலட்சுமியும் ஓடி வந்தார். இருவருமாக ஓடி வந்து என் இரு கைகளையும் பிடித்துக் கொண்டனர்.

என் அம்மா பரிதாபமான குரலில் 'மகளே மாதவி இப்படி நீ செய்யலாமா? என்

கண்ணு! உனக்குன்னம்மா இங்க நடந்துச்சு' என்று பதட்டத்துடன் நடுநடுங்கிய குரலில் கேட்டார். நான் எதுவுமே விளங்காமல் திகைத்து நின்றேன். விஜயலட்சுமிக்கு விபரீத்துக் கொட்டியது. அவளால் எதுவுமே கூற முடியவில்லை.

'என்னம்மா இதெல்லாம். எதற்காக இப்படிக்கத்தி அவதிப்படுறீங்க?' என்று நான் கேட்டேன். இதற்கு என் தாயார், 'ஏனம்மா மாதவி நீ இந்தக் கிணத்துக்குள் விழுந்து தற்கொலை பண்ணிக்கப் போறியாமே? எதுக்கம்மா உனக்கு இந்தப்புத்தி. உனக்கு யார் என்ன சொன்னாங்க?' என்று பதறினார்.

நாகேஷ்

எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தோன்றாமல் நின்றேன். 'என்னம்மா புதுக்கதை. யார் இப்பிடிப் பொய் சொன்னது? என்று கேட்டேன். கூட்டத்துள் இருந்து 'நான்தான்' என்று ஒரு குரல் வந்தது.

திரும்பிப் பார்த்தேன். ஒல்லியான ஒரு உருவம் மெல்லத் தலை காட்டியது. அந்த உருவத்தைப் பார்த்ததும் என் பதட்டம் எல்லாம் பறந்தோடிவிட்டது. பதிலாக சிரிப்புத்தான் வந்தது. நிலையில் தோன்றி

—மாதவி—

இரசிகர்களை விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் அந்த கோமாளி நாகேஷ் தான் இத்தனை அமளிக்கும் காரணம்!

பத்மினி பிக்சர்சாரின் 'ஆயிரத்தில் ஒருவன்' படப்பிடிப்புக்காக கோவாவைச் சேர்ந்த வார்வார் என்னும் ஊரில் 30 நாட்கள் தங்கியிருந்தோம். அந்த முப்பது நாட்களையும் முப்பது விநாடிகளாக மாற்றி அமைத்தவர் நாகேஷ்தான். அவர் இல்லாவிட்டால் எங்களுக்குப் பொழுது போவதே முடியாதிருந்திருக்கும். 'ஆயிரத்தில் ஒருவ'னில் நாகேஷின் காதலியாக நான் நடிக்கிறேன்.

முன்றடுக்குள்ள ஒரு ஹோட்டலில் விஜயலட்சுமி போன்றுடன் நாங்கள் தங்கியிருந்தோம். நடிகநடிகைகள் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு ஹோட்டலைச் சுற்றி இரசிகர்கள் கூடிவிட்டனர் ஒரு நாள். நாகேஷ் இதை அறிந்து விஜயலட்சுமியையும் என்னையும் இரசிகர்களுக்கு 'தரிசனம்' கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். விஜயலட்சுமி வர மறுத்துவிட்டார். நான் மட்டும் கீழிறங்கிச் சென்று ஹோட்டல் வளவுக்குள்ளே

விஜயலட்சுமி

வைத்து இரசிகர்களிடம் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தேன்.

கிணற்றுக்கட்டில் கைகளை ஊன்றிக் கொண்டு வளைந்து கூட்டமாக நின்ற இரசிகர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது தான், நாகேஷ் இப்படி ஒரு 'கரடி'விட்டார்.

கீழே வந்து இரசிகர்களுக்குக் காட்சி கொடுக்க மறுத்த விஜயலட்சுமியையும் கீழே வரவைத்ததோடல்லாமல், ஒய்வாகவிருந்த எனது தாயாருக்கு மாடிப்படியிறங்க தேகப்பயிற்சியும் அளித்து, எல்லோரையும் சங்கடத்திலாழ்த்தி வேடிக்கை காட்டி, இரசிகர்களையும் திருப்திப்படுத்தினார் நாகேஷ்.

வேட்டைக்காரன்

வேட்டையாடுதலையே முக்கிய பொழுது போக்காக் கொண்ட ஒரு தோட்டச் சொந்தக்காரனை கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திரைச்சித்திரமே வேட்டைக்காரன். வீரமும் தீரமும் நிறைந்த வீரனாக மட்டுமல்ல காதற்கலையிலும் கைவந்தவனாகப் படைக்கப்பட்டிருக்கிறான் இந்த வேட்டைக்காரன். காட்டு மிருகங்களை விளையாட்டுப் பொருட்களாகக் கருதும் அவனின் உள்ளத்தில்காணும் பிள்ளைப் பாசம் பெருமைப்படக் கூடியதாக இருக்கிறது.

தேவரின் படமென்றால் மிருகங்களையும், சண்டைகளையும் நிறைய எதிர்பார்க்கலாம். வேட்டைக்காரனில் மிருகங்களின் சண்டைகளை மட்டுமல்ல, எம். ஜி. ஆர்.—நம்பியார் கைத் துப்பாக்கிச் சண்டைகளும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. அதே நேரத்தில் குட்டி ராசாவாக வரும் பேபி சுகிலாவின் நடிப்பு உள்ளத்திற்கும், உணர்ச்சிக்கும் நல்ல விருந்தாகும்.

அசோகனும் வந்து போகிறார். அவர் காட்சி கொடுத்த நேரத்திலெல்லாம் நல்லாக அடி வேண்டிக் கட்டியுள்ளார். நம்பியாரின் இருவகைத் தோற்றத்தையும் முடிவில் நல்ல மனிதனாகி விட்டார்.

பேபி சுகிலா வெளுத்துக் கட்டியுள்ளார். பாடம் சொல்லிக் கொடுக்க வந்த வாத்தியாருக்கே பாடம் படிப்பிக்க முற்படுகிறார். எம். ஜி ஆரின் பிள்ளையென்றால் பிள்ளைதானே.

காதற் காட்சிகளைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. எம் ஜி ஆர். 'தான் காதல் நடிப்பிலும் ஒரு மன்னன்' என்பதை இப்படத்தின் மூலம் நிலைநிறுத்திவிட்டார். அதற்கு ஏற்றாப் போல் சாவித்திரியும் நன்றாக ஒத்துழைத்திருக்கிறார்.

சாவித்திரியின் சோகநடிப்பிற்கு நிறைய இடமிருக்கிறது.

நாகேஷ்—மனோரமா பற்றிக் குறிப்பிடாவிட்டால் நமக்கும் சுவைப்படாது. நாகேசின் நகைச்சுவையில் சில மாற்றங்களைக் காண முடிகிறது சிரிப்பதற்கு மட்டுமல்ல சில இடங்களில் சிந்திப்பதற்கும் அவரின் நகைச்சுவை இடம் கொடுக்கிறது.

மொத்தத்தில் பல் சுவை நிறைந்த ஒரு படம் வேட்டைக்காரன். எத்தகைய இரசிக உள்ளம் படைத்தவர்களும் பார்த்து மகிழ இடமிருக்கிறது.

—பூ

சிறையில் 'சங்கிலியன்'

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகள் சங்கிலியன் என்னும் நாடகத்தை மேடையேற்றியுள்ளார்கள். சித்திரைப் புத்தாண்டையொட்டி நடைபெற்ற இந்நாடகத்தின் சகல பாத்திரங்களையும்கைதிகளே ஏற்று நடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெலிகடை, மகாநுவர ஆகிய சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் சித்திரைப் புத்தாண்டை இம்முறையும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். கூட்டுவழிபாடும், இறை வணக்கமும் இடம் பெற்றன. கைதிகளுக்குப் பிரசாதமும் வழங்கப்பட்டது.

விவேகானந்த சபையைத் துணைத்தலைவர் திரு.ப. குமாரசாமி வெலிகடைச் சிறைச்சாலையிலும், சபையை சேர்ந்த திரு. பாலச்சந்திர மூர்த்தி மகாநுவரச் சிறைச்சாலையிலும் கூட்டுப் பிராத்தனையை நடாத்தினார்கள். விவேகானந்த சபையின் ஆதரவிலேயே இரு இடங்களிலும் விழா நடைபெற்றது.

சங்கிலியன் நாடகம் வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களும் நடைபெற்றது.

சிக்காரி

இயற்கைக் காட்சிகளையும், நடனங்களையும் இரசிகர்களுக்கு வாரி வாரி வழங்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட படமோ என்ற எண்ணத்தைக் கொடுக்கிறது இந்திய சித்திரமான சிக்காரி. ராகினி—கெலன் ஆகிய இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நடனவிருந்தளிக்கிறார்கள். ஐரோப்பிய நங்கையரின் பனிக்கட்டி நடனதுடனேயே படம் ஆரம்பமாகிறது.

படத்தின் பெரும் பகுதி மலைகளும், அருவிகளும் நிறைந்த—கொஞ்சம் எழில் விஞ்சும் கோளத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால் கேட்கவும் வேண்டுமா? இயற்கைக் காட்சிகளின் எழிற் தன்மையையும், இயற்கை வனப்பையும் சிறிதும் குன்றாதமுறையில் ஈஸ்ட்மன் கலரில் படமாக்கியிருப்பது மேலும் சிறப்பையும் குளுகுளுப்பையும் தருகிறது.

நடனமங்கையான ராகினியைச் சுற்றிச் சுழன்று வளர்ந்து செல்லும் கதையில் கேரள நாட்டு வேட்டைக்காரன் அசித் வந்து புகுந்து விடுகிறார். வேங்கையிடம் சிக்கிய ராகினியின் உயிரை மீட்ட அசித் ஈற்றில் ராகினியை தனதாக்கிக் கொள்கிறார்.

இதற்கிடையில் கேரள நாட்டு மலைகளைத் தாண்டி, பயங்கர கொரிலாவைச் சந்தித்து, அறிவர் சிங்கையும்-நாட்டிய நங்கை கெலனையும் சந்திக்கிறார். ராகினியின் உயிரை மீட்டு உள்ளம் கவர்ந்த அசித்தைத் தட்டிக்கொள்ள கெலன் முயற்சிக்கிறார். ஆனால் அறிவர் ஒரே நேரத்தில் பார்க்கமுடிகிறது. கதாநாயகனுக்கு மட்டுமல்ல நமக்கும் கூட நம்பியாரின் உண்மைத் தோற்றத்தைக் கடைசி வரைக்கும் புரிந்து கொள்ள முடியவில்லை

எம். ஆர். ராதா காட்சி கொடுக்கத் தொடங்கியதும் எங்கோ சதி உருவாகிறது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டு விடுகிறோம். அவரின் பேச்சும் நடிப்பும் எமக்கு அந்த முடிவைத் தருவது தவிர்க்க முடியாததாக விருக்கிறது. ஆனால் அவர் எல்லாரையும் ஏமாற்றி

கின் உரிய நேரத்தில் கை கொடுத்து (கதைக்கு) அவரின் உயிரையே பறித்து விடுகிறார்.

நல்ல சில காட்சிகளைக் காட்டு வதற்காக, முயன்று சம்பவங்களைக் கோர்த்திருக்கிறார்கள் என்ற எண்ணமே கதையைப் பற்றி எண்ணுகையில் தோன்றுகிறது. ஆனால் படத்தின் தன்மை கதையைப் பற்றிய நினைவிற்கே இடத்தை வைக்கவில்லை.

சிறந்த பொழுது போக்கிற்கு மட்டுமல்ல, இயற்கைக் காட்சிகளின் எழிலுக்காகவும், நல்ல நடனத்திற்காகவும் மூன்று மணி நேரங்களைச் செலவிடலாம்.

—பூ

வருகிறது இரவும் பகலும்

முற்றிலும் புதுமுகங்களைக் கொண்டு விஜயபுரிவீரனைத் தயாரித்து வெற்றி கண்ட சிட்டாடல் ஸ்தாபனத்தார் புதுமுகங்களை வைத்தே 'இரவும் பகலும்' என்ற உன்னத சமூகச் சித்திரத்தைத் தயாரித்தளித்துள்ளனர். தென்னகத்தில் வெற்றிப் பவனி வரும் இப்படத்தில் ஜெய்சங்கர், வசந்தா ஆகிய புதுமுகங்களுடன் அசோகன், பண்டரிபாய், நாகேஷ் ஆகியோரும் தோன்றுகின்றனர். இப்படத்தில் முதன் முதலில் அசோகன் தனது சொந்தக் குரலிலே அருமையான பாடலையும் பாடியுள்ளார்.

இப்படத்தை ஜோசப் தளியத் டைரக்ட் செய்திருக்கிறார். ஆலங்குடி சோமு எழுதிய கருத்தாளம்மிகுந்த பாடல்களில் ஒன்றான 'இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான்...' என்ற பாடலை அசோகன் சொந்தக் குரலில் பாடுகிறார். இதற்கு இசை அமைத்தவர் டி. ஆர். பாப்பா. விரைவில் 'இரவும் பகலும்' இலங்கையில் திரையிடப்படலாம்.

காலம் ஒரு கொள்கை; பொழுது ஒரு வேடம்

சமசமாஜ—கொம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதங்கள்

மார்க்சீயம் படும் பாடு அன்றும்-இன்றும்-நாளையும்

நாளொரு கொள்கையும் பொழுதொரு வேடமும் புனைந்து இடத்துக்கு இடம் மாறுபட்ட கருத்துக்களைப் பரப்பி வந்த சமசமாஜ—கொம்யூனிஸ்டுகளின் தந்திரோபாயங்களை மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர். சம அந்தஸ்துக்குப் பாடுபட்டவர்கள் இன்று வகுப்புத் துவேசத் நியை மூட்டுவதைக் காண்கிறோம். தொழிலாள வாழ்வு மலர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் இன்று வர்க்க பேதத்தை வளர்த்து சமுதாயத்தைச் சீரழிப்பதைப் பார்க்கிறோம். இனிமேலும் இவர்களை நம்ப இந்நாடு தயாரில்லை.

மார்க்சிய தத்துவத்தைக் கூறி இந்நாட்டு மக்களுக்கு மாயவலை வீசும் சமசமாஜிகளும் கொம்யூனிஸ்டுகளும் கடந்த காலம், நிகழ் காலம் எதிர்காலங்களில் என்ன செய்தனர்—என்ன செய்கின்றனர்—என்ன செய்யப் போகின்றனர் — என்பதை நாம் சற்று ஆராய்ந்துபார்ப்போமானால், நாளொரு கொள்கையும் பொழுதொரு கோலமுமாக அவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெளிவாக விளங்கும்.

ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே ஆசையினால் உந்தப்பட்ட அவர்கள் எத்தகைய தகுதித்தராதரங்களைப் புரிந்து வந்துள்ளனர் என்பதும் புரிந்து விடும்.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற இவர்களுக்கு ஆயுதமாகக் கிடைத்ததெல்லாம் மார்ஸ் காட்டிய வேதம்தான் — லெனின் காட்டியபாதைதான். ஆனால் மார்க்ஸ் கொடுத்த வேதத்தை இவர்கள் அனுட்டித்தவர்களுமல்ல - லெனின் காட்டிய பாதையில் நடப்பவர்களுமல்ல.

முதலாளி யார்? தொழிலாளி யார்?

தங்களுடைய கருத்துக்களை ஏற்காதவர்களை வாயார முதலாளிகள் என்று வர்ணித்து விடுவது இவர்களின் வழக்கம். தொழிலாளர்கள் மத்தியிலே, தொழிலுக்கு முதலீடு செய்யும் ஒரு சிறு வியாபாரியையும் முதலாளி என்று வர்ணித்து விட்டு இரு தரத்தாருக்கும் நின்று முடிந்து பேதமையையும் துவேசத்தையும் வளர்த்து விடுவது இவர்கள் கையாளும் தந்திரம். இத்தந்திரங்களினால் தங்களைச் சுற்றி ஒரு அப்பாவி மக்கள் கூட்டத்தைக் கூட்டி விடுகிறார்கள்.

சின்னஞ்சிறு பிரச்சினைகளை — பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கக் கூடிய வழிவகுகளை எதையும் பின்பற்றுவதில்லை. முதலாளி தொழிலாளி துவேசத்தைக் கிளறிவிட்டு இரு சாராரையும் சீரியும் பாம்பும் போல் மூட்டி விடுவது இவர்கள் கையாளும் யுக்திகளுள் தலையானது. வேலை நிறுத்தங்களைத் தட்டிவிட்டு வீண் விரோதங்கள் வளர வழிசெய்வார்கள். எதுவுமே அறியாத தொழிலாளர்கள் இவர்களுடைய ஆட்டங்களுக்கு ஆடி, முதலாளிகளை விரோதித்துக் கொள்ளுவதனால், ஒன்றில் தனது தொழிலகத்தை அவர் மூடி விடுகிறார், அல்லது போனால் வேறு தொழிலாளர்களைக் கொண்டு தொழிலை நடாத்துகிறார். இந்த மார்க்சியவாதிகளின் வசப்பொம்மைகளாக இயங்கும் அப்பாவித் தொழிலாளர்கள் தங்கள் தொழில்களை இழந்து வாடுவதைத்தவிர வேறு மார்க்கம் கிடைப்பதில்லை.

தன்னல வேட்டைக்காகத் தொழிலாளர்களைப் பணயம் வைத்தாடும் இந்த மார்க்சியவாதிகளின் பித்தலாட்டங்களுக்குத் தங்களை இலக்காக்கிக்கொண்ட எத்தனை தொழிலாளர்கள் இன்று நடுத்தெருவில் தவிக்கிறார்கள் என்பதை நாம் தான் கணக்கிட்டுக் கூறவேண்டும் என்ற அவசியமில்லை. நாடே அறியும்.

தொழிலாள வர்க்கத்துக்காகப் போராடுவதாகவும், முதலாளித்துவத்தை ஒழிக்க முன் நிற்பதாகவும் கூறும் இவர்கள் தங்களுக்குள்ளேயே தொழிலாள விரோதத்தை வளர்ப்பதும் முதலாளிகளாகவே தாங்கள் வாழ்க்கை நடாத்துவதும் கண்கூடு.

பாம்புக்கு வால் மீனுக்குத் தலை

சமசமாஜிகளும் கொம்யூனிஸ்டுகளும் தாங்கள் விரும்புவதாகக் காட்டிக்கொள்ளும் சர்வதேசிய கருத்துக்களை நாட்டில் பரப்புவதைக் காண்கிறோம். தமிழ் பேசும் மக்களிடத்தில் செல்வாக்குப் பெறுவதற்காக இவர்கள் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைகளிலும் அக்கறை காட்டுவதாகப் பறையறைந்து வந்துள்ளனர், தங்கள் பண்டைய நிலையில்.

சிங்களம் மட்டும் சட்டம் புகுத்தப்பட்ட வேளையில் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் சம அந்தஸ்து கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். ஆனால் அதே வேளையில் சிங்களப் பிரதேசங்களில் சிங்களம் மட்டும் கொள்கையை வலியுறுத்தியிருக்கின்றனர். காங்கேசன்துறையில் பேசும்போது ஒரு குரலிலும் கண்டியில் பேசும்போது வேறோர் குரலிலும் பேசுவது இவர்கள் வழக்கமாக விருந்து வந்திருக்கிறது.

சந்தர்ப்பவாதத்தின் மூலம்தான் இவர்கள் மக்களைக் கவருவதுண்டு. பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் விலாங்கு மனப்பான்மையினரே மார்க்சியவாதிகள் என்பது பல தடவைகளில் நிரூபணமாகியிருக்கிறது.

வர்க்க பேதத்தை வளர்ப்பவர்கள்

தமிழ் பேசும் இனத்தின் தனித்தன்மையைக் காக்கவும், தமிழ் மொழியைப் பேணவும், தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பாதுகாக்கவும் தோன்றிய தமிழரசுக் கட்சியை வகுப்புவாதிகளின் கூடாரம் என்று வர்ணித்தனர் மார்க்சியவாதிகள். இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு சகோதரத்துவ சமத்துவத்தைப் பரப்பத் தாங்கள் பாடுபடுபவர்கள் என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் இவர்கள் அவர்களே வர்க்க பேதத்தைக் காட்டி பேதமையினை வளர்த்து பிரிவுகளை ஏற்படுத்துகின்றனர் என்பதை மறுக்க முடியுமா?

முதலாளிகள் என்று ஒரு சாராரையும் தொழிலாளிகள் என்று மறு சாராரையும் துவேசத்தின் துணை கொண்டு பிரித்துவைத்து வேடிக்கை காட்டுபவர்களல்லவா இவர்கள்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடமேறிய காலத்தில் அக்கட்சியையும், ஆட்சி முறையினையும் இந்த மார்க்சியவாதிகள் திட்டித் தீர்த்ததைப் போன்று வேறு எந்தக்கட்சியும் திட்டியிருக்கமாட்டாது. இந்நாட்டின் பத்திரிகைகளும், பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கொண்ட ஹன்சார்டுகளும் இந்த உண்மைக்குச் சாட்சி பகரும்.

ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி

திக்கொன்றாய்ப் பிரிந்து கிடந்த இவர்கள் ஏதோ ஒரு முறையில் இணைந்து நின்று முனைந்து ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று கருதி ஒன்று சேர்ந்து பார்த்தனர், ஆனால் அத்திவாரத்திலேயே ஆட்டம் கண்டதனால் மூன்றாகவிருந்தவர்கள் ஆறு கூறுகளாகப் பிரிந்ததுதான் எஞ்சியது. பதவி கிடைக்கலாம் என்ற ஆசை ஏற்பட்டதன் காரணமோ என்னவோ, அரசியலில் ஓரளவு யோக்கியமானவர் என்றுகருதப்பட்ட ஒருவரே தமது அரசியல் வாழ்வின் அஸ்தமனத்துக்கு வழிவகுத்துக்கொள்ள நேர்ந்தது.

சுதந்திரக்கட்சியுடன் ஒத்துழைத்து அரசியல் தரப்பினர் என்ற நிலையை அடைந்தபின்னராவது முன்னர் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் தாம் கூறிவந்த கருத்துக்களுக்கு ஏற்ற வகையில் சிறிதளவாவது நடந்துகாட்டத் தவறிவிட்டார்கள் இந்த மார்க்சியவாதிகள்.

அமைச்சரவையில் இந்த மார்க்சியவாதிகள் இடம் பெற்ற பின்னரும் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னல்கள் பெருகியதே? இதைத் தடுக்கவாவது அதிகாரத்திலிருந்தவர்கள் முனையவில்லையே?

ஆட்சியைக் காப்பாற்ற முயற்சி

கடந்த நவம்பர் மாதத்தில் சுதந்திர—சமசமாஜக் கூட்டாட்சி கவிழப்போகும் நேரத்தில் சமசமாஜக்கட்சித் தலைவர்கள் தமிழரசாரை அணுகிய விதம் சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். முன்னாளில் சம அந்தஸ்து என்று கூறிய சமசமாஜிகள், பின்னர் ஆட்சிபீடத்திலமர்ந்த வேளையில் சிங்களத்திணிப்பில் வேகம் காட்டி தமிழ்பேசும் மக்களின் அற்ப உரிமைகளைத் தானும் பிடுங்குவதில் ஈடுபட்டிருந்ததை யார்தான் மறக்கமுடியும்?

ஆட்சி கவிழும் தறுவாயில் தமிழ்பேசும் மக்களுக்கு வானவை உரிமைகளை வழங்குவதாக வாய்ப்பந்தலிட்ட வரலாறு இந்நாட்டுக்கும் அயல்நாடுகளுக்கும் பரவி விட்டனவே!

தமிழ்பேசும்மக்களை உகாசினம் செய்தவர்களை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான தமிழரசுக்கட்சித் தலைவர்கள் உதறித் தள்ளியது எந்த வகையிலும் நியாயத்துக்குப் புறம்பானதாகாது.

தேர்தல் முடிந்து ஆளும் பொறுப்பை யார் ஏற்பது என்ற இரண்டுங்கெட்டான் நிலை ஏற்பட்டிருந்தபோது இதே சமசமாஜிகளும் கொம்யூனிஸ்டுகளும் தமிழரசாரை அணுகி தமிழ்பேசும் மக்களுக்காக எதையும் தாம் செய்யத் தயார் என்று கூறி உதவி கோரியதை மறுக்க முடியுமா?

தமிழ்பேசும் மக்களுக்கு, அவர்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெற இன்று ஏற்பட்டிருக்கும் வாய்ப்பை முறியடித்து விடுவதுதான், காலத்துக்குக் காலம் கருத்து மாறுட்டம் புரியும் மார்க்சிய வாதிகளின் ஒரே நோக்கம் என்பது இன்று அவர்கள் பூண்டுள்ள புதிய வேடத்தினால் புலப்பட்டுவிட்டது.

வகுப்புவாதிகள் என்று தமிழரசாரைக் கூறிவந்த இந்த சமசமாஜிகளும்கொம்யூனிஸ்டுகளும் தாங்களே வகுப்புவாதத்தில் வீரரதி வீரர்கள் என்பதைப் புலப்படுத்திவிட்டார்கள்.

தமிழர் ஒருவர் மந்திரிசபையில் அங்கம் வகிப்பதை தங்கள் வகுப்புத் துவேஷத்துக்குத் தூபமாகப் பாவிக்கத் தொடங்கிவிட்டனர். இனமத பேதங்களைக் கிளறிவிட்டு ஒருவரோடு ஒருவரை மோதவிட்டு இடையிலே தங்களை வளர்த்து, அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி விடலாமா என்று கணக்குப்பார்க்கின்றனர். துவேஷத்தீயை மூட்டிவிட்டு மக்களிடையே கலவரத்தைத் தோற்றுவித்துவிட துரிதமாகநடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் இந்த மார்க்சியவாதிகள்.

வகுப்புவாதத்தைக்கிளறி, இனக்கலவரத்தை மூட்டி, இரத்தக்களறியைத் தோற்றுவித்து அதன்மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா. அவர் ஓரளவு வெற்றிகண்டார் எனினும் அவர் தோற்றுவித்த தீயிலே அவரே மூழ்கினார் என்று சொல்லலாம்.

மீண்டும் ஒரு இனக்கலவரத்தை வரவழைக்க இந்நாடு விரும்பவில்லை. ஒருவரோடு ஒருவர் சேர்ந்து இணைந்து சம உரிமைகளைப் பெற்று சகோதரர்களாக வாழவேண்டும் என்றே மக்களனைவரும் விரும்புகின்றனர். இந்த ரீதியிலேதான் ஒரு தேசிய அரசாங்கமும் தோன்றியிருக்கிறது. சுமுகமான முறையில் பிரச்சினைகளும் தீருவதற்கான வழிவகைகளும் தென்படுகின்றன.

வகுப்புவாதத்தைக்கிளறி விடுபவர்களாக இன்று வேடம் புனைந்துவிட்ட சமசமாஜிகளையும்—கொம்யூனிஸ்டுகளையும் வடக்கு கிழக்கு மாகாணத்து தமிழ் பேசும் மக்கள் இன்னும் நம்பத் தலைப்படுவார்களா என்பதைமட்டும் கேட்கவிரும்புகிறோம்.

செய்யாத கடமை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆமாம்! கமுனு உன்னில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. உன் வீரத்தைப்போல உன் வாக்கையும் நம்புகிறேன். இது தான் என்னுடைய தணியாத ஆவல். விபரீதமான ஆசையல்ல; நியாயமான ஆசையைத்தான் நிறைவேற்றிவைக்க வேண்டுமாய் விரும்புகிறேன். தமிழரும் சிங்களவரும் ஈழமாதாவின் இரு குழந்தைகள். அவ்விரு குழந்தைகளுக்கும் இம்மண்ணில் சமஅளவான பாத்தியதை உண்டு. தமிழரைப் புறக்கணிக்க என்றும் விழையாதே. உன் இனத்தவர்க்கும் முன்பிறந்த தமிழர் இலங்கையிலிருக்கின்றார்கள்; இந்த உண்மையை நீ மறக்கக்கூடாது. எனவே அவர்களின் சுக துக்கங்களிலும் பூரண பங்கு கொண்டு பேதமின்றி அவர்களை பேணி நடாத்த வேண்டும். எல்லா உரிமைகளையும் பெற்று தமிழர்கள் ஈழத்தில் சுதந்திரமாக வாழக்கூடிய வழி செய்யவேண்டும். செய்வாயா?'

'நிச்சயமாக மன்னா நீங்களெப்படி புசித மதத்தையும் வளர்க்க உதவி, சிங்களவரையும் தமிழரையும் சம அந்தஸ்துடன் ஆட்சி செய்கிறீர்களோ அதுபோல் நானும் தமிழரையும், சிங்களவரையும் பேதமின்றி நடத்துவேன். இது சத்தியம்! என் வீரத்தின் மீது ஆணை!'

வீரத் தமிழ் மன்னன் எல்லாளன் வீர சொர்க்கம் போய் விட்டான். அம்மா வேந்தனை சகல வித ராசமரியாதைகளுடன் அடக்கம் செய்ய உத்தரவிட்டான் கமுனு.

அரசகுலத்தோன் என்ற விதத்தில் அது அவனது மகத்தான பணி! அதைப் பூரணப்படுத்திவிட்டு தன் கடமையைச்செய்ய விரைகிறான் கமுனு. ஆனால்,

அரண்மனை நோக்கி வரும் கமுனுவை வரவேற்பது யார்? அது...அது... ஆமாம்! அவளே தான்:-

தமிழன் எல்லாளனின் தலையைக் கொய்தவளை வளமிக்க தடாகத்திலே கழுவி அந்த இரத்தத் தடாகத்திலே தான் ஸ்நானம் செய்வதாக எந்த விகாரமாதேவி கனவுகண்டாளோ, தமிழர் தம் தலைநகராம் அனுராதபுரியினின்று கொய்து வந்த மலர்களை தன் கருத்தடர்ந்த கூந்தலிற் சூடி, உவகை மிக்கு இறும்பூதெய்துவதாக எந்தவிகாரமாதேவி கனவு கண்டாளோ அதே விகாரமாதேவிதான்! அந்தப் பெண்ணரசிதான் தன் மைந்தனை வரவேற்றாள்.

கமுனு தாயின் பேச்சைத்தான் கேட்டான்.

(யாவும் கற்பனை)

அடுத்த இதழில்

புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன்
நினைவு நாளையொட்டி
சிறப்புக் கட்டுரைகள்
இடம்பெறும்

முற்றிலும் எதிர்பாராத இந்த நிகழ்ச்சி குகனின் மனதை என்னவோ செய்தது. வேறு வழியின்றி அவனும் அச்சிறுவர்களுடன் வேண்டா வெறுப்புடன் மீன்களைப் பதப்படுத்தும் வேலையில் ஈடுபட்டான்.

வேலையோடு வேலையாகத் தனது சோக வரலாற்றை அங்குள்ள சிறுவர்களுக்கு எடுத்துக் கூறினான் குகன். மனதிலுள்ள வேதனையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொன்னால் ஓரளவு மன நிம்மதி ஏற்படுமல்லவா? அதே போல தனது சோகக் கதையைக் கூறியதும் அவனுக்கு ஒருவித மன அமைதி ஏற்பட்டது. அதே போல மற்றவர்களும் தங்கள், தங்கள், கதைகளை குகனுக்கு எடுத்துக் கூறினர். அதே நேரத்தில்...

"குகன் என்னும் பன்னிரண்டுவயதுப் பையன் காணாமற் போய்விட்டதாகவும், கண்டு பிடிப்பவர்கள் அண்மையிலுள்ள பொலீஸ் நிலையத்திற்கோ அல்லது அனுதை மாணவர் விடுதிக்கோ அறிவிக்கும்படி அனுதை விடுதித் தலைவரின் வேண்டுகோள் குகனின் புகைப்படத்துடன் பல பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது" முதலான செய்திகளை அன்று காலை மீனவர்களால் அபகரிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்ட பட்டினத்துப் பையன் குகனுக்கு விளக்கிக் கூறினான்.

மேற்படி செய்தி குகனுக்கு ஒருவித உற்சாகத்தையும், தெம்பையும் அளித்தது. தன்மீது விடுதித் தலைவர் கொண்டுள்ள அக்கறையை நினைந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தான். அதே நேரத்தில் வேலை வாங்கிக் கொண்டிருந்த முரட்டு மனிதன் சவுக்குடன் வரவேயையன்களின் சம்பாதனை தடைப்பட்டது. எல்லோரும் தங்கள் தங்கள் வேலையில் தீவிரமாக ஈடுபட்டனர். முரடன் அவர்களையே சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்தான்.

அன்று இரவு...! குகன் உட்பட சிறுவர்களையெல்லாம் ஒரு குடிசையுள் அடைத்து விட்டு மீனவர்களெல்லாம் மீன் பிடிப்பதற்காகக் கடலை நோக்கி விரைந்தனர். சிறிது நேரத்தில்...சிறுவர்களெல்லாம் குடிசையின் ஒரு மூலையில் கூடி அங்கிருந்து தப்புவதற்கு வழி வகைகளைத் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு பையனும் ஒவ்வோர் உபாயத்தைக் கூறிக்கொண்டிருந்தனர். 'மீனவர்கள் கடலிலிருந்து திரும்புவதற்குள் எப்படியாவது குடிசைக் கதவை உடைத்துத்தப்பியோடிவிட வேண்டும்' என்ற குகனின் ஆலோசனையை அனைவரும் ஒரே மனதாக ஆமோதித்தனர். சிறிது நேரத்தில்...!

எல்லோரும் குடிசைக் கதவை உடைப்பதில் ஈடுபட்டனர். சற்று நேரத்தில் அவர்களுடைய விடா முயற்சி வெற்றிபெற்றது. கதவு நிலத்தில் 'தொம்' என்று விழுந்தது. எல்லோரும் மெதுவாக ஒருவர் பின் ஒருவராக குடிசையிலிருந்து வெளியேறினர். வெளியில் பயங்கர இருள் மண்டிக் கிடந்தது. எல்லோருடைய உடல்களும் இலேசாக நடுங்கிக்கொண்டிருந்தன. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்...நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு...எல்லோரும் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வாருங்கள்' என்று தலைவனுக்குரிய மிடுக்குடன் கூறியபடி கடற்கரையை நோக்கிக் கம்பீரமாக நடந்தான் குகன். அவனுடையதீரத்தை மனதில் வியந்துகொண்டே மற்றவர்கள் அவனைப் பின்பற்றி நடந்தனர்.

சிறிது நேரத்தில் எல்லோரும்கடற்கரையைஅடைந்து விட்டனர். அப்போது நேரம், சுமார் நான்கு இருக்கலாம். இலேசாகக் கிழக்கு வெளித்துக் கொண்டிருந்தது. எல்லோரும் கடற்கரை மணலில் கையைக் காலை நீட்டி உட்கார்ந்தபடி சிரம பரிகாரம் செய்துகொண்டிருந்தனர். அப்போது...!

இரண்டு இயந்திரப் படகுகள் கரையை நோக்கி இரைச்சலுடன் விரைந்து வந்து கொண்டிருந்தன. குகனின் வேண்டுகோட்படி எல்லோரும் எழுந்து ஓடிச் சென்று அடர்த்தியான பற்றைகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். அதே நேரத்தில்.....!

இரு இயந்திரப் படகுகளும் கரையை அடைந்தன. உடனே படகுகளைக் கரையிலிருந்த ஒரு பெரிய கம்பத்தில் பிணைத்து விட்டு, மீன் கூடைகளைச் சுமந்துகொண்டு பரபரப்புடன் தங்கள் குடிசையை நோக்கி விரைந்தனர். சிறிது நேரத்தில்...

குகனின் திட்டப்படி பையன்களெல்லாம் ஓடிச் சென்று ஒரு படகின் பிணைப்பை அறுத்துவிட்டு அப்படகில் ஏறினர். அப்போது...இன்னும் இரண்டு இயந்திரப் படகுகள் கரையை நோக்கி இரைச்சலுடன் விரைந்து வந்து கொண்டிருந்தன. பையன்களெல்லாம் அப்படகிற்குள்ளேயே பதுங்கிக் கொண்டனர்.

(அடுத்த இதழில் முடியும்)

வளர்மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

வாழ்க்கையில் வெற்றி யாருக்கு?

மு. சுவாமிநாதன்

உலகில் வாழும் ஒவ்வொருவன் மனதிலும் பல ஆசை அலைகள் எழுவது வழக்கம். ஆனால் ஒரு சிலரே தங்கள் ஆசைகளை நிறைவேற்றத் தைரியத்துடன் செயற்படுகின்றனர்.

சிலர் ஒரு இடத்தில் இருந்தவண்ணம், மற்றவர்கள் இன்பத்தையும், பொருளையும் எவ்வாறு அடைகிறார்கள்? 'ஏன் நான் மட்டும் இதற்கு விதிவிலக்காகிவிட்டேன்' என்று நினைத்து ஆழ்ந்த சிந்தனையில் அமர்கிறார்கள்.

இப்படியான எண்ணங்கள் மனதில் எழுவதும் ஒரு முறைக்கு வரவேற்கத்தக்கது. காரணம், ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு விதைக்கு ஒப்பிடுகிறார்கள் அறிஞர்கள்.

வெற்றிகரமானவாழ்க்கை ஒவ்வொன்றும் நல்ல சிந்தனையில் இருந்தே உருவெடுத்தன.

எண்ணங்கள் மிகவும் சுலபமாக அடைந்துவிட முடியாது. ஒரு விதையை ஒருவன் நிலத்தில் நட்ட பின்பே அதன் பலனை எதிர்பார்க்க முடியும், அதே போல ஒரு எண்ணத்தையும் ஒருவன் அடைய முயற்சி எடுத்த பின்பே அதன் பலனையும் எதிர்பார்க்கமுடியும்.

வாழ்க்கையில் ஒருவன் வெற்றிபெற முதலில்அவன் மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றவேண்டும். அந்த எண்ணத்தை நிறைவேற்ற அவனுக்கு மன உறுதியும் தன்நம்பிக்கையும் அத்தியாவசியம்.

இவ்விரண்டையும் பெற்றுக்கொள்ளுதல் மிகவும் கடினமான காரியம். மன உறுதியைப் பயிற்சிப்படுத்த ஒருவன் முதலில் எவற்றையேனும் கட்டாயமாகத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

தன் பாடங்களைக் கட்டாயத்தின் பேரில் படித்தால் இதன் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். இப்படிக் கட்டாயமாக ஒருவன் தன் பாடத்தைப் படித்தால் அவனுக்கு நிச்சயம் பெறுமதி உள்ள பலன் கிட்டியே தீரும்.

இந்த முறை எந்த வயதானவரும் செய்யக்கூடிய ஒன்றாகும். இதுவே உண்மையில் வெற்றியின் மர்மம். இச் சிறு விடயத்தில் ஒருவன் வெற்றி எய்தி விட்டான் என்றால், அவன் தன் மனதை உறுதிப்படுத்திவிட்டான் என்பது பொருள். இதனால் அவன் மனதில் மனப்பூரிப்பும் கூடிய மனோதிடமும் அவனை அறியாமல் ஏற்படுகின்றது.

இந்த தன்நம்பிக்கை மேலும் மேலும் அவனை நல்ல விடயங்களில் தன்னிடத் தூண்டுகின்றது. அவன் தான் நினைத்ததைச் செய்து முடிக்கின்றான் என்பது மட்டுமின்றி தான் நினைத்ததிலும் பார்க்கப்பன்மடங்கு திறனாகவே செய்து முடிக்கின்றான். அது மட்டுமின்றி அவன் மேலும் மேலும் மிகவும் கடினமான வேலைகளைச் செய்து முடிக்க ஆசைப்படுகின்றான். இவ்வாறு கடினமான வேலைகளைச் செய்வதினால் அவன் அறிவு மேலும் மேலும்ஓங்கி வளர்கிறது.

சுருங்கக் கூறின், எண்ணங்கள் மட்டும் ஒரு பொழுதும் ஒருவனுக்கு வெற்றியையும் சந்தோசத்தையும் கொடுப்பதில்லை. நினைத்தவற்றைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அவனுக்கு மேலும் துன்பமே ஏற்படுகின்றது.

எனவே, மன உறுதியும் விடா முயற்சியுமே ஒருவனது கனவை நனவாக்கி அவனைப் பூரிப்படையச்செய்கிறது. இதுவே வாழ்க்கை வெற்றியின் இரகசியம்.

எதிர்பாருங்கள்!

'ஆறுகால் மடம்'

செங்கை ஆழியான்

எழுதும்

புதிய தொடர் கதை

தலைநகர் தெரியுமா?

கனடா—தலைநகர்—ஒட்டாவா

கானா—தலைநகர்—அக்ரா

ஜமைக்கா—தலைநகர்—கிங்ஸ்ரன்

தங்கனீகா—தலைநகர்—டாரெஸ்சலாம்

நைஜீரியா—தலைநகர்—லாகோஸ்

மலேசியா—தலைநகர்—கோலாலம்பூர்

பாகிஸ்தான்—தலைநகர்—றவால்பிண்டி (இஸ்லாமாபாத்)

நியூசிலாந்து—தலைநகர்—வெலிங்டன்

அவுஸ்திரேலியா—தலைநகர்—கான்பெரா

தொகுத்தளித்தவர்!

எஸ். ஏ. கரீம்,

கொழும்பு-12.

புதுமைகள் பாரீர் பாரினிலே-(40)

—அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை—

தாதிக்கு ஒரு துணைத் தாதி

சிகிச்சை நிலையங்களில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள கட்டில்களில் நோயாளிகள் கிடத்தப்பட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். அடிக்கடி இந்த நோயாளிகளின் உடல் வெப்பத்தை அளந்து குறிக்க வேண்டியது அவர்களைக் கவனிக்கும் தாதியின் பொறுப்பாகும்.

ஒரு தாதியின் பொறுப்பில் பல நோயாளிகள் இருப்பர். எனவே ஒரு வெப்பமானியுடன் ஒவ்வொரு கட்டிலுக்கும் சென்று நோயாளிகளின் உடல் சூட்டை அந்தத் தாதி குறிக்க வேண்டும். இப்படிப் பல நோயாளிகளைப் பார்த்து முடிப்பதற்கு ஒரு தாதிக்கு எவ்வளவோ நேரம் எடுக்கும். சிரமமும் கூட.

இப்பொழுது தாதிமார் இவ்வளவு சிரமப்படத் தேவையில்லை. வேண்டும்போது ஒரு சிறு விசையைத் தட்டிவிட்டால் போதும். இரண்டே நிமிடங்களில் பதினெட்டு நோயாளிகளின் உடல் வெப்பத்தைக் குறித்து விடுகிறது ஒரு கருவி. நோயாளியின் தேகத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் சிறு ஒலிவாங்கிகள் இந்த விபரத்தைக் கிரகித்து அந்தக் கருவிக்கு அனுப்புகின்றன. நமது புதிய ஒரு சத நாணயத்தின் அளவு சிறிய ஒலிவாங்கிகள் இந்த வேலையைச் செய்கின்றன. அதனால் நோயாளிக்கு எவ்வித அசௌகரியமும் ஏற்படுவதில்லை.

நோயாளிகளின் நாடித் துடிப்பு, சுவாசம் இரத்த அழுத்தம் முதலிய விபரங்களும் இவ்வாறு நொடிப் பொழுதில் குறிக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி தேக நிலையில் உண்டாகும் திடீர் மாற்றங்களையும் இந்தக் கருவி அபாயத்தை அறிவிக்கும் ஒலியின் மூலமே உடனுக்குடன் அறிவிக்கிறது. அபாய அறிவிப்பைக் கேட்டுத் தாதியோ வைத்தியரோ விரைந்து சென்று நோயாளியைக் கவனிக்கலாம்.

சத்திர சிகிச்சையின் போதும் இத்தகைய அபாய அறிவிப்புக் கருவிகள் மருத்துவ நிபுணர்களுக்குப் பெருந்துணை புரிகின்றன. நோயாளியின் தேகத்தில் ஓரிடத்தை வெட்டித் திறந்த பின்னர் தேகத்தின் ஏனைய பகுதிகளுக்கு ஒழுங்கான இரத்தம் ஓடுகிறதா என்று பார்த்துக் கொள்வது அவசியமாகிறது. இரத்தம் தடைப்பட்டால் அல்லது சுவாசமோ இருதயமோ இயங்க மறுத்தால் நோயாளி இறந்துவிட நேரும். எனவே, இத்தகைய தடைகள் ஏற்படுவதை உடனுக்குடன் அறிவித்து நோயாளியைக் காப்பாற்றுவதற்கு உதவுகின்றன. இந்தக் கருவிகள் இவை தாதிக்கும் மருத்துவருக்கும் ஒரு சுறுசுறுப்பான துணைத்தாதி போல் பயன்படுகின்றன.

2வது வாரமாக

இலங்கை இரசிகர்களின் உள்ளங்களை வேட்டையாடுகிறான்!

வேட்டைக்காரன்

நடிகர்கள்:
எம். ஜி. ராமச்சந்திரன், சாவித்திரி, நம்பியார், அசோகன், ராதா, நாகேஷ், மனோரமா, ராஜம்மா, சின்னப்பாதேவர், பேபி ஷகிலா

இது சாண்டோ சின்னப்பா தேவரின் தயாரிப்பு!

கிங்ஸ்லி (கொழும்பு) கெப்பிட்டல் (கம்பளித்தெரு) நவா (வெள்ளவத்தை) பிளாஸா (யாழ்ப்பாணம்) வெலிங்டன் (மட்டக்களப்பு) விஜயா
ராஜ் (நீர்கொழும்பு) தீவோலி (நுவரெலியா) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்) ஜுபிட்டர் (குருநாகல்)

2வது ஜனத்திரள் நிறைந்த வாரம்!

சென்ட்ரல் (மருதானை)
தினசரி: 2, 6, 9-30 ஞாயிறு: காலை 10 மணிக்கும்

★ ஐரோப்பிய அழகு மங்கையர் பனிக்கட்டி மீது சறுக்கி விளையாடும் காட்சியும், காட்சியுடன் இணைந்த இசையும் உங்களை மெய் மறக்கச் செய்யும்!
★ கேரளாவிலுள்ள மலபார் இயற்கைக் காட்சிகள் அழகு வண்ணத்தில் கண்டு மகிழுங்கள்!

ஈரோஸ் (பாமன்கடை)
தினசரி: 2-30, 6, 9-30 ஞாயிறு: காலை 10-30க்கும்

★ ராகினி—ஹெலன் இருவரும் ஆடும் நடனங்கள் உங்கள் உள்ளங்களை ஆட்டி வைக்கும்!
★ பயங்கர கொரில்லா 'ஒட்டாங்கோ' செய்யும் அட்டகாசங்கள் உங்களை மயிர்க் கூச்செறியச் செய்யும்!

இந்திப் படம் **சிக்காரி** ஈஸ்ட்மன்கலர்

அஜித்—ராகினி—ஹெலன்—கே. என். சிங் மற்றும் பலர்
காதலும் வீரமும் இணைந்து கண்கொள்ளா விருந்தாக அமைந்துள்ள அருமையான சித்திரம்!
குடும்பத்துடன் சென்று பார்த்து மகிழ வேண்டிய திரை ஓவியம்!!

விரைவில் எதிர்பாருங்கள்! சிலோன் எண்டெர்டெயின்மெண்ட் தாபனத்தாரின்
அடுத்த திரை விருந்து!
இனிமையான பாடல்கள்! புதுமுகங்களின் வியத்தகு நடிப்பு!
இதுவரை தமிழ்ப் படங்களில் காணாத சண்டைக் காட்சிகள் கொண்ட அருமைச் சித்திரம்!

வெற்றி முரசு கொட்டும் 2வது வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்சி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நீகல் (நீர்கொழும்பு) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (குருணாகல்) நீகல் (கம்பளை)
ஆகிய திரைகளில்!

சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி,
மனோகர், சாரங்கபாணி, தேவிகா, கண்ணாம்பா,
ராமசாமி, சந்தியா, தங்கவேல், மனோரமா, லட்சுமிபிரபா
நடித்த

குலமகள் ராதை

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரான [illegible] பு [illegible] டாரநாயக்க வீதி, 194 ஏ, [illegible] 1965-ம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை [illegible] பிரசுரிக்கப்பட்டது.